
# அண்ணாவின் சொல்லாரம்



# அண்ணாவின் சொல்லாரம்

தமிழக முதல்வர்

**அறிஞர் அண்ணா**

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

அன்பு நிலையம்
13, பிராட்வே, சென்னை-1

முதற் பதிப்பு:
ஏப்ரல் 1968

விலை ரூ. 2-00

தயாரிப்பு:
K. R. நாராயணன்.

ராயன் அச்சகம், சென்னை-1.

# பதிப்புரை

சந்தையில் கூடுகின்ற மக்களிடத்தில் சாக்ரடீஸ் அறிவுரை சொன்னார்.

கேட்டவர் சிலர் ; கேளாதவர் பலர். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு அவரது கருத்துக்கள் தத்துவமாக ஒளிவீசுகிறது—உலகத்தின் பாராட்டைப் பெறுகின்றது.

அன்று பத்துப் பேருக்கு முன்னால் சாக்ரடீஸ் சொல்லிய கருத்துக்கள் வெற்றி பெற்றதா என்றால், இல்லை.

ஆனால்... இங்கு பத்து லட்சம் மக்களுக்கு முன்பு தன் அறிவுக் கருத்துக்களைச் சொல்லுகிறார் அண்ணா ; சொல்லமட்டுமல்ல – வெல்லவும் செய்கிறார்.

அறிவு மழையை-வையத்துக்கு விருந்தாக்கிய தென்னாட்டு காந்தி அண்ணா அவர்களுக்கு தமிழினம் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது.

அறிஞரின் அழகிய சொற்களை, சொல்லாரமாகத் தொகுத்துத் தந்திருக்கிறார்— அண்ணா கவியரங்கில் 'அண்ணா தத்துவ மேதை' என்ற தலைப்பில் கவி மழை பொழியும் என் நண்பர், கவிஞர் தமிழ்ப்பித்தன் அவர்கள். அவருக்கு என் நன்றி.

அன்பன்,

**கே. ஆர். நாராயணன்**

# தொகுப்புரை

குன்றிலும் கடலிலும் சிப்பியின் வயிற்றிலும் பாறையின் இடத்திலும், இன்னும் எங்கெங்கோ காணப்படும் ஒன்பது வகை உயர்மணிகள் நவரத்தின மாலையாக மாறிவிடுகிறது.

தூய வெண்மை நிறம் -மரகதப் பச்சை நிறம்-செந்நிறம்- இளஞ் சிவப்பு நிறம்- இப்படி பல வண்ணங்களில் மலர்கின்ற பல்வகை மலர்கள் கதம்ப மாலையாக உருமாறி விடுகிறது.

அதுபோல, தமிழகத்து முதல்வர் — தமிழினத்தின் தலைவர் - காக்கும் கரங்களினால் தமிழகத்தைக்காக்கத் தொடங்கிய பிறகு - மொழிந்த 'திருவாசகம்' நம்மை யெல்லாம்-நம் உள்ளத்தை எல்லாம் - உலகை எல்லாம் உருக்கும் அருள்வாசகமாக விளங்குகிறது. அந்த வாசகங்களில் சிலவற்றை - சொல்மாலையாக்கி - சொல்லாரம் என்ற தலைப்பில் தொகுத்திருக்கிறேன். சொல்லாரத்தின் மணம்- தமிழ் மக்களின் மனத்துக்கு மட்டுமல்ல, வாழ்வுக்கும் இனிமை பயக்கும்.

அறிவுக் கருவூலத்தை அவனிக்கு அளித்த அறிஞர் துதிக்கப்படவேண்டியவர்.

அவர்தம் கருத்துக்களை மாலையாக்கித் தருகின்ற அரும் பணியை என்னிடம் ஒப்படைத்த என் உயிர் நண்பர் கே. ஆர். நாராயணன் என்றும் என் நன்றிக்கு உரியவர்.

அன்பன்,

**தமிழ்ப்பித்தன்**

# காந்தியும் காந்தியமும்

## காந்தியாரால் லாபம் அடையாதவன் நான்

இராமலிங்க அடிகள் வாழ்க்கைக்கும் காந்தி அடிகள் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்த நாட்டில் இல்லாத கருத்துக்காக நாம் எந்த நாட்டிலும்-எந்த மொழியிடத்திலும் கடன் வாங்காத அளவுக்கு இங்கே கருத்துக்குவியல் உண்டு.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மொழிக்கு இலக்கணம் வகுத்து, இல்லறம் எப்படி இருக்கவேண்டும், துறவறம் என்ருல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எல்லாம் நம்மிடத்திலே கருத்துக் குவியல் நிரம்ப உண்டு,

பாங்கிகளுக்கெல்லாம் தலைமை பாங்கியான ரிசர்வ் பாங்கியில் பணம் நிரம்பி இருப்பதைப்போல நம்மிடத்தில் கருத்துக் குவியல் நிரம்ப உண்டு. ரிசர்வ் பாங்கி முன்னுல் நின்று கொண்டு ஆகா எவ்வளவு பணம் இருக்கிறது என்று வயிற்றை தடவினுல் பசி நீங்காது. பாக்கெட்டில் இருக்கும் பணத்தின் அளவுக்குத்தான் பசி நீங்கும்.

நம்மிடம் ஏராளமான கருத்துக்கள் இருந்தும் நாம் ஏன் இந்த நிலைக்கு வந்தோம்? அதைத்தான் நாம் ஆராயவேண்டும்' இதைச் செய்வதால்தான் என்னை அழுக்கானவனுக அருவருக்கத்தக்கவனுக சிலர் நினைக்கிருர்கள். விரலில் போட்டுக்கொள்கிற மோதிரம் காணுமல் போய்விட்டால், சேற்றிலே விழுந்து விட்டால் தேடி எடுக்கும்போது கையிலே சேறு ஒட்டிக்கொள்ளும். அதனுல் சேறு என்று ஒதுக்கிவிட முடியாது. யாராவது அவர்களைப் பார்த்துச் சேற்றிலே இருப்பவன் என்று சொன்னுல் அவர்கள் எண்ணத்திலே இருக்கிற சேற்றுக்கு நாம் பரிதாபப்பட வேண்டும். அந்தச் சேற்றை நீக்குவது எப்படி என்பதில் நாமெல்லாம் கவனம் செலுத்த வேண்டும்.

இராமலிங்க அடிகளைப்போல சிலர் தலையில் துணி போட்டுக் கொள்வதால் அவரைப்போல புறத்தோற்றத்தைப் பெற்றுக்கொள்வதாகக் கருதுகிறார்கள். புறத்தோற்றத்திலே காட்டுகிற அக்கறையை மனதில்—உள்ளத்தில் — செயலில் நாம் கொண்டுவருகிறோமோ என்றால் உபச்சாரத்திற்காக சரி என்று சொல்லச் சொன்னால் சொல்கிறேன். உண்மையில் அது இல்லை. போன வருஷம் கொடுத்த ரயில் டிக்கட் அளவிலும்—நிறத்திலும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு இந்த வருஷம் போக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதைப்போல நாம் காலத்தை வைத்து கருத்துக்களை கணக்கிடவேண்டும்.

நாம் இன்னமும் நம்மிடத்தில் தரப்பட்ட கருத்துக்களைப் புரிந்துகொள்ள ஒரு தலைமுறை போதுமா என்றால் போதாது. கிறிஸ்தவர்களைப் பற்றி அறிந்துகொள்ள ஒரே ஒரு நூல் பைபிள் இருக்கிறது. முஸ்லிம்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் மதத்திற்கு புனிதமான ஒரே ஒரு நூல் குரான் இருக்கிறது.

இந்த நாட்டில் ஜாதி வந்த காரணம் என்ன? பெருமையோடு சொல்கிறோம்- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் வள்ளுவர் சொல்லிவிட்டார் என்று ஐரோப்பாவில் போய்ச் சொற்பொழிவாற்றுகிறார்கள். அப்படி அங்கே கூறிய பின் உங்கள் பெயர் என்ன என்றதும் கோதண்டபாணி செட்டியார் என்று சொன்னால் அது எப்படிப் பொருத்தமாகும் என்று கேட்கிறோம்.

நாம் கருத்துக்கள் அற்றுத் தவிக்கவில்லை. இருப்பதில் எதை பயன்படுத்துவது என்று தெரியாமல் தவிக்கிறோம். நம்முடைய எண்ணங்கள் விரிவடைந்து இருக்கின்றன. ஆனால் நல்லதற்கா—கெட்டதற்கா என்று நான் சொல்லவில்லை. அளவு—வகை—வேகம் மூன்றும் அதிகமாக இருந்தும் எதை எதை எதற்காக பயன்படுத்த வேண்டுமென்று அறிந்துகொள்ளவில்லை.

ஆனால் நம்மிடத்தில் நிரம்பத் தரப்பட்டு இருக்கிறது. எண்ணி—எண்ணி, எழுதி எழுதி—எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. எதை ஏற்றுக்கொள்வது என்று புரியாமல் இன்று இருக்கிறோம்.

என்னைச் சந்தித்த சிலர் "உங்களையா அழைத்தார்கள், காந்தியாரைப்பற்றிப் பேச" என்று கேட்டார்கள்.

காந்தியாரால் லாபம் அடையாதவர்களில் நான் ஒருவன். காந்தியாருடைய கொள்கைக்கு விரோதி என்றுகூட சிலரால் கருதப்பட்டவன். அதனால் கிடைத்திருக்கக் கூடிய லாபங்களைக்கூட இழந்தவன் என்பதை நண்பர்கள் அறிவார்கள். என்னைவிட அவர் பெருமைபற்றிச்சொல்ல வேறு யாரும் இருக்க முடியாது. மகாலிங்கம் சொல்லுகிறார் என்றால் காந்தியாருடைய பெருமையால் அரசியலில் ஏற்றம் பெற்றவர்.

இதைக் கூடச் செய்யாவிட்டால் வேறு என்ன பெருமை இருக்கிறது ? வள்ளலாருடைய எளிய தோற்றத்தில் எனக்குப் பற்று உண்டு. எளிய தமிழில் எதைஎதையோ சொல்ல நினைத்தார். யாருக்குச் சொல்ல நினைத்தார்? எளியவர்களுக்கு, ஏழைகளுக்குச் சொல்ல நினைத்தார். அதனால் எளிய தமிழில் கூறினார்.

பூமியில் உள்ள தங்கம் அத்தனையும் நகை செய்ய முடியாது. தேவையான அளவு கொடுத்து நகை செய்யச் சொல். அதுபோல நம்மிடத்தில் ஏராளமான கருத்துக் குவியல் இருந்தாலும் தேவையானதைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

காந்தியாரின் பொருட் காட்சியை நான் பார்வையிட்ட போது காந்தி கிராமத்தைச் சார்ந்த இராமச்சந்திரன் என்னைப் பார்த்து "நீங்கள் காந்தீய வழியில் நடக்கவேண்டும்" என்று கூறினார்.

நான் நெடுங்காலத்திற்கு முன்பே காந்தியத்தின் நல்ல கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவன்.

காந்தீயம் எந்த இடத்திற்குச் சொந்தமாக இருந்ததோ, அந்த இடத்தை விட அது மற்றவர்களின் இடத்தில்தான் பெருமை பெற்றிருக்கிறது.

காந்தீயத்தோடு காங்கிரசைச் சேர்த்து எண்ணுவது பெரும்பாலோர் வாடிக்கை. வாடிக்கை என்றுதான் சொன்னேனே தவிர, அது உண்மை என்று சொல்லவில்லை.

ஏனென்றால் காந்தீயத்தோடு காங்கிரசைச் சேர்த்துப் பார்ப்பது பொருத்தமானது; எதிர்பார்க்கத் தக்கது. ஆனால் அந்த காங்கிரசிலிருந்து மாறுபட்ட எதிர்க்கட்சிகளும் காந்தியத்துக்கு மரியாதை காட்டுவதுதான் பெருமை உடையது.

## காந்தீயம்
## தத்துவமாகி விட்டது !

ஏனென்றால் காந்தியம் என்பது இப்போது தத்துவம் ஆகி விட்டது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

15 ஆண்டுகளுக்கு முன்பு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில் காந்தியார் சிலையை நான் திறக்க வேண்டுமென்று அந்த நகராட்சியினர் தீர்மானம் போட்டனர். அப்போது அந்த நகராட்சி தி. மு. கழகத்திடம் இல்லை.

இராசாசி அவர்கள் அரசாட்சி செலுத்திய காலம் அது வேறொரு தீர்மானத்தைப் போட்டு சில காங்கிரஸ்காரர்கள் " அண்ணாதுரையா காந்தி சிலையைத் திறப்பது ? அப்படிச் செய்தால் அமளி நடக்கும்" என்று மிரட்டினர். ஆனால் வேலூர் நகராட்சி மீண்டும் தீர்மானம் போட்டது. உடனே ஒரு காங்கிரசுத் தலைவர் இராசாசியைப் பார்த்து "இதற்கு அனுமதித்தால் அமளியை ஏற்படுத்துவோம்" என்றார்.

ஆனால் இராசாசி "காந்தியாரைக் காங்கிரசார் பாராட்டுவதில் பெருமையில்லை. எதிர்க் கட்சியினர் பாராட்டுவதில்தான் பெருமை. அப்போதுதான் அவர் மகாத்மா" என்றார். ஆனால்

அந்தக் காங்கிரஸ் தலைவர் அமளி நடத்தியே தீருவேன் என்ருர். இராசாசி அவர்கள் தனக்கே உரிய பாணியில் "நீங்கள் வேலூருக்குப் போனல்தானே?" என்ருர்.

"என்ன சொல்கிறீர்கள் ?" என்று கேட்டார் காங்கிரஸ் தலைவர்.

"உங்களை நான் வேலூருக்கு விடப்போவதில்லை. ஐ. ஜி-க்குப்போன் செய்து சென்னையிலேயே வைக்கப் போகிறேன்" என்ருர்.

உடனே அந்தக் காங்கிரஸ் தலைவர் பதைபதைத்தபடி, "ஐயோ அது மட்டும் வேண்டாம்" எனக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பின்னர் வேலூருக்குச் சென்று நான் காந்தி சிலையைத் திறந்து வைத்தேன்.

இதை நான் ஏன் கூறுகிறேன் என்ருல் காந்தீயத்தை வெளி நாட்டவர்கள் பாராட்டுவதை வரவேற்கும் போது எதிர்க் கட்சியினர் பாராட்டுவதையும் வரவேற்க வேண்டும் என்பதற்காகத்தான்.

காந்தீயம் என்பது தத்துவமாகிவிட்டபோது அதை ஒரு கட்சியுடன் இணைக்காமலிருந்தால் இன்னும் அதற்கு முழுமதிப்புக் கிடைக்கும்.

நானும், நான் சார்ந்திருக்கிற கட்சியும், அதன் ஆட்சியும் காந்தீய வழிப்படி மக்களுக்கு எது எது தேவையோ அவற்றை முடிந்த அளவு நிறைவேற்றுவோம்.

குடிப்பதை தீங்கென்று நீண்ட நெடுங்காலமாகவே நமது மக்கள் கருதி வந்திருக்கிருர்கள்.

குடித்துவிட்டுவந்து தங்களது மனைவி மக்களையே தாக்கியவர்கள் பற்றிய பல கதைகளை நான் அறிவேன். அத்தகையவர்களிடம் அடிபட்ட பெண்களின் கதறல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அது ஒலித்துக் கொண்டிருக்கும் வரை மதுக்கடை ஒன்று கூடத் திறக்கப்படுவதை நான் அனுமதியேன்.

மதுக் குடியில் சிக்கிச் சீரழிந்த குடும்பங்கள் ஏராளம். அந்தத் துன்ப துயரங்களை என் போன்றவர்கள் அறிவோம்.

இன்று என் மகனைப் பார்த்து மகனே கள்ளுக்கடைகளில் என்ன நடக்கும் தெரியுமா என்றால் தெரியாதென்று விழிக்கிறான்.

மதுவின் கொடுமையையே அறியாத ஒரு புதிய தலைமுறையை நாம் வளர்த்திருக்கிறோம்! இதை நாம் மறப்பது கூடாது. இத்தகைய ஒரு அருமையான தலைமுறையை—புதிய சமுதாயத்தை இழக்கச்சொன்னால் அது ஒரு நாளும் நடவாது.

எனது நண்பர் ஒருவர்—மதுப்பழக்கமற்ற உண்மை நண்பர் என் மீதுகொண்ட அன்பினால் மதுக்குடியை அனுமதித்தால் தமிழக அரசு டில்லியிலிருப்பவர்களிடம் உதவிகேட்கும் சங்கடத்திலிருக்க வேண்டியிராது—அதன் வருவாய் கணிசமாக உயரும் என்று தெரிவித்து எனக்கு எழுதியிருந்தார்.

அவர்கள் என்ன தான் உள்ளபூர்வமாகச் சொன்னாலும் அவர்கள் மதுவின் தீமையை உணராதவர்கள். மதுக்குடியால் சீரழிந்த குடும்பங்களின் துயரத்தை அறியாதவர்கள்.

நெடுங்காலத்துக்கு முன்பே தமிழகத்தில் மதுக்குடி ஒழிப்பு இயக்கக் கூட்டங்களை நடத்தியது நீதிக்கட்சி. அந்தக் கட்சியைச் சார்ந்தவனாக நான் இருந்தேன் என்பதை எண்ணி இந்த ஒரு கணம் நான் மகிழ்கிறேன்—அப்போது அந்த இயக்கத்தின் பேச்சாளர்களாக இருந்தவர்கள் பின்னர் காங்கிரஸ், மற்றும் கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளில் சேர்ந்து சிறப்பை அடைந்தார்கள்.

## மதுவிலக்கில்
## காங்கிரசின் நிலை என்ன?

இங்கே என்னிடம் அதிக மது ஒதுக்கும்படிக் கேட்டு அயல் நாட்டார் பலர் வருகிறார்கள். இதர இந்திய மாநிலங்களில் மது தாராளமாகக் கிடைக்கும்போது இங்கு மட்டும் ஏன் இத்தனைக் கடுமை என்று கேட்கிறார்கள். அத்தகையவர்களுக்கு பதிலளிக்க உதவும் வகையில் காங்கிரசின் கொள்கை என்ன என்பதை விளக்கட்டும். காங்கிரசல்லாத ஆட்சிகள் மதுவிலக்கைக் கடைப்பிடிக்கும்போது காங்கிரஸ் ஆட்சிகள் நடைபெற்று வருகிற மாநிலங்களில் மெல்ல மெல்ல அக்கொள்கை கைவிடப்படுவதேன் ?

இது எனது முணுமுணுப்பல்ல – இதயத்திலே கசிகிற ரத்தம் தோய்ந்த கேள்வி. மதுவிலக்குக் கொள்கையைத் தொடர்ந்து சிறப்புடன் கடைப் பிடித்து வரவே இதைக் கேட்கிறேன்.

காங்கிரஸ்காரர்களை நான் கேட்கிறேன், மதுவிலக்கில் உங்கள் கொள்கை என்ன ? திட்டவட்டமாகச் சொல்லுங்கள். ஷேக்ஸ்பியரின் நாடகத்திலே வரும் ஹாம்லெட்டைப் போல, இருப்பதா ? இறப்பதா ? என்ற சஞ்சலபுத்தி வேண்டாம். தீர்மானியுங்கள்; அதை உடனே செய்யுங்கள்.

குடிமூலம் வருமானம் பெறுவதற்குப் பதில் அந்தப் பணம் போகும் சினிமா, நாடகம், சுற்றுலா போன்றவைகளிலிருந்து வசூலித்துக் கொள்கிறேன். மதுவிலக்கை ரத்து செய்வதால் புதிதாகப் பணம் எதுவும் வந்துவிடப்போவதில்லை. அதே வருவாய் தான் வேறு துறைகள் மூலம் கிடைக்கிறது.

மகிழ்ச்சி வரிமூலம் (தமாஷாவரி) மட்டும் 1967–68–ல் அரசாங்கம் எதிர் பார்க்கும் வருமானம் ஆறரைக் கோடி ரூபாயாகும்.

மதுவிலக்கு, விசைத்தறி ஆகிய இரண்டிலும் இந்திய அரசு நாடு முழுவதும் ஒரேவிதமான கொள்கையை அமுலாக்க வேண்டும்.

சில அண்டை மாநிலங்களில் மதுவிலக்கைத் தளர்த்த நடக்கும் முயற்சிகளில் மத்திய அரசு தனது கடமையைச் செய்யவில்லை.

எல்லாக் கட்சிகளும் ஏற்று நடத்தவேண்டிய காந்தீயக் கோட்பாடுகளில் ஒன்ருக மதுவிலக்கை ஒப்புக் கொண்டிருக்கிரேம்! சென்னை அதை உள்ளத்தூய்மையுடன் சட்டபூர்வமாக்கி வருகிறது!

எனவே மற்ற மாநிலங்களும் மதுவிலக்கை அமுல் நடத்தச் செய்வது தான் மத்திய அரசின் கடமை. அண்டை மாநிலங்கள் தளர்த்திஞல் இங்கிருப்பவர்களுக்குச் சபலம் ஏற்படுகிறது. அதஞல் பிரச்சினைகளும் கிளம்புகின்றன.

இது நாணயமாக நடப்பவனுக்குத் தண்டனையும் அக்கிரமக்காரனுக்குப் பரிசும் கொடுப்பது போலிருக்கிறது.

மதுவிலக்கு ஒரு பெரிய சமுதாயநலத் திட்டம் என்பது என் கருத்து.

அதஞல் மக்கள் எவ்வளவோ நன்மையடைந்திருக்கிருர்கள் என்பதை மறுக்க முடியாது; மறைக்கவும் முடியாது.

குடித்துவிட்டுத் தெருக்களில் குத்துச்சண்டை போடுவதையும் வீடுகளில் பெண்களை அடிப்பதையும் நான் சின்ன வயதில் பார்த்திருக்கிறேன். மதுவிலக்குக் கொண்டு வந்ததால் அவை யெல்லாம் மறைந்தொழிந்து விட்டன. பெண்களெல்லாம் வீட்டில் மகிழ்ச்சியுடன் இருக்கிருர்கள்.

தமிழகத்தில் மதுவிலக்கு இருக்கிறது; ஆந்திராவில் கள்ளுக் கடைகளைத் திறக்கப் போவதாகப் படித்தேன். பம்பாயில் அரசாங்கமே பீர்க்கடை திறந்திருக்கிறது!

இதையெல்லாம் படிக்கிற மக்கள் "என்ன இந்த அண்ணாதுரை ; காந்தியின் நேர் வாரிசா ? மற்றவர்களுக்கு இல்லாத காந்தி பக்தி இவனுக்கென்ன வந்தது ? பாவி—கள்ளுக் கடைகளைத் திறக்கமாட்டேன் என்கிறானே "—என்று கூறுகிறார்கள்.

அந்த மக்கள் மீது எனக்குக் கோபம் வரவில்லை. முழுக்க முழுக்க இந்திய அரசாங்கத்தின் மீது தான் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

தமிழகத்தில் நாம் மதுவிலக்குக் கொள்கையை அமுல் படுத்துகிறோம். அதனால் 30 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

இருந்தாலும் மூன்று கோடி மக்களுக்கு அவர்களது இல்லங்களில் சந்தோஷம் நிலவட்டும், தர்மம் நிலைக்கட்டும் ; அமைதி தழைக்கட்டும் என்பதற்காக மதுவிலக்குக் கொள்கையை கடைப்பிடிக்கிறோம். இதற்காக 30 கோடி ரூபாயை இழக்கிறோம்.

ஆனால் இப்படிக் கஷ்டப்படும் தமிழகத்திற்கும் பாராட்டு; பீர்க்கடை திறக்கும் பம்பாய்க்கும் பாராட்டு என்றால் என்ன பொருள் ?

## வேண்டாம்
## 'விழாக் காலத்துப்' பேச்சு

பிறகு—காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒற்றுமை இருக்க வேண்டும் என்ற பேச்சு—விழாக் காலத்துப் பேச்சாகத்தான் போய் விடும் !

மதுவிலக்கு உண்டு என்றால் இந்தியா முழுவதும் உண்டு. இல்லை கள்ளுக்கடையைத் திறக்கிறோம் என்றால் இந்தியா முழுவதும் திறந்து விடுங்கள்.

அப்படிச் செய்வதற்கு முன் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். ஏனென்றால் அந்தச் சட்டத்தில் மதுவிலக்கைப் பரப்ப வேண்டும் என்று ஆணைக் கொள்கை (Directive Principle) இருக்கிறது.

அந்த அரசியல் சட்டத்தின் பேரில்தான் நாம் ஆணையிட்டு அதன்படி நடக்க உறுதி கூறியிருக்கிறோம்.

அதன்படி நடப்பதாயிருந்தால் மற்ற மாநிலங்களிலும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவரட்டும்.

இந்த மதுவிலக்குக் கொள்கையையும் கைத்தறிக் கொள்கையையும் கடைப்பிடிப்பதால் தமிழக அரசுக்கு ஏற்படும் கஷ்டத்தை, நஷ்டத்தை ஏற்க மத்திய அரசு முன் வர வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கையை இவ்வளவு கஷ்டத்திலும் கடைப்பிடிப்பதற்காக— காந்தீயக் கொள்கையைக் காப்பாற்றுவதற்காகவாவது மத்திய அரசு பரிசாக ஒரு தொகையை அளிக்க முன்வரவேண்டும்.

## மாசு துடைக்க வந்த மாபெரும் மகான்

உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்தநாள், நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது, அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்.

அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும்— அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும்— பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

**அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்— என்பாரும்;**

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஓர் வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர் என்பாரும்;

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைபங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இது போல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டிய ஒரு பிரச்சனையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தி அடைய விரும்பினால், அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்து விடத் தோன்றும்.

ஆனால், அரசியல் துறையிலே மட்டும் அரும் பெரும் வெற்றி பெற்று, மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்ல.

அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத் தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு

அல்ல ! எல்லாத்துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத்துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்க வேண்டும்,

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்கு காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவே தான் காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த நற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

மகான்கள், மாவீரர்கள்- ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதில், பூஜைகள் நடத்துவதில், வல்லவர்கள் நாம் !

ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ, எவருடைய திருநாமத்தை பூஜிக்கிறோமோ, எவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோமோ அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கிறோமா என்றால், இல்லை என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற முடிகிறது.

இன்று ராட்டை சுழலுகிறது—நாளை ? எத்தனை பேர்?—

இன்று சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம். நாளை ?

இன்று வகுப்பு ஒற்றுமை பற்றிப் பேசுகிறோம், எழுச்சியுடன்—நாளை ?

இன்று கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது, என்று உணர்ந்து பேசுகிறோம்-- ஆனால் மறுநாள் ?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிறநாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல- அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிட !

மாலையின் மாண்பு, மணத்தில் ! விளக்கின் பயன் ஒளியில் ! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது !

அவருடைய பிறந்த நாள் நாமெல்லாம் நற்கருத்தும், சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும்.

அதற்கான முறையில் நாம் நடந்து கொள்கின்றோமா என்ற கேள்வியை எழுப்புகிறேன் — நம்முன் உள்ள மிகப் பெரிய கேள்வி அது.

மகான்களையும், மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம் என்றேன்; அவர்கள் புரிந்த அற்புதங்களை, மகிமைகளை, காதைகளாய், கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிகவும் வல்லவர்கள்.

அவர் கடலை அடக்கினார் : காற்றை விரட்டினார்; கருநாகத்தை மாலையாக அணிந்தார் : கந்த மூலமே அவருக்கு உணவு ! தொட்டார், பட்டமரம் துளிர்த்தது ! பார்த்தார் ! மலடி தாயானாள்! குருடன் பார்வை பெற்றான்—இப்படிப் பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு, நம் நாடு!

இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது ? அவர் மகான், ஆகவே அப்படிச் செய்தார். நாம் சாமான்யர்கள், நம்

மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய? என்று பேசி, நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக் கொள்ளவே அது மெத்தவும் பயன் படுகிறது.

அந்த முறையிலே காந்தி அடிகளின் பிறந்த நாளை நடத்துபவர்களாக நாம் இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன்.

## பாராட்டுப் போதாது பணிசெய்ய வேண்டும்.

அவரை அவதார புருஷர்களிலே ஒருவர், பூஜைக்கு உரியவர், அவர் பிறந்த நாளன்று அவர்பற்றிய மகிமையை, அற்புதத்தைப் பேசுவது போதும் என்று இருந்திடாமல்; அவர் காணவிரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக் காட்டிய இலட்சியம், அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை நினைவிலே கொண்டு, அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால் ஊமைகளாய் இருந்து வந்த மக்களைப்பேச வைத்தார்; உரிமைமுழக்க மிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடை பல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார்.

'அஞ்சி அஞ்சிச் சாவார்! அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே, என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினாரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில், சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்– நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினார். நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார்!

போர் முகாம் அமைத்து அல்ல, எளிய குடில் அமைத்து; வெட்டச்சொல்லி அல்ல, வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடந்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல; அன்பினை ஊட்டி;

மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல, இன்று கதை கூறுவோர்? காந்தி அடிகள் நடாத்தின அற்புதத்தை நாம் நமது கண்களால் கண்டோம்.

அந்த-அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட "அற்புதம்" வேறு என்ன இருக்க முடியும்!

"இவரா இந்தியாவின் தலைவர்?" என்று எள்ளிநகையாடியவர்கள் அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு "இவரன்றோ தலைவர்!" என்று புகழ்ந்தனர்! இந்நாட்டுக்கு மட்டுமல்ல அடிமைத்தளை உடைத்திட விரும்பும் எந்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று இன்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

"இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு; பொன்னும் பொருளும் மிக உண்டு; போக்கறியாதார் நிரம்ப உண்டு!" என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது.

பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது, "இந்தியா என்றோர் நாடுண்டு. அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு!" என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது.

விடிவெள்ளி தோன்றுவது போல திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும் காந்தி அடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே "இந்தியா

என்றோர் நாடுண்டு ; அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு !'' என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது.

காந்தி அடிகளின் புகழொளிமூலமே உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது.

அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய விதமாக இல்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளால் தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச் செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது.

## மண் குடிசை மன்னர்

அவருடைய பொதுப்பணியிலே ஒருகடுமையான சொல் ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத்திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று. அவருடைய மொழியைக்கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவரது மண் குடிசையிலே தங்கினால் அது மதிப்பளிக்க கூடியதென்று மன்னர்கள் எண்ணினர்.

'சுயராஜ்யம்' பெற்றளித்து விட்டால் போதும் என்று அவர் கருதவுமில்லை—கூறவுமில்லை. நாடும் மக்களும் எப்படி இருந்திடவேண்டும் என்பதனை அவர் கூறாமலுமில்லை.

'சுயராஜ்யம்' — ஓர் இலட்சியத்துக்கு வாய்ப்பு என்றே அவர் கருதினர்; "ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது; ஆனல்-கடைசி ஏடு அல்ல!" என்பதை வலியுறுத்தினர்.

நாடும் மக்களும் எந்த நிலை பெறவேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது. ஆகவே அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினர்.

## அடிமைத் தளையை ஆண்ணல் ஒழித்தார்

அடிமைத்தளை அகற்றப்பட்டது, ஆனல் அவர் எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந்திட வேண்டும் என்று கருதினரோ, அந்த நிலையை ஏற்படுத்திவிட்டோமா? இல்லை என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை. ஏற்படுத்தியாகவேண்டும் என்ற உறுதியைப் பெற்றிட இந்நாள் உணர்ச்சி அளித்திட வேண்டும்.

அச்சம் அகற்றினர்-ஆங்கில அரசிடம் கொண்டிருந்த அச்சத்தை! ஆனல், அச்சம் பிற துறைகளிலே இருந்து அகன்றதா? இல்லையே! சமுதாயத்தில் மேலோர்-கீழோர், செல்வர்-வறியர், எளியோர்-வலியோர் என இருக்குமட்டும், அச்சம் எங்ஙனம் அகலும்?

பசி அச்சுறுத்துகிறது! பற்றுக் குறை பயமூட்டுகிறது! குரோத உணர்ச்சி விரட்டுகிறது! அச்சம் அகலவில்லை. அச்சம் அகலவேண்டும்; அறநெறி தழைக்க வேண்டும்; அண்ணவின் பிறந்த நாள் விழா நடாத்திடும் போது, இதற்கான உறுதி பெற்றிட வேண்டும்.

ஒரு புறம் செல்வர்; அதனைச் சூழ வறுமை!

ஒரு புறம் பளபளப்பான பட்டினங்கள், கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புறங்கள்.

ஒருபுறம் தொழிற் கூடங்கள்; மற்ெருரு புறம் வேலையில்லாதார் கூட்டம்.

ஒருபுறம் அறநெறி நிலையங்கள், பிறிதோர் புறம் சுரண்டல் காரர்கள், சூது மதியினர், பதுக்கல்காரர், கள்ளச் சந்தையினர்.

கொலையும் களவும் சூதும் குடியும், நிரம்பிய இடம், நாடு அல்ல; காடு—காடு கூட அல்ல; அங்கு மது விற்பதற்காக ஓர் ஏற்பாடும் இல்லை. கொடுமையை மறைத்திட பட்டாடை இல்லை. பாதகத்தைச் செய்தும் தப்பித்துக் கொள்ள பணம் எனும் ஆயுதம் இல்லை;

காந்தி அடிகள் இந்தியாவை, மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினுர்—சூதற்ற, சுரண்டலற்ற, வகுப்புப் பேதமற்ற, நாடாக ஆக்க விரும்பினுர். அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் காணும் நாடு எத்தகைய நிலையில் இருக்கிறது.

வகுப்புக் கலவரம்

தீண்டாமைக் கொடுமை

வலியோர் சிலர் எளியோர் தமை வதைபுரியும் கொடுமை.

கலாம் நெளியும் நகரங்கள்

கவலை ததும்பும் கிராமங்கள்

அரசியற் சூதுகள்

சமுதாயச் சதிகள்- ஆகிய எல்லாம் நெளிகின்றன; அடக்குவார் எவர் உளர் என்று கொக்கரித்தபடி.

ஜனநாயகம் நடக்கிறது—மொழி ஆதிக்கச் சண்டை கூட ஓயவில்லை.

காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்! கள்ளுக்கடை ஒழிப்பிலே கூட வெற்றிகாணுமல், கடைகளைத் திறந்து வைக்கவும் துணிந்த நிலையில்! காந்தி அடிகள் மகான்,

அற்புதம் நடத்தினர், மறைந்தார் என்ற முறையிலே எண்ணிக் கொள்கிற வரையில், இந்த நிலை மாருது.

காந்தி அடிகள் மறையவில்லை. நம்முன் இருக்கிருர். நம்முடன் கலந்து விட்டார் என்று எண்ணுதல் வேண்டும் அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை ; அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்று உறுதி பிறந்திட வேண்டும்.

## மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம்

மறைந்த காந்தி அடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும். அவர் இறவாப் புகழ் பெற்ருர் என்பதனை எடுத்துரைக்கும் நாள்மட்டுமல்ல இது. அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள் ; எனவே அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதிபெற !

அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு அன்னிய அரசு வெருண்டோடிற்று ; ஆனல் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன.

பொய்மையும், கயமையும், கல்லாமையும் இல்லாமையும் சாதிப்பித்தமும் வகுப்பு மாச்சரியமும்

வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும்,

தூய்மையும் வாய்மையும் அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும்,

நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திட வேண்டும். அதற்கே இன்று காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிருேம்.

" பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த சாதி என்பதே இருக்கக்கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்னியோன்யமாய் வாழவேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன் "

இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம் என்று பண்டித ஜவஹர்லால் நேரு கூறியதை நினைவு படுத்துகிறேன்.

## கதர்த்தத்துவம் நிரந்தரமானதல்ல.

தமிழகத்து வியன்பொருள்களைப் போலவே உலகின் வேறு பல நாடுகளிலும் செய்திறனால் உருவான பொருள்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகின்றது,

இங்கிலாந்து நாட்டில் கம்பளங்கள் இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் இவற்றில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் சிறுபான்மையோர். நூற்றுக்கு ஒருவர் ஆயிரத்துக்கு ஓரிருவர் என்றே இருப்பர். விஞ்ஞானத் தொழில் வளர்ச்சி அடைந்திருப்பதால் அங்கு நிரம்பவேலை வாய்ப்புகள் உள்ளன. அந்த நிலை இங்கு இல்லை, அந்த நிலை இன்னும் நமக்குக் கிட்டவில்லை என்றுதான் சொல்வேன், தேவையில்லை என்று நான் சொல்லவில்லை, மகாத்மா காந்தியும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

உள்ளம் நெகிழ்ச்சி அடையும் உத்தம குணம் படைத்த காந்தியடிகள் நாட்டைச் சுற்றிப் பார்த்து வேலை வாய்ப்புக் குறைவினால் மக்கள் பட்ட அவதியைக்கண்டு அவர்நிலை உயர கதர் இயக்கம் தோற்றுவித்தார். விஞ்ஞானத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும்போது கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோரது எண்ணிக்கை குறையும். பொருளாதார நீதி

கிடைக்குமென்றால் காந்தியார் ஒப்பியிருப்பார். கதர் இயக்கத்தை அவர் துவக்க அடிப்படைக் காரணமே மனிதாபிமான உணர்வேயாகும்.

கையினால் செய்யப்பட்ட பொருள்கள் வாய்ப்பும் வசதியுமுள்ளவர்களால் வாங்கப்படுபவை. தேவைப் பொருள்களல்ல.

எனவே விற்பனையாளர் நல்ல கனிவோடு நட்புணர்வோடு பழகி அவற்றை விற்கவேண்டும். விற்பனைத் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நானும் அமைச்சர்கள் கருணாநிதியும், முத்துசாமியும் இவ்விழாவில் கலந்துகொண்டது பொருத்தமா என்று சிலர் எண்ணக்கூடும். நாங்கள் கலந்துகொண்டது புதுமைதான், இந்த இயக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் இருப்பார்கள், ஈடுபாடு இல்லாத நாங்கள் வருவதைப் புதிதாகச் சிலரைச் சேர்த்துக்கொள்ள கிடைத்த வாய்ப்பாகக் கருதவேண்டும், புதிய அரசு ஏற்பட்டதும் நாங்கள் கதர்த்துறையை மூடிவிடப் போகிறோம் என்ற ஒரு அச்சம் இருந்தது. திருப்பூர் போன்ற பகுதிகளிலிருந்து பலர் என்னை வந்து பார்த்தார்கள். ஏற்கனவே உள்ளவற்றுக்குக் காரணமற்ற குந்தகம் உண்டாக்கும் பொறுப்பற்ற அரசல்ல என்று அவர்களிடம் சொன்னேன்.

கதர்த் தத்துவம் நிரந்தரமான தத்துவமாகி விட்டது. இடைக்கால நிவாரணமாகவே அதைத் கருதவேண்டும். இது ஒரு மனிதாபிமான முயற்சியே.

எனவே இதை இந்த அரசு போற்றிக் காத்திடும். கதர், விஷயத்தில் நாங்கள் மாறிவிட்டோமா இல்லையா? என்று ஆராயுமுன் கதர் எத்தனை மாற்றங்களைப் பெற்றுள்ளதென்று யாருங்கள்.

கையால் நூற்று கையால் நெய்வதே கதர் என்றிருந்தது.

என்பள்ளிப் பருவத்தில் காலணு நாணயத்தில் துளை போட்டு குச்சியைச் செருகி அதைத் தக்கிளியாக்கி நூல் நூற்போம். ராட்டை வந்தது, சர்க்கா வந்தது, அதற்குப் பிறகு டெக்ஸ்டூலில் தயாரான கருவியாக இருந்தாலே நல்லதென்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கருவிகள் பெரியதாக இருந்தாலே அவற்றில் தயாராகும் பொருள்களின் விலை குறைகிறது என்பதால் அவை விரும்பப் படுகின்றன, எனவே மாறியிருப்பது நாங்கள் மட்டுமல்ல. கதர்த் தொழிலும் மாறிவந்துள்ளது.

# கலையும் வாழ்வும்

# கலைத் துறையினரின் கனிந்த உதவி

நாட்டிற்கு ஏதாவது இன்னல்கள் வந்தாலும் மக்கள் துயர் பட்டாலும் கலைத்துறையில் உள்ளவர்கள் தட்டாமல் தயங்காமல் உதவி வந்திருக்கிறார்கள். அவர்கள் உதவுவது மட்டுமல்ல, பொது மக்களிடமிருந்தும் நிதி திரட்ட உறுதுணையாக இருந்து வருகிறார்கள்.

கலைத்துறையினருக்குள்ள வள்ளல் தன்மையையும் இன்னலுற்றபோது உதவும் ஈகைத் தன்மையையும் பாராட்டும் அதே நேரத்தில் அந்தத் துறைக்கு வருவாயும் இருந்திடவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும்.

"அரசாங்கம் எவ்வளவு கெடுதல் செய்தாலும் அவர்கள் நாணும்படி நாங்கள் நன்மை செய்து வந்திருக்கிறோம்" என்று திரைப்பட வர்த்தக சங்கத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் பழைய கதையின் கடைசி அத்தியாயத்தைப்பற்றி குறிப்பிட்டதாகத்தான் தோன்றுகிறதே தவிர புதிய கதையின் முதல் அத்தியாயத்தை அல்ல!

தொடர்ச்சியாகச் செய்துவரும் எந்தக் காரியத்தையும் திடீரென்று இடையில் புகுந்து எதுவும் செய்துவிட முடியாது. அது திரைப்படத் துறையினருக்கு நன்றாகத் தெரியும். 8 ஆயிரம் அடி எடுத்த படத்தை இன்னொருவர் பொறுப்பேற்றுச் செய்வதென்றால் எத்தனை ஆயிரம் அடி நீக்கவேண்டி வரும்? வில்லன் கதா நாயகன் ஆவானா? கதா நாயகன் வில்லன் ஆவானா? என்பதெல்லாம் நிலைமைக் கேற்பத்தான் மாறும். இதுபோல இடையிலே வந்திருக்கும் நாங்கள் எதையும் ஒரேயடியாக மாற்றிவிட முடியாது. ஆனால்; படிப்படியாக மிகுந்த அக்கறையுடன் பிரச்சனைகளை கவனிப்போம்.

## நமது கலை உன்னதமானது !

நமது தமிழகத் திரைப்படக் கலை பிறர் பாராட்டத்தகும் அளவு நேர்த்திபெற்றிருக்கிறது. நான் ஐந்தாறு ஆண்டு களுக்கு முன்பு மோட்டார் மூலம் வடநாடு சென்றிருந்தபோது வடநாட்டில் ஒரு தாலுகா தலைநகரில் ஒரு சினிமாப் படம் பார்க்கச் சென்றேன். படத்தின் துவக்கத்தில் ஏ. வி. எம். என்று காட்டப்பட்டவுடன் அவர்கள் கை தட்டினார்கள். கதை இன்னது என்று தெரியாதபோதே கூட நமது கலை உன்னதமாக இருக்கும் என்ற நினைப்பில் அவர்கள் கை தட்டினார்கள். அந்த நேரத்தில் நான் உள்ளபடியே பெருமைப் பட்டேன்.

முன்பெல்லாம் வடநாட்டைப் பார்த்து, அதன் திரைப் படக்கலை நுணுக்கங்களை நமது படத்தில் புகுத்தி வந்தோம். இப்போது அவர்கள் நமது கலையை—கதையைப் பார்த்து தமது படத்தில் புகுத்துகிறார்கள் என்றால் - இது நமது திரைப் படக் கலையின் நேர்த்தியைக் காட்டுவதாகும்.

வரி குறைய வேண்டும் என்று தமிழக அரசினைக் கேட் பதைவிட திரைப்பட விஞ்ஞானக் கருவிகளை இறக்குமதி செய் வதில் மத்திய அரசு தாராள மனப்பான்மை காட்டவேண்டும் என்று திரைப்பட வர்த்தகச் சங்கம் கோரினால், வெளி நாடு களுக்கு படம் அனுப்பி வளம் ஏற்படுத்திக்கொள்ள திரைப் படத் துறைக்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்படிப்பட்ட கோரிக்கைகளை எடுத்துவைத்து மத்திய அரசிடம் வாதாடுவ தில் திரைப்படத் துறையினருக்கு நான் நண்பனாக இருப்பேன். எதிர்காலத்தில் திரைப்படத் துறையின் கஷ்டங்களைப் போக்கு வதில் என்னைவிடச் சிறந்த நண்பன் இருக்கமுடியாது என்ற முறையில் நடந்துகொள்வேன்.

## ஒருவருக்கொருவர் உதவுதல் வேண்டும்.

திரைப்படத் தயாரிப்பாளர்கள் தமிழகத்திலுள்ள இயற்கைக் காட்சிகளின் அழகை — உதகமண்டலத்தின் சிறப்பை— குற்றாலத்தின் எழிலை - கொடைக்கானலின் சிறப்பை - மணி மாடக் கூடங்களை - தமிழகத்தின் சிறப்புமிக்க விழாக்களை - தமிழ்ப் பண்பாட்டை விளக்கி - சுற்றுப் பயண ஆர்வத்தை பிறநாட்டாரும் ஏற்கும்படி அமையும்படி இலவசமாகத் தயாரித்தளிக்க வேண்டுகிறேன். முடிந்தால் மத்திய அரசுடன் பேசி, படம் எடுத்த செலவைப் பெற்றுத்தரவும் முயலுகிறேன்.

அதேபோன்று குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றியும் தனியான திரைப்படம் எடுக்க வேண்டும். நமது படங்களில் அந்தக் கருத்து இடையிடையே வருகிறதே தவிர - முழுக்க முழுக்க அந்த நோக்குடன் படம் எடுக்கப்படவில்லை. அந்த முயற்சியிலும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஈடுபடலாம்.

மற்றோர் படம் - கலப்படத்தைப் பற்றி எடுக்கலாம். ஒருவர் கலப்படம் மூலம் சம்பாதிக்கும் பணம் மேலும் பல கலப்படங்களைச் செய்யத்தான் பயன்படுகிறது. அவருக்கோ நாட்டுக்கோ நன்மை ஏற்படுத்தும்படி இல்லை என்று கூறும் கருத்துக்கு இசைந்த படம் ஒன்றை எடுக்கலாம்.

இவ்விதம் திரைப்படத் துறையினர் சர்க்காருக்கு உதவவும், சர்க்கார் அவர்களுக்கு உதவவும் இருவரும் சேர்ந்து நாட்டுக்கு உதவவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

## கலையில் அரசியல் பின்னிக் கிடக்கிறது!

திரைப் படத்தின் மூலம் எவ்வளவோ நல்ல கருத்துக்களைப் புகுத்த முடியும். ஆனால், நினைக்கிறபடி புகுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். இந்த நிலையை மாற்றிட

நாம் அனைவரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். காலமும் அதற்கேற்றபடி கனிந்து வருகிறது,

கலை உலகத்தில் உள்ளவர்கள் அரசியலுக்கு வரலாமா என்று சிலர் கேட்கிருர்கள். அரசியல் என்பதே ஒரு கலை தான் என்பது அறிஞர்கள் கண்ட முடிவு.

அரசியல் ஒரு கலையா ? அல்லது வெறும் கருத்துக் குவியலா ? —என்று ஆராய்ந்த பேரறிஞர்கள் —அரசியல் என்பது கருத்துக் குவியல்களின் வழி மக்களைத் திருப்பி அவர்களைத் திருத்தும் ஒருகலை--என்றே முடிவு கட்டியிருக்கிருர்கள்.

கலை என்பது மக்களைக் கட்டி யாள்வது--அரசியல் என்பது மக்களைக் கட்டியாண்டு திருத்துவது.

கலை என்பது நிழல் உருவில் இருப்பது-- அரசியல் நிஜ உருவத்தில் இருப்பது.

கலை என்பது உடனடித் தேவைகளுக்காக இயங்குவது- அரசியல் என்பது நீண்ட காலத் தேவைகளுக்காக இயங்கு வது.

ஆகவே, கலையும் அரசியலும் பின்னிப் பிணைந்தவை. இதை உணர்ந்த பிறகும், கலையில் அரசியல் வரலாமா-அரசியலில் கலை புகலாமா--என்று கேட்பது 18ம் நூற்றுண்டின் கருத்தாகத்தான் இருக்க முடியும்;

நாம் அறிந்த அரசியல் தலைவர்களின் கலை ஈடுபாடு கண்டு நாம் தெளிய வேண்டும். இரண்டாம் உலகப்போர் நடை பெற்ற வேளையிலும் கூட ஓய்வு கிடைக்கும் போது வின்ஸ்டன் சர்ச்சில் திரைப்படங்களைப் பார்த்து ரசித்திருக்கிருர்.

உலகத்தில் மிகச் சிறந்த அரசியல் வாதியான ஆப்ரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்டிதநேரு இங்கிலாந்து செல்கிறபோது அங்கு நடை பெறும் புகழ்மிக்க நாடகங்களைப் பார்ப்பது வழக்கம்.

தமிழகத்தில் அரசியல் உணர்வை ஊட்டிய சத்திய மூர்த்தி அவர்களுக்கு சங்கீத நடனம் ஆகியவற்றிலே பெரு விருப்பம் இருந்ததோடு--நாடகங்களில் அக்கறை கொண்ட தோடு--சில நாடகங்களில் பங்கேற்று--வேடமும் தாங்கி யிருக்கிறார்.

ஆகவே கலையும் அரசியலும் இணையக் கூடாது என்பது சரியல்ல--கலையிலும் அரசியலிலும் சரியானபடி இருக்க இயலாதவர்கள் தான் அப்படிக் கூறுவார்கள்.

ஆனந்த விகடனில், கல்கி எழுதியதாக நினைவு--ஒரு முறை அவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது தன் பையிலிருந்த பொரி விளங்காய் உருண்டை ஒன்றை எடுத்துச் சாப்பிட்டாராம்.

உடனே எதிரில் இருந்த ஒருவர் கல்கியைப் பார்த்து 'நீங்கள் காங்கிரஸ்காரரா' என்று கேட்டாராம். "ஆம்" என்றார் கல்கி. அதற்கு அவர், பொரி விளங்காயை காங்கி ரஸ் காரன் சாப்பிடலாமா" என்று கேட்டார். "ஏன் சாப்பிடக் கூடாதா"? என்று கல்கி வினவினார்.

அதற்கு, அவர், "பொரி விளங்காயைச் சாப்பிடுவதன் மூலம் அதிலுள்ள இனிப்பில் நாட்டமிருக்கிறது என்பது தெரிகிறது. இனிப்பில் நாட்டம் செலுத்தினால் தேசபக்தி வருமா" என்று கேட்டார்.

இதிலிருந்து தெரிவது--அரசியல் அடிப்படைக் கருத்து விவாதங்களுக்குப் பதில் தனி மனிதனைப் பற்றிய விவாதங் கள் வளருகிறது என்பதுதான்.

கல்கி அவர்கள் வேடிக்கையாகக் குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சி நடந்தது 30 வருடங்களுக்கு முன்! இப்போது கூட அரசியல் கருத்துக்களை விட்டு விட்டு, தனிப்பட்டவர்களை

விமர்சிப்பது எதைக் காட்டுகிறது ? கல்கி ரயிலில் கண்ட மனிதர்கள் 30 வருடங்களுக்குப் பிறகும் வயதான நிலையில் உலவிக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது.

## நெகிழ்ச்சி தருவது கலை—அதை நெறிப்படுத்துவது அரசியல்

கலை என்பது மக்களின் மனதில் நெகிழ்ச்சி ஏற்படுத்துவதாகும். எந்த நாட்டிலுமில்லாத முறையில் தமிழகத்தில் நெகிழ்ச்சியை உருவாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சி குறைவானது. அதிக முயற்சி இல்லாமல் தமிழக மாந்தர் நெஞ்சில் நெகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். அதற்குக் காரணம் நெகிழ்ச்சி என்ற சொல்லில் சிறப்பு'ழ'கரம் இருக்கிறது.

தமிழிலிருந்து பல நாட்டவர்கள் எதை எதையோ எடுத்துக் கொண்டனர். பரத நாட்டியத்தைக் கூடக் கற்றுக் கொண்டனர். ஆனால் அந்த 'ழ'வை மட்டும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. அத்தகைய சிறப்பு 'ழ'கரம் இருக்கிற காரணத்தால் தமிழகத்துக் கலை மிக விரைவில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது.

மனம் நெகிழச் செய்வது கலை !

நெகிழ்ந்த மனம் நெகிழ்ந்து கொண்டே போனாலும் பயனில்லை. நெகிழாமல் இருந்தாலும் தவறு. ஆகவே மனம் நெகிழ வேண்டும் கலையால்! அப்படி நெகிழ்ந்ததை வழிப்படுத்துவது--பயன் பெறச் செய்வது--அரசியல்.

உள்ளத்தை நெகிழச் செய்யும் திறன் படைத்த கலைஞர்களிடமே--நெகிழ்ந்த உள்ளத்தை வழிப்படுத்தும் அரசியலும் இருந்தால் தவறு இல்லை. தவறு இல்லை என்பது மட்டு மல்ல --பொருத்தமிருக்கிறது; பொருளுமிருக்கிறது-இந்தக் கருத்துக்களை உலகம் உணர்ந்து நடக்கும் காலம் கனிந்து வருகிறது,

## மக்களிடம் விருது பெற்றவர்கள்!

தமிழ் நாட்டின் தலை சிறந்த கலைஞர் என்ற முறையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு சங்கீத, நாடக சங்கத்தின் சார்பில் விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது பெறும் கலைஞர்கள் நீண்ட நாளைக்குமுன்பே பொதுமக்களின் நல் வாழ்த்துக்கள் என்ற விருதுகளைப் பெற்றவர்கள் தான். என்றாலும் நாமும் நமது பங்கைச் செலுத்தா விட்டால் எங்கே தவருகக் கருதிவிடப் போகிருர்களோ என்று கருதித் தான் விருது வழங்குகிறோம்.

பெரும் புலமை பெற்ற இந்தக் கலைஞர்கள் பொது மக்களின் மத்தியில் நல்ல நிலை பெற்றிருப்பவர்கள். கலை யால் இவர்கள் முன்னேற்றம் கண்டிருப்பதுடன் அவர்களை ஒத்தவர்களையும் நாட்டுக்குத் தந்திருக்கிருர்கள். அப்படிப் பட்டவர்களைப் பாராட்டுவதிலேயும் விருது வழங்குவதிலேயும் அரசாங்கமும் இந்த அமைப்பும் பெருமைப் படுகிறது.

## ஏழ்மையிலும் வளர்கிறது நமது கலை !

மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாசமிருக் கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிருர்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோ ஏழ்மை இருக்கும் போதே கலையும் வளர்க்கப் படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகருகிருர்கள்--கலைஞர்களை வாழ்த்துகிருர்கள்--வளர்க்கிருர் கள்--கலையை வளம் பெறச் செய்கிருர்கள் என்ருல், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானல் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள்--

பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

சங்கீதம்-அதிலும் புராதனச் சங்கீதத்தை வளர்ப்பவர்கள் வாழ்நாளில் பல முறை சொல்லியிருப்பார்கள்; "எதற்காக நாம் இப்படி இருக்கிறோம்" என்று சலிப்படைந்து விட்டு, வீட்டிலே யுள்ள தமது மக்களைப் பார்த்து "எனக்கு இதிலே ஏதோ பிடித்த மேற்பட்டது! உனக்கு இந்த வேலை வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு சங்கீதக் கலையை வளர்ப்பதில் ஈடுபட்டிருப்பார்கள்.

வீடு தேடி யாராவது ஆள் வந்தாலும் " ஆகா ! கச்சேரிக்காகத்தான் வருகிறார்கள்" என்று மகிழ்ச்சி அடைவார்கள். அந்த மகிழ்ச்சிதான் ஆயிரம் பொற்காசுகளை விட அதிக மகிழ்ச்சி தரக் கூடியது. அந்த மகிழ்ச்சிதான் உயர்வானதும் கூட !

கலையின் ஒவ்வொரு துறையிலிருந்தும் பணியாற்றும் கலைஞர்கள் அந்தந்தத் துறைகளை நேர்த்தியாக வளர்ப்பது மட்டுமல்ல, மற்ற நாட்டினரும் புகழத்தக்க விதத்தில் நற்பணி ஆற்றி வருகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு நான் கம்போடியா நாட்டுக்குச் சென்றிருந்த போது, கம்போடியா நாட்டியம் பார்த்தேன். அந்த நாட்டியத்தைப் பற்றி முன்னமே எனக்கு நிரம்பச் சொல்லியிருந்தார்கள். ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியைக் காண அமெரிக்கச் சீமான் வீட்டுப் பெண்கள் இருவர் வந்திருந்தனர்.

## உடலோடு உள்ளமும் ஆடும்

அந்த நாட்டு நாட்டியம் மிகவும் தாமதமாக நடப்பது. ஒரு பக்க மிருந்து கையை மறுபக்கம் கொண்டுவருவதற்குள் —ஒரு நிலையிலிருந்து காலை இன்னொரு பக்கம் கொண்டு

வருவதற்குள் நான்கு முறை நாம் கடிகாரத்தைப் பார்த்துக் கொள்வோம்—அந்த அளவுக்குத் தாமதமாக நடக்கும். ஆனால் அதிலே நிரம்ப பாவம் இருக்கும் என்பார்கள்.

அமெரிக்கப் பெண்மணிகள் நாட்டியப் பெண்மணிகளைப் போலவே விரல்களை அசைத்துப் பார்த்துக் கொண்டார்கள். அவர்களால் முடிய வில்லை. அவர்களுக்குப் பக்கத்திலே அமர்ந்திருந்த நான் சொன்னேன் "கம்போடியா நாட்டியத்தைக் கற்றுக் கொள்ள - விரல்களை அசைக்கவே இவ்வளவு கஷ்டப் படுகிறீர்கள்- எங்கள் தமிழ் நாட்டு பரதநாட்டியத்தை எப்படி உங்களால் கற்றுக் கொள்ள முடியும்? கைகள் மட்டுமல்ல- கண்கள் மட்டுமல்ல - உடல் மட்டுமல்ல-உள்ள மெல்லாம் ஆடுமாறு ஆடுவார்கள்" என்றேன். அப்படிப் பட்ட நாட்டியத்தைக் காண விரும்புவதாக அமெரிக்கப் பெண்மணிகள் கூறினார்கள்.

இசை—நாட்டியம் மற்ற மற்ற துறைகளிலுள்ளவர்களில் பெரும்பாலோர், வாழ்வின் பெரும்பகுதியை ஏழ்மையில் கழித்திருக்கிறார்கள்.

நாட்டுக்குக் கலைச் செல்வத்தைத் தருகிறவர்கள் விருது பெற்றிருப்பதால் தான் நான் பெருமைப்படைகிறேன். இத்தனை பண்டைக் கலைகளும் ஒரு சேர நவீன முறையில் அமைந்திருப்பதுதான் சினிமாத்துறை! நேர்த்தியாக அமைக்கப்பட்டு உள்ளத்தில் நெகிழ்ச்சியை—மகிழ்ச்சியை உண்டாக்கும் தலை சிறந்த சாதனமாக விளங்குவது சினிமாத்துறை. அந்தத் துறையிலும் சிறந்த கலைஞர்கள் விருது பெற்றிருப்பது பாராட்டுக்குரியது—வாழ்த்துக்குரியது!

## பண்பை விளக்கப் பயன்படும் கலை

தமிழர்கள் வாழ்விலும் தாழ்விலும் வெற்றியிலும் தோல்வியிலும் கலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். பண்பு முழுவதும் கலை மூலம் உணர்த்தியவர்கள் தமிழர்கள்.

மறைமலை அடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY

கலைத்துறையில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருந்து இருக்கிறது. இசைத்துறையிலும் — நாடகத்துறையிலும் இலக்கியத்துறையில் எந்தத் துறையானாலும் முன்னணியில் தமிழகம் இருந்திருக்கிறது. கலைவாணர் போன்றவர்களால் மேலும் வளர்ந்திருக்கிறது.

## கலைவாணரின்
## நினைவு...

கலைவாணர், நகைச்சுவையின் மூலம் கருத்துக்களை மக்களுக்கு இனிய முறையில்--எளிய முறையில் உணர்த்தினார். மேலும் பலர் அந்தத் துறையில் ஈடுபட்டுவருகிறார்கள். என்றாலும் அதைப் பார்க்கிறபோது கலைவாணருடைய நினைவு தான் நமக்கு வருகிறது.

நமது தமிழ் நாட்டில் கலைத்துறையில் இருப்பவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் வறுமையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மீதி பத்துப் பேரில் ஒருவர் இருவர் தான் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் கலைவாணர். அதனால் தான் இறந்த பிறகும் புகழப்படுகிறார்.

நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்வதைப் போல— எங்களை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறுவது போல்— கலைவாணர் வாரி வாரி வழங்கினார். பணத்தை மட்டுமல்ல— நல்ல கருத்துக்களையும்.

பிறருடைய கலைவளர்ந்து இருப்பதைப் பார்த்துப் பாராட்டுகின்ற பண்பு அவருக்கு உண்டு.

பொதுப்பணியிலும் கலைவாணர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்த வரையில் முதன் முதலாக சோவியத் நாட்டுக்குப் போய் வந்த கலைஞர் என். எஸ். கே. தான். அவருடைய கிந்தனார் காலட்சேபம் எல்லோருக்கும் பிடித்தமானது. அவருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவுக்கு இருக்கிறது. கலைக் கல்லூரி அமைத்து ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர் அவர்.

## கேளிக்கை
## வரி

கேளிக்கை வரியைக் குறைக்க வேண்டும் என்று திரைப் பட முதலாளிகள் கோருகிறார்கள். அவர்கள், வரிகளின் நிலைமை பற்றி முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாநில அரசுக்குரிய வரிகளில் முதலாவது நிலவரி ; நில வரி வளரக் கூடியது அல்ல—ஏனெனில் நிலம் வளரக் கூடியது அல்ல ; எனவே அந்த வரி—வளராத வரி ! அதனாலே யே அந்த வரியைக் குறைக்க வேண்டும் என்றும் அறவே நீக்கிவிட வேண்டும் என்றும் கோரிக்கைகள் இருக்கின்றன.

இரண்டாவது விற்பனை வரி ; விற்பனை வரி வியாபாரி களிடம் வசூலிக்கப் பட்டாலும் அந்த வரியின் பளு வாங்கு பவரின் தோளின் மீது தான் விழும். ஆகவே அந்த வரியை அதிகப் படுத்துவது வாங்குவோரைக் கொடுமைப் படுத்துவ தாகும்.

கேளிக்கை வரியும் படம் பார்ப்போரின் மீது சுமத்தப் படுவது ஆகும்.

மீதியிருக்கும் வருமான வரி போன்றவை மத்திய அர சாங்கத்திற்கு உட்பட்டது.

வரி அல்லாத வருமானங்களை எடுத்துக் கொண்டால் தொழில்கள் சில தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கிறது.

இந்த மாநிலத்திலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் ஒன்று—நெய்வேலி லிக்னைட் தொழிற்சாலை. அதுவும் மத்திய அரசாங்கத்திடம் !

பெரம்பூர் கோச் பேக்டரி-திருச்சி பாய்லர் தொழிற்சாலை போன்றவையும் மத்திய அரசாங்கத்திடம் தான் !

மாநில அரசாங்கத்திடம் இருப்பதெல்லாம்-ஒன்று-பஸ் போக்கு வரத்துத் தொழிற்சாலை ! சென்னை நகரத்தைப் பொறுத்தவரை அது நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

அடுத்தது கதர்த் தொழிற்சாலை - அது நமது நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் பெருத்த நஷ்டத்தைத் தருகிறது. ஆகவே இத்தகைய நிலையில் -பற்றுக்குறை பட்ஜெட் இருக்கும் நிலையில்—திரைப்பட முதலாளிகள் - வரிக்குறைப்பை எதிர்பார்ப்பது சரியல்ல ! ஆனால், அதே சமயத்தில் வரி விதிப்பினாலேயே ஒரு நல்ல தொழில் அழிந்து போவதை நாங்கள் விரும்ப மாட்டோம்.

மாநில அரசின் நிதிநிலைமை சரியானதும் திரைப்பட முதலாளிகளின் கோரிக்கைகள் நிச்சயம் கவனிக்கப்படும். திரைப்படத் தணிக்கையில் உள்ள தொல்லைகள் பற்றியும் தயாரிப்பாளர்கள் வருத்தப் படுவது எனக்குப் புரிகிறது. தணிக்கையினால் ஏற்படுகிற கஷ்டம், எதை வெட்ட வேண்டுமோ அதை விட்டு விடுகிறார்கள். எதை விட்டுவிட வேண்டுமோ அதை வெட்டி விடுகிறார்கள்.

பாலுணர்ச்சி மிகுந்தது என்று 15 வருடத்திற்கு முன்பு கருதப் பட்டவை இன்று சர்வ சாதாரணமான காட்சியாகி விட்டது. இன்று அப்படிப் பட்ட காட்சி ஐந்து வருடத்தில் சாதாரணமாகிவிடும். ஆகவே ஆபாசம் என்பது பார்ப்பவரின் மனதுக்கு - கண்ணுக்கு - காலத்துக்கு ஏற்றவாறு இருக்கிறது.

ஒரு அழகான பெண்ணைத் திரையில் காட்டுவதால் என்ன தவறு என்று ஒருவர் கேட்டார். தவறு எதுவுமில்லை - அது அழகான பெண்ணாக இருந்தால். அழகான பெண் என்று, பார்ப்பதற்குத் தேவையில்லாத பகுதிகளை - அளவுக்கு மீறிய மேக்-அப்புடன் காட்டுவது தான் எரிச்சலூட்டுகிறது.

ஆகவே மக்களின் சுவையை அறிந்தவர்கள் - சுவை மாறும் தன்மையை அறிந்தவர்கள் தணிக்கைக் குழுவில் இடம் பெற வேண்டும். அத்தகைய முறையால் திரை உலகம் சீர்திருத்த நிலையை அடைய வேண்டும்.

# மாநில அரசும்
# மத்திய அரசும்

## மாநில அரசு கம்பவுண்டர் ; மத்திய அரசு டாக்டர்

மாநில அரசு நோய் தீர்க்கும் டாக்டரின் நிலையில் அல்லாமல் கம்பவுண்டரின் நிலையிலேயே உள்ளது. மத்திய சர்க்காரோ முதல் வகுப்பு டாக்டரின் நிலையில் உள்ளது

மாநில அரசோ மத்திய அரசோ அல்லது தனியார் துறையினரோ யாராகயிருப்பினும் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படாது தவிர்த்திட ஏதாகிலும் செய்தாக வேண்டு மென்று உணர்ந்துள்ளனர். இந்த உணர்வு மிக முக்கியம். இந்த உணர்வு ஏற்பட்டுள்ளது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நோய்க்குக் கூறப்படுகிற மருந்துகளும், சிகிச்சை முறைகளும் மாறலாம் ஆனால் சிகிச்சை அளிக்கவேண்டுமென்ற உணர்வு ஏற்படுவதே முக்கியம்.

புதிய கட்சி இம்மாநிலத்தில் ஆட்சிக்கு வந்தது பற்றிச் சொல்லப்பட்டது. இந்த வசீகரமெல்லாம் சில மாதங்கள் தான். நாளடைவில் இந்த வசீகரம் குறைந்து விடும், வரலாற்றின் நாளேட்டில் நெடுங்காலத்திற்குப் பிறகு இது மங்கியதொரு தாளாகிடும்.

புதிய கட்சி என்பதால் எவரும் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை.

இந்த அரசும் இதை நடத்திச் செல்கிற திராவிடமுன்னேற்றக் கழகமும் தனது மக்கள் நலப்பணியில் மக்களது ஆதரவினை நாடுகின்றன. மக்களுக்கு மூன்றுவேளை சோறுவது அவர்கள் திருப்தியடையும் வகையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டு மென்பதே எங்கள் நோக்கம். பொருளாதார லாப நட்டப் புள்ளி விவரப்பட்டியல் மக்களுக்குப் புரியாதது.

எனவே சாதாரண மக்கள் தாங்கள் முன்னைவிட வலி வுடன் இருக்கிறோம், உடல் நலமுடன் இருக்கிறோம், என்ற உள்ள நிறைவோடு இருக்கத்தக்க வகையில் பணிகள் நடைபெற ஒத்துழைப்பு இருக்குமென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

பொருளுற்பத்தி செழிக்க உள்நாட்டு மார்க்கெட் வலி வானதாக இருக்கவேண்டும், மக்களிடம் வாங்கும் சக்தி வளரவேண்டும். அது வளராது பொருளுற்பத்தி மட்டும் பெருகுவதால் அதன் முழுப்பலனையும் அடைய இயலாது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் நல்ல நோக்கத்துடன் கூடி யவைகளே. ஆனால் அதனால் விளைந்த பலன்கள் நாம் எதிர்பார்த்தபடி இல்லை. திட்ட இலக்குகளுக்கும் அசல் சாதனைகளுக்கும் சம்பந்தம் இருப்பதில்லை -- அரசியல் மேடைகளைப் பார்த்தால் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை மட்டும் பட்டியல் போட்டுக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்வார்கள். அசல் சாதனைகள் இன்னதென்று சொல்ல அஞ்சுவார்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாகிலும் வேறுபட்டு இருக்குமென்று எதிர்பார்ப்போம் -- புதிய திருத்திய திட் டக்குழு, வெங்கட்ராமனைப் போன்றவர்களை அங்கத்தினர் களாகக் கொண்டு ஏற்பட்டுள்ளது. அனுபவ ரீதியாக இக் குழு செயல்படுமென்று நம்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அது பிறப்பதற்கு முன்னே இரண்டு வயதை அடைந்துவிட்டது. இன்னும் அந்தரத்தில் நிறுத்தாமல் அந்தத் திட்டம் என்னென்ன என் பதை மக்களுக்கு நாம் தெரிவித்தாக வேண்டும்.

எந்தத் திட்டமாயினும் விவசாயத்தை பலமுடைய தாகச் செய்யக் கூடியதாகவே அமையவேண்டும். இது அனைவராலும் இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

இவ்வாறு விவசாயத்தை பலப் படுத்து வோமானல் இந் நாட்டுப் பொருளாதாரம் புத்துயிர் பெறும். புது வலிவு பெறும்.

விரைவான நற்பலன்களைக் கொடுக்கக் கூடிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதில் தமிழக அரசு நெருங்கிய அக்கறை கொண்டுள்ளது.

இவ்வகையில் மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு இப்போது தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இத்தகைய உடனடிப் பலன்களை அளிக்கக் கூடிய திட்டங்களுக்காகவே தமிழக அரசு கடன் எழுப்பியிள்ளது. இக்கடனுக்குத் தாராளமாகக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

உணவைப் பொறுத்த மட்டில் நாம் உபரி மாநிலம் என்ற நிலையை அடைந்து விடுவோமானுல், நமது மாநிலம் தொழில் வளத்தை நோக்கி முன்னேற அதுவே ஒரு உந்து கோலாக அமையும்.

உற்பத்தியைப் பெருக்கும் காரியத்தில் ஒருமாநில சர்க்கார் ஈடுபடுகிறதென்ருல் ஏற்படும் நஷ்டத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விலை ஏற்றத்திற்கு முழுப் பொறுப்பை ஏற்க வேண்டியது மத்திய சர்க்கார் தான்! என்ன காரணம்? பணவீக்கம் ஏற்படவும் அதனுல் விலைகள் உயரவும் காரணமாக இருப்பது மத்திய சர்க்கார்தான்.

## தாயுள்ளம் வேண்டும்

தாய் பத்தியமிருந்து குழந்தைக்குப் பால் கொடுப்பது போல மத்திய சர்க்காரும் தாய்மைநிலையிலிருந்து மாநில அரசுகளுக்குத் துணைபுரிய வேண்டும்.

"நீயாகச் செய்ய வேண்டிய காரியம் இது-நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று மத்திய அரசாங்கம் கூறுமானல் தாங்கள் எது வேண்டுமானுலும் செய்வோம்--மத்திய அரசு அதற்குத் தயாரா ?

தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் எந்த வெளிநாட்டிற்கும் விற்பது-தேவையான பொருளை தருவித்துக் கொள்வது போன்ற உரிமைகளை யெல்லாம் மத்திய அரசு எங்களுக்கு விட்டு விடுமானுல், அதற்கான உரிமை தருமானுல் எதற்கும் நாங்கள் மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்கமாட்டோம்.

வெங்காயம் முதற் கொண்டு கைத்தறித் துணிகள் வரை எல்லாப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் தான் இருக்கிறது. வெளி நாடுகளி லேயிருந்து குண்டூசியை வர வழைத்துக் கொள்வதற்கான அதிகாரமும் மத்திய சர்க்காரிடம் தான் இருக்கிறது. எல்லா வற்றிலும் மந்திய அரசாங்கம் தான் குறுக்கிடுகிறது. சில பிரச்சினைகளில் விட்டு விடுவதும் சங்கடமான பிரச்சனைகளில் தலையிடுவதும் நியாயமல் ல.

மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி வந்த பிறகு தான் ஒரு படி அரிசி போட வேண்டும் என்று மக்களைக் காத்திருக்கச் செய்ய எனக்கு மனமில்லை -- என்பதாலேயே உத்தரவு போட்டு விட்ட பிறகு மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி நிதி கேட்கிறோம்.

பக்தவத்சலம் ரூபாய்க்கு 3 படி கேட்டு ஊர்வலம் நடத்துவோம் என்ருர். அதற்கு நான் பதிலளிக்கும் வகையில் மத்திய அரசிடம் 30 கோடி கேட்டுப் பதில் ஊர்வலம் நடத்துவேன் என்று சொன்னேன்.

அதற்கு பக்தவத்சலம் பதிலளிக்கும்போது "தி. மு. க. ஊர்வலமா ? அதில் என்னென்னமோ நடக்குமே " என்று சொல்லியிருக்கிருர் -- அப்படி ஒன்றும் நடக்காது !

எங்கள் ஊர்வலத்தில் மக்கள் அதிகமாக இருப்பார்கள். உங்கள் ஊர்வலத்தில் மக்கள் குறைவாக இருப்பார்கள். இந்த வித்தியாசத்தைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது.

ரூபாய்க்கு ஒரு படி என்று நாங்கள் போடும் போது விவசாயிகளிடமிருந்து ரூபாய்க்கு ஒரு படி என நாங்கள் வாங்கவில்லை.

பக்தவத்சலம், ஆட்சிக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஒரு காசுகூடக் குறைக்காமல் கொடுத்துத்தான். நெல் வாங்குகிறோம். அப்படிக் கொள் முதல் செய்து சில பகுதிகளில் அரிசி விலையைக் குறைத்துக் கொடுக்கிறோம் இதற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி தர மறுப்பது மட்டுமல்லாமல் இப்போது உர விலையை வேறு உயர்த்தி யிருக்கிறது-- இது நியாயந்தானா ?

ஒருவருடைய கையை நீட்டச் சொல்லி அதில் ஒரு பிடி அரிசியையோ சோற்றையோ போடும்போது பின்னாலிருந்து ஒருவர் காலை இழுத்துவிட்டால் அந்த ஒரு பிடி அரிசியோ சாதமோ அவரது கையிலா போய் விழும் ? உற்பத்தியைப் பெருக்கு என்று சொல்லும் மத்திய அரசாங்கம் உர விலையை உயர்த்தியுள்ளது.

நாங்கள் பதவி ஏற்றபோது எங்களுடன் ஒத்துழைப் போம் என்று சொன்னார்கள். கல்யாண வீட்டில் ஆசீர் வாதம் பண்ணுவதுபோல அப்படிச் சொன்னார்கள்.

ஆனால் நடைமுறையில் அந்த ஒத்துழைப்பு இல்லை. உர விலையை ஏற்றியது நியாயமானதோ மனிதாபிமான முள்ள செயலோ அல்ல.

உர விலையைக் குறைக்கச் சொல்லி நாங்கள் கேட்ப தோடு மட்டுமல்லாமல் தனிப்பட்ட நிறுவனங்களும் குரல் எழுப்ப வேண்டும். உர விலையை உயர்த்தினால் உணவு

உற்பத்தி பாதிக்கும். ஆகவே இது அக்ரமமானது என்பதை மத்திய அரசு உணரச் செய்ய மக்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும்.

## பசி நீங்கிட
## அரிசி கிடைத்தது

•

பக்தவத்சலம் கூறுகிறார் சென்னை-கோவை நகரங்களுக்குத்தானு ரேசன்? மற்ற இடங்களுக்கு இல்லையா? என்று!

இந்த ரேசனை சென்ற வருடம் காங்கிரஸ் எப்படி நிறைவேற்றியது என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

என் வீடு இருக்கின்ற நுங்கம் பாக்கம் பகுதியிலுள்ள ஒரு ரேசன் கடையில் காலை 6 மணிக்கு வந்து அரிசி வாங்குவதற்காக வரிசையில் நின்ற அன்னையார் ஒருவர் மாலை 6 மணிக்குத் திரும்பிச் சென்றார். கையில் அரிசியோடு அல்ல! கைக் குழந்தையோடு!

வெயிலின் கொடுமை தாளாமல் அலறி அலறி இடி பாடுகளால் இடுப்பு நோக மக வொன்றைப் பெற்றெடுத்துச் சென்ற பரிதாபம் காங்கிரஸ் ஆட்சியைத் தவிர வேறு எங்கும் காண முடியாது.

ஆனல் இப்போது அந்தப் பகுதியில் போய் அரிசி உண்டா என்று கேளுங்கள், எவ்வளவு வேண்டும் என்பார்கள்.

இதை விட்டு விட்டு நீ என்ன செய்தாய்? என்ன செய்தாய்? என்றால் என்ன பொருள்?

அரிசி கிடைக்காத இடத்தில் அரிசி கிடைக்கச் செய்தோம்!

இது என்ன பிரமாதமா என்கிறார்கள், பிரமாதம் இல்லைய ன்றால் நீங்கள் ஏன் செய்யமுடியவில்லை?

சர்க்கஸ் காரி ஒருத்தி கம்பியின் மேல் நடப்பதைப் பார்த்து, பூ என்ன பிரமாதம், இருபக்கமும் கையை நீட்டிக் கொண்டு ஆடாமல் அசையாமல் நடந்தால் கம்பிமேல் நடக்கலாம், என்று பார்வையாளர்களில் சிலர் கூறுவர். இது எவ்வளவு தூரம் நகைப்புக்கிட மாகிறதோ, அவ்வளவு தூரம் பிரமாதமா என்பவர்களும் நகைப்புக் கிடமாகிருர்கள்.

தண்ணீர் இறைக்கும் போது இரண்டு கையாலும் இழுத்தால்தான் தண்ணீர் வரும். சர்க்கஸ் பார்த்த ஞாபகத்தில் ஒருகையால் இழுத்தால் எப்படி நீர் வராதோ அது போல் அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமலிருந்தால் எந்தப் பலனையும் முழுமையாக அடைய முடியாது.

மக்களுக்கு அரிசி கொடுப்பதற்காக எத்தனை நாள் பாடு பட்டோம்? என்னென்ன இக்கட்டான சூழ்நிலைகளை மேற்கொண்டோம்? எவ்வளவு முயற்சிகள் செய்தோம்! அதை விட்டு விட்டு என்ன பிரமாதம் என்பது முறையாகுமா?

நாங்கள் மூன்று மாதத்தில் செய்ததை அவர்கள் ஏன் இருபது வருடங்களாகச் செய்ய வில்லை? மக்கள் வாழ்வைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை!

அரிசியில்லை என்ருல் பால் சாப்பிடச் சொன்ஞர்கள் --அதுவும் இல்லையென்ருல் பழம் சாப்பிடச் சொன்ஞர்கள். ஒருவர் எலியைச் சாப்பிடலாம் என்ருர். நல்ல வேளை அவர்கள் ஆட்சிக்கு வரவில்லை, வந்திருந்தால் பகலில் தவளைக் குழம்பும், இரவில் எலிக்கறிக் கூட்டும் சாப்பிடச் சொல்வார்கள்.

சென்னையைப் பொறுத்த வரை எலிகள் அதிகமில்லை. பெருச்சாளிகள்தான் எங்கு பார்த்தாலும் ஓடிக் கொண்டிருக்கிறது. பிள்ளையாருக்கு அது வாகனம் என்று கூறி அப்படிப்பட்ட பெருச்சாளியைச் சாப்பிடக் கொடுத்து வைக்க வேண்டும் என்ற காரணங் கூறி சாப்பிட வற்புறுத்தியிருப்பார்கள்

படி அரிசித்திட்டம் போட்டு அவர்கள் சாதிக்க முடியாததை நாம் சாதித்திருக்கிறோம்.

நான் டில்லிக்குச் சென்றிருந்த சமயம் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அமர்ந்திருந்த போது காங்ரகிஸ்காரர்களெல்லாம் வந்து, நீ நல்ல காரியம் செய்தாய்–நல்ல காரியம் செய்தாய் என்ருர்கள். என்ன காரியம் என்றேன். ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடுகிறீர்களே அதைத்தான் கூறுகிறோம் என்ருர்கள்.

அப்பொழுது நான் சொன்னேன், ''ஆமாம் அந்த நல்ல காரியத்தை நான் செய்து விட்டேன். அதற்குத் தான் இங்கே உதவி கேட்க வந்திருக்கிறேன்'' என்றேன். அதற்கு அவர்கள் 'எங்களால் ஒன்றும் முடியாது' உன் சொல் வாக்குத் தான் இங்கு செல்வாக்காய் இருக்கிறது, நீயே கேள் என்றனர். நான் கேட்டு இல்லை யென்ற பதிலோடு திரும்பி வந்ததை நீங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

ரூபாய்க்கு 1 படி அரிசி போடுவதை எல்லாரும் பாராட்டுகிருர்கள். ஆனுல் காங்கிரஸ்காரர்கள் மட்டும் தான் கேலி பேசுகிருர்கள். மக்களோடு மக்களாக அவர்கள் ஒன்றிப் பழகாத காரணமாகவும் அது இருக்கலாம்.

விலைவாசியை இவன் நோக்கத்திற்குக் குறைத்து விட்டு இவன் டில்லிக்குப் போகிருனே ; இது நியாயமா ? ஆகுமா ? அடுக்குமா என்று கூறுகிருர்கள்.

குழந்தை பாலுக்கழுதால் தாயிடத்தில் போகுமா ? அடுத்தவீட்டுக் காரியிடம் போகுமா ?

## டில்லியைக் கேட்காமல் யாரைக் கேட்பது ?

டில்லிக்குப் போகாமல் வேறு எங்கே போவது ? இலண்டனுக்கா போவது ? அமெரிக்க நாட்டிலுள்ள வாஷிங்டனுக்கா

போவது ? இல்லை மாஸ்கோவுக்குப் போவதா ? டல்லாஸ் நகரம் போவதா ?

உன்னால் உதவி செய்ய முடியவில்லை யென்றால் வெளி நாடுகளிடமிருந்து வாங்குகின்ற உரிமையை எங்களிடம் கொடுத்து விடு. முடிந்தால் நாங்கள் வாங்கிக் கொள் கிறோம். அப்பொழுது முடியாமல் உன்னிடத்தில் ஓரணு விற்காக வந்தாலும் ஏன் வந்தாய் என்று திருப்பிக் கேள்! அது முறை ; நியாயமுங்கூட. அதைப் பேசாமல் இப்படி எதையோ கேட்பது அர்த்த மல்ல.

இதைப் போலத்தான் நேருவுக்கு ஒரு முறை மதுரையில் கறுப்புக் கொடி காட்டிய போது, நேருவுக்கா கறுப்புக் கொடி ? நேருவுக்கா கறுப்புக் கொடி ? என்று கக்கன் கேட்டார். அப்பொழுது 'நம் நாடு' இதழில் ஆசிரியராக இருந்த கல்யாண சுந்தரம் நேருவுக்குக் காட்டாமல் எனக்கா காட்டுவது என்றார். அதைப் போலத்தான் நான் கேட் கிறேன் டில்லி அரசே ! உன்னிடம் கேட்காமல் நான் யாரிடம் கேட்பேன்.

நீ தானே சொன்னாய் இந்தியா ஒரே நாடு ! எல்லோரும் ஓரின மக்கள் ! பிரிந்து போகாதே என்று !

அதை மறந்து விட்டு அணைத்துக் கொண்டே இருக் கும் போது ஜேபியில் கை போடுகின்றாயே இது தகுமா?

பக்தவத்சலத்திற்கு நான் கூறுகிறேன். டில்லியிடம் கேட்பதற்கு முழு உரிமை இருக்கிறது. அவர்கள் செய் தாலும் செய்யா விட்டாலும் மக்களிடம் நான் கூறுவேன். அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நான் செய் வேன்.

பக்தவத்சலத்திற்குச் சொல்லுகின்ற நேரத்தில் இங்கு கூடியுள்ள மக்களுக்கும் நான் சொல்லுகிறேன் - மத்திய அரசு உதவாவிடில் போனால் போகிறது என்று சொல்லட்டும்

அல்லது மத்திய அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று சொல்லட்டும், அது அவர்களாகச் சொல்ல வேண்டும்.

விளக்கிற்கு எண்ணெய் ஊற்றி எரித்தால்--திரி நன்றாக இருந்தும் விளக்கு எரிய வில்லை யென்றால் எண்ணெயில் தான் கோளாறு என்று பொருள். எண்ணெய்க் கடைக் காரனிடம் சென்று ஏனய்யா இப்படி மட்டமான எண்ணெய்யாகக் கொடுத்து விட்டாய் என்று கேட்டால் என்னையா கேட்கிறாய் என்று அந்தக் கடைக்காரன் கேட்பானா ?

அதைப் போல ஏழை எளியவர்களுக்கு படி அரிசி போடுவதால் இந்த வருடத்தில் எட்டுக் கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது.

ஆறுமாதங்கள் மட்டும் கணக் கெடுத்தாலும் ஐந்து கோடி ரூபாய் நட்டம் வருகிறது. இந்த நட்டத்தை ஈடு செய்ய உதவி செய் என்றால் என்னையா கேட்கிறாய் என்று கேட்கிறது டில்லி அரசு.

மாநிலம் என்ற குழந்தையை அந்தந்த மாநில அமைச்சர்களே காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று கூறுகிறார்கள். அதன்படியே வைத்துக் கொண்டால் என் குழந்தைக்கு நான் என் சொந்த முயற்சியில் ஈடு படும்போது நீ தடையாகவோ --பங்குக்கோ வரக் கூடாது.

இது தான் போகட்டும் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்ன ? நானா அதற்குப் பொறுப்பாளி ? நாங்களா முன்பு ஆட்சி புரிந்தோம் ?

ஜோதியம்மாள் ஏற்றிய விலையை சத்தியவாணிமுத்து அம்மையாரா குறைப்பார்கள் ? கக்கன் ஏற்றிய விலையை கருணாநிதியா குறைப்பார் ? விலையை ஏற்றுவது மட்டும் பக்தவத்சலம் ! இறக்குவது மட்டும் நானா ? வேடிக்கையான விவாதமாகத்தான் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

# கொட்டும் தேள் !

தேள் கொட்டிவிட்டுச் சென்றுவிடும். கொட்டிய இடத்தில் மருந்து போடும் வரை விண்விண் என்று தெறிக்கும் அது போல் காங்கிரஸ் என்ற தேள் மக்களைக் கொட்டிவிட்டுச் சென்று விட்டது. அதற்கு மருந்து போடத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். போடும்வரை கொஞ்சம் வலியேற் படத் தான் செய்யும். பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருங் கள். சொன்னபடியே அரிசிபோடுகிறேன்.

இந்தியா முழுவதற்கும் வெளிநாடுகளில் கோதுமையை வாங்கி -- அதிலும் அதிக விலைக்கு வாங்கி குறைத்து விற்கிறார்கள். அதுவும் உத்திரப்பிரதேசம் மத்தியப் பிரதேசம் ஆகிய கோதுமை சாப்பிடும் மாநிலங்களுக்குத்தான் அதைக் கொடுக்கிறார்கள். இதனால் ஏற்படுகின்ற நட்டத்தை டில்லி சர்க்கார் தான் ஏற்றுக் கொள்கிறது. இந்த நட்டம் மட்டும் 180 கோடி ரூபாய் என்று கணக்கிடப்படுகிறது.

நாமும் கோதுமை சாப்பிடுபவர்களாயிருந்தால் இந்த உதவி கிடைத்திருக்கும். கோதுமை சாப்பிடுகின்ற மாநிலங் களுக்கு உதவி செய்யும் டில்லி சர்க்கார் அரிசி சாப்பிடுகின்ற நமக்கு ஏன் செய்யக் கூடாது ?

8 கோடி ரூபாய் நட்டத்தில் ஒரு பகுதியாவது கொடுங்கள் என்றேன். முடியாது என்று சொல்லி விட்டனர். இதைக் கேட்டதும் பஞ்சபாண்டவர் கதைதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

இல்லையென்று அவர்கள் கூறினாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் மலிவு விலையில் அரிசி போட முயற்சிகள் எடுத்துள்ளோம் ; திட்டமிட்டும் வருகிறோம். விரைவில் நடை முறைக்கு வந்து விடும்.

# அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான தக்க தருணம் வந்திருக்கிறது.

சட்டத்தைத் திருத்துவது என்பதுபற்றி யாரும் எந்தவித தடுக்கமும் கொள்ளத் தேவையில்லை.

அரசியல் சட்டத்தை அலசி ஆராய்ந்து விமர்சித்துத் திருத்துவதற்கு சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே சொல்லியிருக்கிறார்.

திருத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணமே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான்!

அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கும்—உள்நாட்டிலே ஒற்றுமை உண்டாக்குவதற்குமான அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு தன்பொறுப்பில் வைத்திருந்தால்போதும். மாநில அரசுகளின் வரவு விவகாரத்தில் மத்திய அரசு தலையிடத் தேவையில்லை,

பொதுவாக இன்றையதினம் அரசாங்க நிர்வாக இயந்திரம் சரிவர இயங்கவில்லை.

இருப்பினும் பொது மக்களின் ஊக்கமும் ஆக்கமும் இருந்தால் அரசாங்க நிர்வாக இயந்திரம் சரிவரச் செயல்பட முடியும்-அதைச் செம்மைப் படுத்த முடியும்.

மக்கள் சக்தியால் தான் நிருவாக இயந்திரத்தைச் சரிவர இயக்க முடியும்.

வெள்ளைக்காரன் தான் இந்த நிர்வாக இயந்திரத்தையே கொடுத்துவிட்டுப் போனதாக சிலருக்கு நினைப்பு இருக்கிறது.

தமிழ் நாட்டில் சேரர்களும் சோழ மன்னர்களும்-பாண்டிய மன்னர்களும் ஆண்ட காலத்திலேயும்—வட நாட்டில் வேறு மன்னர்களின் அரசுகள் இருந்த நிலைமையையும் பார்க்கும்போதும் அன்றைக்கே நம்முடைய நாட்டில் மிகச் சிறந்த முறையில் அரசு நிர்வாக இயந்திரம் செயல்பட்டு வந்தது தெரியும் !

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நல்ல அரசு இயந்திரம் நம் நாட்டில் இருந்திருக்கிறது.

தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகவே அரசு நிர்வாகத்தை மிகுந்த திறம்பட இயக்கி வந்திருக்கிறார்கள் என்பதற்காகச் செப்பேடுகளும் கல்வெட்டு ஆதாரங்களும் இருக்கின்றன !

ஆனால் இடையில் அவற்றைச் சரிவரப் பயன்படுத்தத் தவறியதால் அரசு நிர்வாக இயந்திரத்தை துருப்பிடிக்க விட்டு விட்டோம்; அப்படித் துருப்பிடித்துவிட்ட நிர்வாக இயந்திரம் சரிப்படுத்தப்பட வேண்டும்.

வணிகர்களும் — வழக்கறிஞர்களும் — மருத்துவர்களும் பிற பட்டதாரிகளும் அரசியலுக்கு வரவேண்டுமென்பது எனது நீண்ட நாளைய விருப்பமாகும். பொது வாழ்வில் இப்படிப்பட்டவர்கள் ஈடுபடாமல் யார் எப்படிப் போனாலென்ன என்று இருந்துவிடக் கூடாது.

மத்திய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் எல்லாம் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்,

அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்! வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது பல்வேறு அரசுகள் அதிகாரக் குவிப்பினால்தான் அழிந்தன என்பது புலனாகும்.

குப்தப் பேரரசு முகலாயப் பேரரசுகளெல்லாம் அதிகாரக் குவியலின் காரணமாகத்தான் சரிந்து போயின. அந்த நிலை

நம்முடைய நாட்டிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்—அக்கறையின் விளைவாக இதைச் சொல்லுகிறேன்.

## ஏழைகளை வதைக்கக் கூடாது.

ஏழை மக்கள்மீது மேலும் வரி விதிக்கக் கூடாது என்கிற முறையில்தான் புது டில்லியில் நடைபெற்ற திட்டக் கமிஷன் கூட்டத்தில் கலந்துகொண்ட நான் வற்புறுத்தினேன்.

விவசாயிகளுக்கு உள்ள தண்ணீர்த் தீர்வையை உயர்த்திட வேண்டுமென்றும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றும் அதன்மூலம் பணத்தைச் சேர்த்துத் திட்டங்களுக்கு உதவ வேண்டுமென்றும் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

முதன் முதலாக நான்தான் எழுந்து பேசினேன். இது நடக்கிற காரியமல்ல, நான் இதற்கு ஒப்பவும் மாட்டேன் என்றதோடு இதைப்பற்றி யோசிக்கவும் நான் தயாராக இல்லையென்று இரண்டையும் திட்டவட்டமாக அறிவித்தேன்.

நான் சொன்ன பிறகுதான் அண்ணாதுரை சொன்னது போல் நாங்களும் இதற்கு உடன்பட முடியாதென்று காங்கிரஸ் முதலமைச்சர்களும் தெரிவித்தார்கள்.

ஒரே ஒருவர் அரியானா மாநிலத்திலிருந்து வந்திருந்த முதலமைச்சரல்ல, கவர்னர்—இந்தக் கருத்தை எதிர்த்தார். அதற்குக் காரணமில்லாமலில்லை. எத்தனை நாளைக்கு நாம் பதவியில் இருக்கப்போகிறோம். மற்றவர்கள் வந்தபிறகு எப்படியாவது போகட்டும் என்கிற முறையில் அவர் தமது கருத்தைச் சொன்னார்.

வரி மூலம் மட்டும் பணத்தைத் திரட்டி மக்களின் குறைகளைத் தீர்த்துவிட முடியும். என்று கருத முடியாது, வரி ஓரளவு தான் பயன்படும், மக்களின் வசதி வாய்ப்புகளும் பெருகவேண்டும். ஆகவே மத்திய அரசு பல தொழில்களில் போட்டிருக்கின்ற மூலதனத்துக்கான பலன் கிடைத்திட வழி செய்திட வேண்டும்;

மத்திய அரசு இரண்டாயிரம் கோடி ரூபாயில் பிலாய் ரூர்கேலா, சிந்திரி போன்ற தொழில்களில் தனது மூலதனத்தை முடக்கியுள்ளது. இந்த இரண்டாயிரம் கோடி ரூபாயும் எங்கிருந்து கிடைக்கும்? நீங்களும் நானும் வரியாகக் கொடுத்தது, அமெரிக்கா இங்கு கொடுத்தது, இப்படியெல்லாம் திரட்டப்பட்ட பணத்தை மூலதனமாக்கிப் போட்ட தொழில்களில் கிடைத்த லாபமென்ன?

கொடுத்த மக்கள் பலனைப்பெறவில்லை, கடன் கொடுத்த நாடுகளுக்கு வட்டியும் செலுத்தியபாடில்லை.

2000 கோடி ரூபாய் மூலதனம் போட்டு தொழில் பெற வேண்டிய அளவு பலன்களைப் பெற்றோமில்லை.

நீ செய்வதுதானே என்று கேட்பார்களானால் தமிழ் நாட்டிற்கு இருக்கும் தொழில்கள் என்ன? எப்படிப் பெறமுடியும் என்பதை உணரவேண்டும்.

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும் ஆவடி டாங்கித் தொழிற்சாலையும் திருச்சி கொதிகலன் தொழிற்சாலையும் துப்பாக்கித் தொழிற்சாலையும் மத்திய அரசுக்குச் சொந்தமானவை. நம்மிடம் இருப்பதெல்லாம் காஞ்சி சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலையும் மாலு செருப்புத் தொழிற்சாலையும் விருத்தாசலம் களிமண் பொம்மைத் தயாரிப்புத் தொழிற்சாலையும், தஞ்சையில் பனை ஓலையில் நேர்த்தியான பொம்மை செய்யும் நிலையமும், கோரைப்பாய் உற்பத்தி செய்யும் நிலையமும் இருக்கின்றன.

மிகப் பெரிய தொழிற்சாலைகள் யாவும் மத்திய அரசிடமே உள்ளன. உதகை பிலிம் தொழிற்சாலையும் நெய்வேலி பழுப்பு

நிலக்கரிச் சுரங்கமும் அவர்களிடமே. ஆகவே இரண்டாயிரம் கோடி ரூபாய் மூலதனம் முடக்கப்பட்டுள்ள இத்தொழில்களில் இருந்து வருவாயைப் பெருக்கினால் ஏழை எளிய மக்களை வாட்டுகிற வரிகளைக் குறைக்கலாம் என்று நான் அங்கு எடுத்துச் சொன்னேன்.

இந்தியப் பேரரசு தன் ராணுவச் செலவைக் குறைத்தே யாகவேண்டும் என்று நான் சொன்னபோது என்னை உற்றுப் பார்த்தார்கள்.

## இராணுவச் செலவு குறைக்கப்படல் வேண்டும்

பக்தவத்சலமாக இருந்திருந்தால்-நாட்டுப்பற்றற்ற பேச்சு என்று சொல்லியிருப்பார். எப்படியிருப்பினும் இந்திய அரசு ராணுவச் செலவைச் சிக்கனப்படுத்தியே ஆகவேண்டும்,

இந்தியாவுக்கு ஆபத்து வராத அளவுக்கு பாதுகாப்பைப் பலப்படுத்திச் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் ரூபாய் 100 கோடி வரை கிடைக்குமென்று நான் எடுத்துக் கூறினேன்.

பெரிய காங்கிரஸ்காரர்களெல்லாம் பதறுவார்கள்; சீனாக்காரனும் பாகிஸ்தான்காரனும் இருக்கும்போது இப்படியா பேசுவது என்று கேட்கக் கூடும்—சீனாக்காரன் அணுகுண்டு வைத்திருக்கிறானே அதைச் சமாளிக்க வேண்டாமா? என்று கேட்பார்கள். சீனாக்காரன் நம்மை நோக்கி வந்தால் அதே அணுகுண்டை வைத்திருக்கும் மற்ற நாடுகளின் உதவி நமக்குக்கிடைத்தே தீரும்.

அதுமட்டுமல்ல, 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவர்களுக்கு கட்டாய ராணுவப் பயற்சி அளித்து தேவையான போது எல்லைக்கு அனுப்பலாம்.

அந்த முறையில் பாதுகாப்பைப் பலப்படுத்தலாம். இதற்கு லட்சக் கணக்கான கழகத் தோழர்களைப் பயிற்சிக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்தேன்.

1. பாதுகாப்புச் செலவைக் குறைத்து சிக்கனப்படுத்துவது.

2. வருமான வரி செலுத்தாதவரிடமிருந்து அதை மீட்பது

3. 2 ஆயிரம் கோடி ரூபாய் மூலதன மிடப்பட்டுள்ள தொழில்களிலிருந்து வருவாய்பெறத் திட்டமிட்டுச் செயலாற்றுவது.

இம்மூன்று வழிகளைக் கடைப்பிடித்துச் செயலாற்றினல் கணிசமான அளவு நிதி கிடைக்கும்.

ஏழைகளை வாழவைக்க முடியும் என்று தமிழகத்தின் சார்பில் நான் தெரிவித்தேன்.

முன்னுள் தமிழக அமைச்சரும் தற்போதைய திட்டக்குழு உறுப்பினருமான ஆர். வெங்கட்ராமன் கூட்ட முடிவில் என்னை சந்தித்து உங்களது யோசனைகளைச் செயல்படுத்த முயல்வோம் என்று தெரிவித்தார்.

இந்தியாவின் ஒரு உறுப்பு என்கிற முறையில் இந்தியா முழுமைக்கும் ஆலோசனை கூறி உதவவேண்டிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்றும் வெங்கட்ராமன் என்னிடம் கூறினர்.

## எழுச்சி நாள் தரும் மகிழ்ச்சி

தமிழகமெங்கும் ஜூலை 23 ல் எழுச்சி நாள் கொண்டாடப் படுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் மகிழ்ச்சி அடையக் காரணம், இதை ஒரு கட்சிப் பிரச்சினையாகக் கருதாமல் காங்கிரசைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளும் சேலம்-தூத்துக்குடித் திட்டம் தேவைதான் என்று ஏற்றுக்கொண்டு கலந்து கொண்டிருக்கின்றன.

“இப்போது ஏன் எழுச்சி நாள்? நாட்டிலே வேறு பிரச்சினை இல்லையா?” என்று சிலர் கேட்கலாம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மக்கள் வயிற்றுப் பிரச்சினையை மறந்து விட்டு-உணவுப் பிரச்சினையை விட்டு விட்டு இதற்கு வந்து விடவில்லை. ஓரளவு அதைச் சீர்திருத்தி விட்டு ஏழைகள் முகம் மலர்ந்த பிறகுதான் இதற்கு வந்திருக்கிறோம். இந்தப் பிரச்சினைக்கு ஏன் வந்தோம் என்றால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எழுந்து வடிவில் இருக்கிறது. இரண்டு ஆண்டுகட்கு முன்பே பூர்த்தியாகியிருக்கவேண்டும். ஆனால் இன்னும் அது முழு வடிவம் பெறவில்லை. அதிலே உள்ளது தான் சேலம் இரும்பாலையும் தூத்துக்குடியும். இந்த எழுச்சி நாள் மூலமாவது அவர்கள் உணர வேண்டும்—உறுதி தர வேண்டும்.

சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியில் கனிவளம் ஏராளம் என்று ஆராய்ச்சியாளர்கள் 200 ஆண்டுகாலமாகச் சொல்லி வருகிறார்கள்.

வெட்ட வெட்டக் குறையாமல், எடுக்க எடுக்கத் தீராமல் ஏராளமாக இரும்பு இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் அதனை வெட்டி எடுத்து-உருக்கி - இரும்பாக்கி இங்கிலாந்துக்கு அனுப்பிப் பாலம் அமைத்துப் பார்த்து இருக்கிறார்கள்.

இதை அப்போதையத் தொழில் அமைச்சர் வெங்கட்ராமனிடம் சொன்னபோது அவர் அப்போதே கேலியாகப் பேசினார்— “அது இந்தச் சேலத்தின் இரும்பல்ல; அமெரிக்காவிலுள்ள சேலத்தின் இரும்பு!” என்று.

அவர் அதைக் கேலியாகச் சொல்லியிருக்கலாம். ஒரு வேளை உண்மையாக அப்படிச் சொல்லி இருந்தால், இவ்வளவு அறியாதவரா வெங்கட்ராமன் என்று அல்ல; அவரும் ஆட்சியில் இருந்தாரே என்றுதான் நாம் வருத்தப்படவேண்டும்.

கஞ்சமலைப் பகுதி இரும்பை எடுத்து சீமைக்கு அனுப்பி, வெற்றி கண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில்

இரும்புத் தாதை எடுத்து விறகைப்போட்டு வெப்பம் ஏற்றியி ருக்கிறார்கள். இப்போது நெய்வேலி நிலக்கரியை வைத்து உருக்காலை ஏற்படுத்தலாம் என்றால் " ஏ! அப்பா ; எவ்வளவு தூரத்துக்கு எவ்வளவு தூரம்!" என்கிறார்கள். ஆனால், இவர் களே அமைத்திருக்கும் உருக்காலைக்கு வெகுதூரம் சென்று தான் நிலக்கரி கொண்டு வருகிறார்கள்.

நெய்வேலி—சேலம் இரண்டையும் வைத்து நல்ல தர மான இரும்பை உருவாக்கலாம் என்றால் யோசிப்போம் ன் றார்கள். ஜம்ஷெட்பூரில் உள்ள இரும்பு ஆராய்ச்சி நிலையத் துக்கு அனுப்பி அதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய வேண்டு மென்றார்கள்—தமிழக மக்களும் காத்திருந்தார்கள். இது நல்ல தரமானது என்றும்-அதில் நல்ல இலாபம் கிடைக்குமென்றும் ஆராய்ச்சியாளர்கள் சொன்னார்கள்.

இந்த ஆராய்ச்சி போதாது என்று நார்வேயிலுள்ள ஆராய்ச்சிச்சாலைக்கு அனுப்பி இரும்பையும் நிலக்கரியையும் ஆராயவேண்டு மென்றார்கள். அனுப்பப்பட்டது. தமிழகத்து மக்களும் காத்துக்கொண்டிருந்தார்கள். இது உலகத்தில் இருக்கின்ற எல்லா நல்ல இரும்புகளையும் போலவே இலாபம் தரக்கூடியது என்றார்கள்.

அதற்குப் பிறகும் மௌனமாக இருந்தார்கள். " ஏன் இல்லை ?" என்று தமிழக மக்கள் கேட்டபோது " ஜெர் மனிக்கு அனுப்பவேண்டும்!" என்றார்கள். அவர்களும் இதே பதிலைத்தான் சொன்னார்கள்.

தமிழகத்து மக்கள் மறுபடியும் காத்திருந்தார்கள்.

இது மேற்கு ஜெர்மனியில் ஆராய்ச்சி செய்தது போதாது; கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்ப வேண்டும் என்றார்கள்.

## இரும்பின்
## திக் விஜயம்,

நம்முடைய இரும்பு போகாத இடமில்லை—அந்தக் காலத்தில் மன்னர்கள் திக்விஜயம் செய்வார்கள் என்பார்களே—அதுபோல நமது இரும்பு எல்லா இடங்களுக்கும் சென்று வந்தது.

பிறகு வெங்கட்ராமன் அமெரிக்காவுக்கு எடுத்துக் கொண்டுபோய் வந்தார். அவர்களும் இது நல்ல லாபம் தரக் கூடியது என்றார்கள். கட்டை போடாமல் நிலக்கரியைப் போட்டு எரித்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்றார்கள்.

எந்த மாநிலத்திலும் தயாரிப்பதைவிட இதைமலிவாகத் தயாரிக்க முடியும்—நாங்களே தயாரிக்க முடியும் என்றார் வெங்கட்ராமன்.

இவையெல்லாம் 1957 வரை உள்ள கதையை வேக வேகமாக நடைபோட்டுக் கூறி வந்தேன். இக்காலத்தில் காங்கிரசார் தான் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். இதுவரை கிடைக்கவில்லை என்பதால் தான் நாம் எழுச்சி நாள் கொண்டாடுகிறோம்.

" இந்த விவரங்களை எல்லாம் இவர்கள் மக்களிடம் சொல்வார்களே—இதனால் நம் பிரச்சினை வெட்ட வெளிச்சமாகி விடுமே '' என்பதால் தான் காங்கிரசார் இதை எதிர்க்கிறார்கள்.

கஞ்சமலைப்பகுதியில் 25000 ஏக்கர் நிலத்தை சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகளைப் போட்டு ஆராய்ச்சி செய்து ஏராளமான பணத்தைச் செலவு செய்து விட்டு இப்போது இல்லை என்றால் என்ன பொருள் ?

4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும்பாலை உண்டா இல்லையா என்பதைத் திட்டவட்டமாக மத்திய அரசு தெளிவுபடுத்திட வேண்டும். இப்போது எங்களால் முடி-

யாது என்று சொல்லி விட்டால்—தமிழக அரசு அதனை நிறை வேற்றத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அன்னியச் செலாவணி-வெளிநாட்டுக் கடன், ரூபாய் மதிப்புக் குறைப்பு இவைகளை மத்திய அரசு கண்டிப்பாக காரணமாகக் காட்டக்கூடாது.

சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக-ஜப்பானிலிருந்து வந்த நிபுணர்கள் என்னை ஒரு மாதத்திலே யே நான்கு ஐந்து முறை சந்தித்துவிட்டார்கள்-இதற்குத் தேவைப்படுவது எழுபது கோடி ரூபாய் உள்நாட்டுப் பணம். இதை நான் ஐந்தாறு தொழில் நிறுவனங்கள்-பாங்குகளி லிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளமுடியும். அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை.

## வற்புறுத்தத் தவறியவர் வருத்தம் அடைதல் நியாயமா ?

நேற்றைய தினம் ஆளுங்கட்சியாக இருந்து-இன்றைய தினம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் எழுச்சி நாளுக்காக வருத்தப்படுகிறார்கள். அவர்கள் ஆளுங்கட்சி யாக இருந்த காலத்தில் இந்த இரண்டு திட்டங்களுக்காக வும் மனுப்போட்டுக் கொண்டிருந்தார்களே தவிர வற்புறுத்தத் தவறி விட்டார்கள். வற்புறுத்தியிருந்தால் மத்திய அரசு இந்நேரம் உணர்ந்திருக்கும். ( இன்றைக்கு அந்த வேலையை நமக்குத் தந்திருக்கிறார்கள்,

எல்லாக்கட்சிகளும் பங்கேற்பதைப் பார்த்த பிறகும் " ஒரு ஆட்சியை நடத்துகிறவர்கள் இப்படி எழுச்சி நாள் நடத்த லாமா ?" எனக் காங்கிரசார் கேட்கிறார்கள்.

பல்லக்கிலே போகின்றான் ஒருவன்-பாதையிலே குழந் தை ஒன்றை ஓநாய் கடித்துக் கொண்டிருக்கிறது. உடனே அவன் பல்லக்கை விட்டு இறங்கி குழந்தையைக் காப்பாற்ற முயற்சி செய்தால் " ஐயோ பல்லக்கில் செல்லும் உனக்கு ஏன்

இந்த வேலை" எனக் கேட்பதில் அர்த்தமில்லை. அவன் குழந்தையைக் காப்பாற்றுவிட்டால் அனுக்குப் பல்லக்குக் கொடுப்பதே பாதகமாகிவிடும். குழந்தையை ஒநாயிடமிருந்து காப்பது மூலம் -பல்லக்கில் சென்றாலும் பாதையை மறக்கவில்லை என்று பொருள்.

அரசை ஏற்றுக்கொண்டு விட்டோம்—பதவி கிடைத்து விட்டது—"இனி என்ன? சேலம் தூத்துக்குடித் திட்டம் கிடைத்போது தகிடைக்கட்டும் என்று விட்டு விட்டால் என்னைப் போல அற்பன் யாருமே இருக்க முடியாது.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஏராளமான சொத்துக்களைப் பர்மாவில் விட்டு விட்டு இங்கு வந்திருக்கிறார்கள்.

அதற்கான நட்ட ஈட்டுத் தொகை பர்மா அரசாங்கத்திடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். மத்திய அரசு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக மத்திய அரசை வற்புறுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

இப்படி வசூலிக்கப்பட வேண்டிய நட்ட ஈட்டுத்தொகை சுமார் 50 கோடி ரூபாய் இருக்குமென்று கருதப் படுகிறது.

இந்த 50 கோடி ரூபாயும் கிடைத்தால் அதை இந்த நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குப் பயன் படுத்தலாம்.

தூத்துக்குடித் துறைமுகத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் நெல்லை, ராமநாதபுரம் மதுரைமாவட்டங்கள் வளர்ச்சி அடையும். வேலை இல்லாத் திண்டாட்டம் போகும்.

தூத்துக்குடி துறைமுகம்-அதையடுத்து சேதுக்கால்வாய் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படுமானால் தென் பாண்டிய நாடு வளம்பெறும். தூத்துக்குடி இன்றும் மீன்பிடி துறைமுகமாக இருக்கிறது. ஆழ்கடல் துறைமுகமாக இல்லை. தமிழக அரசு இனியும் சகித்துக் கொண்டிருக்காது.

தூத்துக்குடி உப்பு, தொழில் துறைக்குப் பயன்படும். ஜப்பான் நாட்டுக்கு எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

20 கோடி ரூபாய்க்குத் துறைமுகத் திட்டம் முடியும் என்றார்களே தவிர, அக்கறைகாட்டாமல், " இதோ வருகிறது அதோ வருகிறது " என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். சேலம் இரும்பு ஆலை 1967-ல் வரும் என்றார்கள்; அதுவும் வரவில்லை !

சேலம் இரும்பாலை, தூத்துக்குடித் துறைமுகம் ஆகிய திட்டங்களுக்காக மத்திய அரசை எதிர்த்து எல்லா அமைச்சர்களும் சிறை செல்லத் தயாராக இருக்கிறோம். இதை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தன் வீட்டுக் கதவைத் தட்டுதல் நியாயம்

எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள். டெல்லியைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது ? தன் வீட்டுக் கதவைத் தட்டுவானே தவிர எதிர் வீட்டுக் கதவையா தட்டுவான் ?

மாமியார் பீரோவைப் பூட்டி, சாவியை முந்தானையில் முடிந்து இருக்கும் போது, விருந்தாளிக்கு காபி கொடுக்க வெள்ளித் தம்ளரை எப்படி எடுக்கமுடியும் ? சாவிக்கு மருமகள் மாமியாரைக் கேட்காமல் எதிர்வீட்டு அலமேலுவையா கேட்பாள் ? பெட்டிச்சாவியை கீழே போட்டு விட்டு தேவையானதை எடுத்துக் கொள்ளட்டும்.

## ஜனநாயகம் உயிர் வாழ......

மேற்கு வங்க அரசு டில்லியிலுள்ள மத்திய அரசினால் கலைக்கப்பட்டது பற்றி என்னிடம் கருத்துக் கேட்கப்பட்டது.

நான் அதற்குப் பதில்தரும் வகையில் "அந்தச் செயல் அரசியல்சட்டப்படியும் தவருனது; அரசியல் சித்தாந்தப்படியும் தவருனது; நெறிமுறைகளின் படியும் தவருனது என்பேன்!

மேற்கு வங்க அரசு கலைக்கப்பட்டது என்ற செய்தியைக் • கேட்க நான் ஏமாற்றமடையவுமில்லை; அதிருப்தி அடையவும் இல்லை. ஏனெனில் டில்லியின் போக்கை நான் உணர்ந்திருக்கிறேன்,

இந்தச் செயல் உலகுக்கு எதைக் காட்டுகிறது? இந்தியாவில் ஜனநாயகம் உயிர் வாழ்வதற்காக போராட வேண்டிய நிலைதான் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது!

இந்தியாவில் ஜனநாயகம் இன்னும் பலவீனமான நிலையில் இருக்கிறது என்பதைத்தான் மக்கள் ஆதரவைப் பெற்ற மேற்கு வங்க அரசு கவிழ்க்கப்பட்டது நமக்கு உணர்த்துகிறது!

## பொறுத்துப் பார்ப்போம்

மேற்கு வங்கத்தில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றிருக்கிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அங்கு அந்த அமைச்சரவையும் கவிழ்ந்தால்—குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படலாம்! அந்த ஆட்சிதான் எவ்வளவு காலத்திற்கு நிலைத்துவிட முடியும்? ஆறு மாதங்கள்—அல்லது ஒரு வருடம் இருக்கலாம்! அதற்குப் பிறகு...?

மக்களிடம் வந்துதானே ஆகவேண்டும்? உன் கொள்கைகளுக்கு — நடவடிக்கைகளுக்குத் தீர்ப்புத் தர வேண்டி சந்தைச் சதுக்கத்திற்கு நீ வந்துதானே ஆகவேண்டும்!

நான் வங்கத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன்? சரி; வரட்டும் மற்ருெரு அமைச்சரவை! —என்று விடு

வதோடு மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை அந்த அரசு தரவேண்டும் என்று வலியுறுத்தியிருப்பேன்,

அதற்கு உன் ஒத்துழைப்பு வேண்டும் - என்று அவர்கள் கூறுவார்கள்;

"என் ஒத்துழைப்பு உனக்கு ஏன்? மக்களுக்குச் சரிவர உணவு முதலிய தேவைகளைத் தர முடியாத நீ - மக்களின் ஆதரவு பெற்ற அஜாய் முகர்ஜி அமைச்சரவையைத் தூக்கி எறிந்து விட்டு - கோஷ் அமைச்சரவையை கொண்டு வந்தது ஏன்? இதுதான் ஜனநாயகமா? - என்று டில்லி அரசு வெட்கித் தலை குனியும்படியாகக் கேட்பேன்!

இப்போது ஜனநாயகம் என்ற சொல் பரவலாக பயன் படுத்தப்படுகிறது. மேற்கு வங்கத்தில் அரசு கலைக்கப்பட்டதைப் பற்றி அரசியல் தலைவர்கள் 'ஜனநாயகம் கொலை செய்யப்பட்டு விட்டது" என்று கூறுகிறார்கள். ஆனால் கலைப்ப தற்கு உத்தர விட்டவர்கள் "ஜனநாயகத்தைக் காப்பாற்ற உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது" என்று கூறுகிறார்கள்.

ஆகவே இதில் எது உண்மை? எது ஜனநாயகச் செயல் என்பதை எண்ணிப் பார்த்திடவேண்டும்!

மேற்கு வங்கத்திலும் அரியானாவிலும் நடத்தப்பட்ட செயல் களுக்கு யார் பொறுப்பானவர்கள்; யார் தவறு செய்தவர்கள் என்று என்னிடம் கேட்கப்பட்டது.

நான் கூறினேன் - இருதரப்பிலும் சரியான செயல்களும் இருக்கின்றன; இரு தரப்பிலும் தவறுகளும் இருக்கின்றன;

இது வேடிக்கையான கருத்தாக இருக்கலாம். கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் அதிலுள்ள கருத்து புரியும்!

டில்லிப் பேரரசு காங்கிரசல்லாத அரசுகளை கவிழ்க்க முயற்சி எடுத்தது தவறுதான். அதுபோலவே பதவி மிட்டாய் களுக்காக கட்சி மாறுபவர்களை கூட்டணியில் வைத்துக் கொண்டதும் தவறுதான்! 24 மணி நேரத்தில் அமைச்சராக

இருந்து - பிறகு எதிர்க்கட்சிக்குப்போய் - அதன் பிறகு திரும்பு பவர்களை வைத்துக்கொண்டிருந்ததும் தவறுதான்!

கவர்னருக்கு அமைச்சரவையைக் கலைக்கும் அதிகாரம் இப்போது இருப்பதாகக் கூறலாம். ஆனால் அது தேவைதானா; சரிதானா - என்பதை சுப்ரீம் கோர்ட்டின் கருத்தைக் கேட்க வேண்டும்!

பொதுவாக இந்த அரசியல் நிகழ்ச்சிகள் காட்டும் பாடம் - இந்தியாவில் ஜனநாயகம் ஆட்சியாளரால் கீழ்நிலைக்கு தள்ளப்படுகிறது என்பதுதான்!

மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி நிலத் தகராறு நடைபெற்ற போது டில்லி தலையிடவில்லை; கேரோக்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றபோது டில்லி தலையிடவில்லை!

ஆனால், நக்சல்பாரி இல்லாதபோது - கேரோக்களை அனுமதிக்க மாட்டேன் என்று முதலமைச்சர் அஜாய் முகர்ஜி கூறிய பிறகு இந்தக் கலைப்பு உத்திரவு வரக் காரணம் என்ன?

இந்தச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்; இந்தக் குழப்பம் தெளிவுபட வேண்டும்; இந்த அறைகூவலுக்கு பதில் கிடைத்தாக வேண்டும்!

## டில்லியின் செய்கை
## தெரிவிக்கும் கொள்கை

வெளிப்படையாக டில்லிப் பேரரசின் செயல் நமக்கு அறிவுறுத்துவது இதுதான்

எந்த ஒரு காங்கிரசல்லாத அரசாங்கமும் நெடுங்காலம் இயங்குவதை டில்லி அரசு பார்த்துக் கொண்டிருக்க சகிக்காது! மேற்கு வங்கத்திலும் ஹரியானாவிலும் நடந்த அரசைப் பற்றி மக்களுக்கு எந்தவிதமான அதிருப்தியும் இல்லை. ஆனால் சிலருக்கு அது பிடிக்கவில்லை. ஆகவே அரசுகள் கலைக்கப்பட்டன. இன்றுள்ள அரசியல் சட்டம் எந்த மாநில மக்கள் அரசையும் கலைக்கும் அதிகாரத்தை டில்லிக்குத் தந்துள்ளது.

# தொழிலும் தொழிலாளரும்

# நாம் ஜப்பானையும் மிஞ்சலாம்

நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு வேர்வை ஆருகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிருர்கள். இயற்கை வளத்தைப் பயன் படுத்தி தொழில் திறனை உண்டாக்குபவர்கள்—தொழிற் சாலையை நடத்துபவர்கள் இருக்கிருர்கள்.

திடீர்ப் புரட்சி செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாத நாடு இந்த நாடு! பிறகு ஏன் மந்த நிலையில் தொழில் நடைபெறுகிறது? எந்த விதத்தில் வேலை செய்தால் தொழில் வளருமோ—அப்படியில்லாமல் இருப்பதால் தான் குறை ஏற்படுகிறதே தவிர வேருென்றுமில்லை.

திட்ட மிட்டுச் செயலாற்றிஞல் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம்நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்து விட்டன. தொழிலாளர்கள்* இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிருர்கள்.

பாரதி சொன்ஞர் தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்ருல் தெய்வங்களல்ல. உற்பத்தி செய்பவர்கள். உற்பத்தி செய்வதுதான்- ஆக்குந்தொழில் தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும்.

அதைப் போல் தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத் தான் இருக்க வேண்டுமென்று; நினைத்தால்-தொழில் இருக்கும் ஆஞல் வளமிருக்காது.

தொழிலாளர் உரிமைகளையும், அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கின்ருேமோ அவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகா

மல் செயல் படுமானால் தொழிலைப் பெருக்கலாம், தொழிலா ளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்க வேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்! முன்பு முதலாளிகளைத் தொழிலாளர்கள் பார்க்க முடியாது கோயில் நந்திபோல எட்டுப் பேர் வெளியே காவற்காரர்கள் என்ற பெயரில் இருப்பார்கள்.

## இயந்திரத்தை மட்டும் பேணினால் போதாது!

ஆனால் இன்றிருக்கும் முதலாளிகள் காலம் போகிற போக்கிற்கு ஏற்றவாறு நடப்பவர்கள். கல்வித்திறன் மிக்க வர்கள். அதனால் தொழிலாளர் உரிமைகளை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தொழிற்சாலையில் ஓடுகின்ற இயந்திரம் நாள்தோறும் எழுப்புகின்ற ஒலிக்கு மாறுபாடாக—பழக்கமில்லாத சத்தத் தை எழுப்பினால் " என்ன இது, என்றுமில்லாமல் இன்று புது விதமாக ஒலி எழுப்புகிறதே" என அதை நிறுத்தி—அதைப் பழுதுபார் என்று முதலாளி சொல்வார். அப்படிப் பழுது பார்த்தால் தான் இயந்திரம் கெடாமல் இருக்கும்; இயந் திரம் கெட்டால் தொழில் கெட்டுவிடும்.

எண்ணெய் விடவேண்டிய இடத்தில் எண்ணெய் விட்டு —மரையை இறுக்க வேண்டிய இடத்தில் இறுக்கி வைத்து —துடைக்க வேண்டிய இடத்தில் துடைத்து இயந்திரங் களைப் பாதுகாப்பதுபோல் முதலாளிமார்கள் தொழிலாளர் களைப் பாதுகாக்க வேண்டும்.

தொழிலாளி கண்கலங்கினால் " ஏன் உன் கண்கள் சிவந்திருக்கிறது-ஏன் இறைக்க இறைக்க இப்படிப் பெருமூச்சு விடுகிறாய்?" என்று கேட்கவேண்டும் — " எவ்வளவோ பெரிய பயங்கரங்களையெல்லாம் தூக்கும்போது இல்லாத சோர்வு இப்பொழுது ஏன் வந்தது?" என்று அவன் முகம் மலரும் விதத்தில் பரிவோடு கேட்டு ஆவன செய்

தால் தொழில் கெடுமா ? இல்லை தொழில் நிறுத்தம் தான் ஏற்படுமா ?

## நலிந்த தொழிலாளி மாண்டால்...?

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டியானால் கூட சுட்டு விடுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதுபோல தொழிலாளர் நலிவடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்த பின்பு அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால் நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால் அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது ?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால் மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம் தான் செய்கிறது. நூற்றில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிலாளர் கோரிக்கைகளில் ஏதேனும் ஒன்றையாவது முதலாளி நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பதில்—கோரிக்கைகளைக் கவனிக்காமல் முடியாது போ என்றால் உழைப்பாளர்கள் எல்லாமே வேண்டுமென்று தான் சொல்வார்கள்

## நீதி இருக்குமிடத்தில் நானிருப்பேன்

அந்த வேளையில் என்னிடம் வந்தால் நீதி எங்கே இருக்கிறதோ அங்கே நானிருப்பேன். அப்படி நான் நீதி எங்கேயிருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்பதற்குள் பலர் வீட்டு அடுப்படியில் பூனைகள் தூங்கிக் கொண்டிருக்கும்.

## பார்த்தாலே நோய்தீர்க்கும் மருத்துவமனை

தொழிலாளர் நலன்பேணும் மருத்துவமனைக் கட்டிடங்களை பார்த்தாலே அதனைத் தேடி வருகிற நோயாளிகளுக்கு பாதி நோய் குறைந்துவிடும். நோயாளிகளுக்கு அத்தகைய நம்பிக்கை தருவதாக கண்கவர் வனப்புடன் அவை நிகழ்கின்றன.

நான் எனது இளவயதில் சில மருத்துவமனைகளைப் பார்த்திருக்கிறேன், அதற்குள் போய்விட்டுத் திரும்பினாலே பழைய நோயுடன் புதிய நோய் வந்துவிடும். அவ்வாறின்றி இந்த மருத்துவமனை பொலிவுடன் இருப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு இதுவரை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் பங்கு பெறும் தொழிலாளருக்கு மட்டும் மருத்துவ உதவி தரப்பட்டது. இனி அவர்களின் குடும்பத்தாருக்கும் மருத்துவ உதவி கிடைக்கும் என்பதறிந்து மகிழ்கிறேன். சென்னை சுற்றுப்புறங்களில் இன்று 7 புதிய மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. கோவை மதுரை ஆகிய இடங்களிலும் இத்திட்டம் பயனுற நடைபெற்று வருகிறது.

தொழிலாளர் நலன் பேணிக் காப்பதில் தமிழக அரசுக்கு உள்ள தலையான விருப்பம் இவற்றின் மூலம் விளங்கும், தொழிலாளர்களுக்கும் சமூகத்துக்கும் இத்திட்டம் பெரிய வாய்ப்பாக விளங்கும்.

தொழிலாளர்களுக்கு மட்டும் மருத்துவ உதவி தந்துவிட்டு அவர்களது குடும்பத்தின் நலிவு நீங்காதிருந்தால் ஒரு பயனும் கிடைக்காது, இந்தப் புதிய திட்டத்தின் மூலம் இதுவரை 1 லட்சம் பேருக்கு கிடைத்து வந்த மருத்துவ உதவி தொழிலாளர் குடும்பத்தினரையும் சேர்த்து இனி 6 லட்சம் பேருக்கு கிடைக்கும்.

தொழிலாளர் சமூகம் நல்ல பலம் பெற்ருல் அவர்கள் ஈடு பட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும். செல்வம் வளரும்.

எனவே தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும் அது சமூகத்துக்கு ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீன கருவிகளைப் பற்றி மத்திய அரசினர் கூறுகிருர்கள், அதையும் மனிதன்தான் செய்தான் என்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் ஒரு அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி அவனது கண்களில் கண்ணீர் - அவனது நெஞ்சத்தில் வலி - அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால் அந்த மனிதயந்திரத்திடமிருந்து முழுப்பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்த மனிதன் இயந்திரத்தை கவனித்தால் அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தமிழகத்து மருத்துவர்கள் நல்ல நிபுணர்கள், தமிழக மருத்துவர்கள் இந்தியாவில் மட்டுமின்றி வெளி நாட்டிலும் தலைசிறந்த மருத்துவர்கள் என்ற பாராட்டைப் பெற்றுள்ளார்கள்.

இந்த மருத்துவமனை பற்றி டாக்டர் குமாரவேல் என்னிடம் விவரம் கூறினர். அழகான கட்டிடம், கருவிகள் உள்ளன, ஆனல் டாக்டர்கள் போதுமான அளவு இல்லை என்ருர்.

## டாக்டரில்லா மருத்துவமனை தோகையில்லா மயிலைப் போல

கட்டிடம் என்னதான் அழகாயிருந்தாலும், கருவிகள் எவ்வளவு இருந்தாலும் மருந்துகள் ஏராளமாக இருந்தாலும் டாக்டர்கள் இல்லாத மருத்துவமனை தோகையில்லாத மயிலுக்குச் சமானமாகும்,

இது குறித்து மருத்துவ இலாகா செயலாளர் அனந்தபத்மநாபனிடம் பேசினேன். தேவர்கள்கூட சங்கடம் வரும்போது அனந்த பத்மநாபனிடம்தான் போனதாகச் சொல்வார்கள். அவரிடம் இந்த மருத்துவமனைக்கு மருத்துவ நிபுணர்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சொன்னேன். அவருடைய செயல் திறமையினல் இன்று 25 நிபுணர்கள் இங்கு வர ஏற்பாடு ஆகியுள்ளது.

இங்குள்ள மருத்துவர்களும் மற்றப் பணியாளர்களும் தொழிலாளர் மனம் நோகாது பணியாற்றி வருவார்கள் என்று நான் நம்புகிறேன். மருத்துவமனையில் தொழிலாளர்கள் எப்படி நடத்தப்படுகிருர்கள் என்பதுபற்றி டாக்டர் குரோனின் என்பவர் சிடாடல் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். அது ஏட்டோடு இருந்துவிட வேண்டும், நாட்டில் இல்லை என்ற அளவு கடமையோடும் திறமையோடும் பணிபுரியவேண்டும்.

## வாழ்த்துரை மட்டும் தானு...?

இத்திட்டத்துக்கு தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் பணம் தருகிருர்கள். இதன் மொத்த செலவில் முக்கால் பங்கை தொழிலாளர் ஈட்டுறுதி திட்ட நிறுவனமும் கால் பங்கை மாநில அரசும் வழங்குகிறது, மத்திய அரசு எதையும் வழங்குவதில்லை. இதை ஒரு குறையாகக் கூறவில்லை.

இந்த நல்ல காரியத்தில் அவர்களும் பங்கு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மத்திய அரசின் நண்பன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கட்டிடத்தை வந்து பார்க்கும்போது 2 வது மாடி, யார் கட்டியது என்ருல் மாநில அரசும் இந்த நிறுவனமும் கட்டியது என்று சொல்வார்கள், மத்திய அரசு என்ன செய்தது என்று கேட்டால் வாழ்த்துரை வழங்கியது-நல்லுரை கூறியது-நல்லெண்ணம் தெரிவித்தது என்று சொன்ருல் - வேறு எதுவும் கொடுக்கவில்லையா என்று கேட்பார்கள்.

இங்கே வந்துள்ள இத்திட்டத்தின் அகில இந்திய பொறுப்பாளர் மத்திய அரசிடம் சொல்லி 4 வது மாடியைக் கட்டிக்கொடுக்க மத்திய அரசின் உதவியைப் பெற்றுத்தர வேண்டும்.

நாட்டிலுள்ள மருத்துவர்களுக்கு ஒரு சிறிய யோசனை கூறிக்கொள்வேன். இன்று தொழில் பரவி வரும் பகுதிகளில் புதுவகை நோய்கள் ஏற்படுகின்றன; அவற்றைத் தடுக்க கட்டுப்படுத்த அரிய ஆலோசனைகள் கூறவேண்டும்.

இரண்டு மாத காலத்துக்கு முன் ஒரு மாவட்டத்துக்குப் போயிருந்தேன். அந்தப் பிரச்னை இன்னும் முடிவடையாதிருப்பதால் அந்த மாவட்டத்தின் பெயரைச் சொல்லவில்லை, அங்கு துவக்கப்பட்டுள்ள புதிய தொழிற்சாலையின் கழிவு நீர், வாய்க்கால் வழியாக ஓடி வழியிலுள்ள பயிர் கருகி விடுகிறது - கழிவு நீரை வேறு வழியாக விடலாமே என்று சொன்னதற்கு வேறு இடமில்லையே என்று தொழிலதிபர்கள் கூறுகிருர்கள். இது போல தொழில்கள் வளர வளர புதிய பிரச்னைகள் புதிய நோய்கள் உருவாகின்றன. அவைகளையெல்லாம் தடுப்பதற்கு நுண்ணறிவைப் பயன்படுத்த வேண்டும்.

இன்று பல நோய்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. மலேரியா கட்டுக்கடங்கி - களைந்தெறியப் பட்டுவிட்டது என்ற நிலையை அடைந்துவிட்டோம், அதுபோலவே காச நோயும்;

முன்பு காச நோய் வந்தவர்களை வீட்டிலிருப்பவர்கள் பார்த்தால் அழுவார்கள். இன்னும் எத்தனை மாதம் எத்தனை வாரம் எத்தனை நாள் உயிர் வாழ்வாரோ என்று அஞ்சுவார்கள். அந்த பயத்தைப் போக்கி இருக்கிறோம்.

இன்னும் மருத்துவர்களே கண்டு பயப்படும் நோயாக புற்று நோய் இருந்து வருகிறது. அதுவுங்கூட ஆரம்ப காலத்திலேயே வந்தால் குணப்படுத்தி விடலாம் என்று கூறுகிறார்கள். மருத்துவ வித்தகர்கள் முறையாக ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

இந்த மருத்துவமனை அதிகாரிகள் தொழிலாளர்களின் நலிவு நீங்கும் வகையில் அன்போடு பணிபுரிந்து வெற்றி பெற வேண்டும்.

## ஆற்றல்
## நம்மிடம் உண்டு.

வெற்றிமேல் வெற்றியைக் குவித்துள்ளது சில நிறுவனம். தரம்மிக்க பொருள்களை உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமல்லாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யுமளவுக்கு சில தொழில் நிறுவனம் உற்பத்தி செய்தளிக்கிறது. இதிலிருந்து தக்க வசதிகள் அளிக்கப்பட்டால் உலகம் எதிர்நோக்கும் காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் நம்மிடமுண்டு என்பதை இது காட்டுவதோடு, தொழில் முன்னேற்றத்தில் நமக்கு ஒளிமிகுந்த எதிர்காலம் உண்டு என்பதையும் காட்டுவதாக உள்ளது.

ராணுவத்திலே, அரசியலிலே வளர்ந்த இதர நாடுகளின் வரிசையில் நாம் இல்லாதிருக்கலாம். ஆனால் தொழில்களுக்குத் தேவையான அறிவிலோ ஆற்றலிலோ நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல.

ஆயினும் பொதுத்துறைத் தொழில்கள் ஏன் முன்னேற்றம் காண்பதில்லை என்ற கேள்வி என்னுள் எழுகிறது. அவற்

றின் வெற்றிக்கு முதலில் சரியான வகையில் திட்டமிடப்பட வேண்டியது அத்யாவசியமாகும். சில நிறுவனம் பொருள்களை நல்ல தரத்திலும் அளவிலும் உற்பத்தி செய்தளிப்பதோடு அரசு தான் நடத்துகிறதொழில்களைப்பற்றி சிந்தித்திடவும், அதன்மூலம் நற்பலன் காணவும் தகுந்த கருத்தையும் அளித்து சிந்தனையைத் தூண்டியுள்ளன.

## கனிவளம் குறைவல்ல

''நமது நாடு வறுமையும் வாட்டமும் மிகுந்த நாடு-இங்கு கனிவளங்கள் குறைவு என்றாலும் புதிய தொழில்களைத் துவக்கி வெற்றி ஈட்டும் துணிவுடைய தொழிலறிந்தோர் பலரையும் நாட்டுக்கு இப்பகுதி வழங்கியுள்ளது'' என்று திட்ட அமைச்சர் அசோக் மேத்தா அண்மையில் மேட்டூரில் பேசும்போது குறிப்பிட்டார். கனிவளம் குறைவு என்ற அவரது கூற்றை நான் ஏற்க மாட்டேன். சேலத்து இரும்பும் பாக்சைடும் திருச்சியின் ஜிப்சமும் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலும் வருமே-நம்மிடம் தோண்டி எடுக்கப்படாத இன்னும் ஏராளமான கனிவளம் உள்ளது. அரசியலில் நிதானமும், நிலையான நிர்வாக அமைப்பும் கொண்ட பகுதி இது-நம்மைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்த ஏதேனும் ஒரு சக்தி குறுக்கே வந்தாலொழிய நாம் சிறந்த வெற்றிகளைச் சாதிப்போம் என்பது உறுதி. ஒளி மிகுந்த எதிர்காலம் நம் முன் உள்ளது.

வடக்கே துர்காபூர் என்றும் ரூர்கேலா என்றும் திட்டமிடுமுன் தென்னகத்தில் உள்ள இத்தகைய தொழில்களை மத்திய அரசினர் வந்து பார்க்கட்டும். நாட்டினரிடையே நிலவுகின்ற வறுமையும் அறியாமையும், அழுக்கும், வேலையின்மையும் அகற்றப்பட இம்மாதிரி இன்னும் பல தொழிற்கூடங்கள் அமைய வேண்டும்.

துறைமுகத் தொழிலாளர் எவ்வளவு கடுமையான வேலை செய்கிறார்கள் என்பதை எல்லோரும் உணர்ந்திருப்போம். அவர்கள் செய்யும் வேலை மிகவும் முக்கியமானது. நாட்டின் உயிர் நாடி போல விளங்கக் கூடியவை துறைமுகங்கள். அதிலும் சென்னைத் துறைமுகம் முக்கிய பங்கை வகிக்கின்றது.

கடுமையாக உழைக்கும் அத்தொழிலாளிகளுக்கு அவர்களது அடிப்படைத் தேவையான குடியிருப்பு வசதிக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நான் வீடுகளில் ஒன்றைப் போய்ப் பார்த்தேன். சிறந்த வசதிகளோடு கூடிய அவ் வீடுகள் குறைந்த வாடகைக்கு விடப்படுவது அதன் சிறப்பு! சிறியவர்கள் விளையாடி மகிழவும் இயற்கை அழகைப் பருகவும் பூங்காவை அங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்ற குடியிருப்பு வசதிகள் எல்லாத் தொழிலாளிகளுக்கும் கிடைக்க வேண்டும். பல லட்சம் செலவிட்டு அங்கு நடந்துள்ள வேலைகளை எண்ணிப்பார்க்கும்போது துறைமுகத் தொழிலாளரில் 100 க்கு 11 சதவிகிதம் பேருக்கு மட்டுமே வசதி கிடைத்துள்ளதென்று அறிகிறோம். அக்காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று, பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு அவ்வசதி ஏற்பட வேண்டும்.

## நிம்மதியான வாழ்வுதான் நேர்த்தியான தொழிலைப் படைக்கும்

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால் தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனதோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில் நேர்த்தியிருக்காது—தரம் இருக்காது—பயனும் கிடைக்காது.

இயந்திரங்களை எந்த அளவு நேர்த்தியாக வைத்துக் கொள்கிறோமோ அந்த அளவு அவற்றிலிருந்து பயன்பெற முடிகிறது.

இதை நல்ல முறையில் துறைமுக டிரஸ்ட் உணர்ந்து செயல்பட்டுள்ளது அறிந்து மகிழ்ச்சி. மத்திய சர்க்காரும் இப்பணிக்கு கடனுதவியும் மானியமும் வழங்கியுள்ளது-இது போல இன்னும் கட்டிடங்கள் எழவேண்டும் — துறைமுக டிரஸ்ட்டின் முயற்சிகளுக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

நமது நாட்டில் தொழில்கள் வளர இயற்கையோடு ஒட்டி வாழுவது குறைக்கப்பட்டு வருகிறது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப்பசேலென்ற காட்சியும் பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டிவாழுதலே உடலுக்கு நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர்—ஆனல் நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டிடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிரோம். தொழில்கள் அதிகமாகி வரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஆனல் இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது-தொழில் வளர்ந்தால் தான் பொதுச் செல்வம் ஏற்படும்—அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்-ஆகவே தொழில்கள் வளருவதால் உண்டாகும் கேடுகளைத் திட்டமிட்டு நீக்கிட வேண்டும்.

இங்கு எவ்வளவு கருத்தோடு இந்தக் குடியிருப்பு அமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கும்போது எனக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்படுகிறது. பாழுங்கிணறு இருந்த இடத்தைப் பயனுள்ள தோட்டமாக ஆக்கியிக்கிருர்கள்-துறைமுக டிரஸ்ட்டின் அதிபர் இதை விளக்கினுர்.

## பூங்காற்று
## வீசும் தோட்டம்

தொழிலாளரது வாழ்வானது பாழ்நில்மாக அல்லாமல். பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

செய்த காரியங்கள் கொஞ்சம். செய்து முடிக்கவேண்டிய காரியங்கள் ஏராளமாக உள்ளது. அந்த வடிவத்தின் பிரம்மாண்டத்தைக் கண்டு நாம் மலைத்துத் திகைத்துவிடலாகாது-நம்பிக்கையோடு இயன்றவரை காரியம் செய்வோம்.

தொழிலாளர்கள் தங்களது வாழ்க்கையில் ஏற்றம் பெற வேண்டுமென்ற என் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிக்கல் உள்ளது நூல்!**

இந்தக் கைத்தறித் தொழிலில் தொடர்பும் அக்கறையும் (அமைச்சர்) பொறுப்பேற்றுக் கொண்ட இந்த நேரத்தில் மட்டுமல்ல! அதற்கு முன்பிருந்தே எனக்கு இருக்கிறது. இதற்குரிய ஒரு காரணம் - நான் பிறந்து - வளர்ந்து - வாழ்கிற காஞ்சிபுரம் - நெசவாளர்கள் நிறைந்து வாழ்கிற பகுதியாகும்! காஞ்சிபுரம் என்பது நெசவாளர்கள் நிரம்பிய பேட்டைகளும், கடை வீதிகளும் அதை நம்பி வாழும் மக்களும் நிரம்பியதுதான்!

பல ஆண்டுக் காலமாக அவர்களது கஷ்டங்களை நேரடியாக உணர்கிற காரணத்தால் அந்தத் தொழிலில் தொடர்ந்து நான் அக்கறை காட்டுவது இயற்கை. நெசவாளர்களது கஷ்டங்கள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருக்கின்றன - என்றும் அதற்கான சரியான பரிகாரங்கள் கிடைக்கவில்லை என்றும் இங்கே கூறினார்கள். நூல் - எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல்கொண்டதுதான். பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும் வசதியும் - விஞ்ஞான கருவிகளின் உதவியும் கிடைக்காதபோதும் கூட - நேர்த்தியான -மெச்சத்தக்க துணிகளை கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்!

ஆலைத் துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப் பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாரா கின்றன.

நெசவாளர்களது எதிர் காலத்தை கவனித்து – வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்பட தக்க பிரச்சினை என்றாலும் –

## காலத்தோடு ஒட்டியது கைத்தறித் தொழில்.

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் நேர்த்தியான கைத் திறமையை – வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத் திறமையை விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க கருத்தல்ல.

மக்களின் தேவைகளை அறிந்து ஆடை தினுசுகளை அடிக் கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொருமுறை கண்காட்சி யில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒருமுறை சேலை தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும் அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலை தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க் கும் வசதி அந்த நெசவாளர்க்கு இல்லை. ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந் திருக்கும் சேலையைப்போல் – தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி உள்ளத்திலிருந்து கிளம்பி விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

இப்படி காலத்தோடு ஒட்டி நாளுக்கொரு தினுசாக அவர்கள் சேலையைத் தயாரிக்கிறார்கள்.

இங்கேயுள்ள கடைகளில் எந்தக் கடைக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். எந்தச் சரக்கைப் பார்த்தாலும் வாங்கவேண்டும் - என்ற உணர்வுதான் வரும். அப்படிப்பட்ட அருமையான கைத்திறமை அந்த ஆடைகளில் இருக்கும்.

நெசவாளர்களுக்குள்ள கஷ்டங்கள் (1) நூல்விலை ஏற்றம் (2) சாயங்களின் ஏற்றம் (3) தேவையான முதலீடு தர பாங்குகளின் தயக்கம் (4) நம் நாட்டுக் கைத்தறியை இறக்குமதி செய்த நாடுகள் கதவைச் சாத்திவிட்டன.

இந்தக் காரணங்களால் நேர்த்தியான ஒரு தொழில், காலகாலமாக பலர் ஈடுபட்ட தொழில்-ஒரு காலத்தில் ரோமானிய நாடு பாராட்டிய தொழில்-பஞ்சத் தொழிலாக மாறிவிட்டது. வேதனை தருவதாக இருக்கிறது. பத்து பைசா தரலாமா? தோளில் சுமந்து விற்கலாமா? கண்காட்சி ஏற்படுத்தி விற்கலாமா? என்று சந்தை தேடவேண்டியிருக்கிறது!

இதற்குக் காரணம் யார்? - என்பதை இந்தக் கூட்டுறவு சங்கத்தினர் அறிவார்கள்.

வெளிநாடுகளில் நமது தூதுவர்கள் இருக்கிறார்கள். வியாபாரத்தைப் பெருக்குவதற்கென்றே சில அதிகாரிகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது. அவர்கள் வெளிநாட்டில் கைத்தறியாடைகள் வாங்கவேண்டிய ஆர்வத்தை பிறருக்கு ஊட்டியிருந்தால் நல்ல சந்தை கிடைத்திருக்கும்.

ஆனால் நான் வெளிநாடு சென்றிருந்தபோது சந்தித்த அதிகாரிகள் - மேனாட்டு உடையை அணிந்து கொண்டிருக்கிறார்கள் அல்லது தேசிய உடை என்று கதரை அணிந்துகொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நிலையில் "காஞ்சிபுரம் சேலை தெரியுமா? திருநெல்வேலி குண்டங்கி தெரியுமா ? புளியங்குடி வேட்டியின் நயம் தெரியுமா? கடையநல்லூர் சரக்கு நல்ல சரக்கு" என்று கூறினல் - அந்தப் பேச்சில் உயிர் இல்லாமல் போய் விடும்!

ஆகவே அவர்களும் கைத்தறியாடைகளை அணிந்து கொண்டு - உலகச் சந்தைகளில் மட்டுமல்ல - ஒவ்வொரு இடத்திலும், கைத்தறிக்குச் சந்தை ஏற்படுத்த வேண்டும்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை எங்களுக்கு மாலையணிவிப்போர் கைத்தறியாடைகளை அணிவித்தால் போதும என்று கூறினேம். முதலில் அது கேலியாகக் கருதப்பட்டாலும், இன்றைய தினம் பல்வேறு கட்சிகளும் அந்த முறையைப் பின்பற்றுகின்றன. இதனுல் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பவில்லை; கைத்தறியாளர் பிரச்சினையை நினைவூட்டவே அந்தமுறை மேற்கொள்ளப் படுகிறது,

டில்லி சென்றிருந்தபோது கூட மற்றவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன, எனக்கு மட்டும் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன. ஏன் என்று கேட்டதற்கு 'உங்களுக்கு இந்த ஆடைகள் தானே பிடிக்கும்?'-என்ருர்கள்.

ஆனல் இதனுல் மட்டும் பிரச்சினைகள் தீராது. நமது மத்திய அரசு உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நிச்சயம் இதற்கொரு வழி பிறக்கும்.

மத்திய அரசுடன் வம்புக்கு நிற்க நான் விரும்பவில்லை. அதனுல்தான் 'நம்ம மத்திய அரசு' என்று பாத்யதை கொண்டாடிக் கூறுகிறேன்.

## மத்திய அரசின் பொறுப்பு.

கோடிக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள் - உண்மையைச் சொன்னல் வதை பட்

டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டில் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்த தாகும்.

ஆனால் அமைச்சர்கள் கைத்தறித் தொழிலில் எவ்வளவு அக்கறை செலுத்தினார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். அமைச்சரின் பெயரைச் சொல்வது அரசியல் நாகரிகம் ஆகாது.

அந்த அமைச்சரிடம் கைத்தறியாளர் பேட்டிகண்டு எண்பதாம் நெம்பர் நூல் வேண்டும் என்று கேட்டதற்கு - "எண்பதாம் நெம்பர் நூல் தரச் சொல்ல இயலாது. எண்பதாம் நெம்பர் நூல் 500 பேல் தானே கேட்கிறீர்கள். நாற்பதாம் நெம்பர் நூல் 1000 பேல் தருகிறேன். நாற்பதும் நாற்பதும் எண்பது தானே; ஐநூறும் ஐநூறும் ஆயிரம் தானே!" என்றாராம்.

கேலி புரிவதற்காகக் கூறவில்லை. கைத்தறியாளர் விஷயத்தில் அரசாங்க அக்கறை எப்படியிருந்தது எனக்கூற விரும்புகிறேன்!

இந்த நேரத்தில் மக்களுக்கும் ஒன்று கூறிக்கொள்வேன்

## தாய்மாரின் உதவி.

நெசவுத் தொழில் இது நாள் நசித்துப் போகாமல் இருக்க —நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்! ஆடவர்கள் எப்படிப்போனாலும் தாய்மார்கள் தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடவர்களைப்போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டாலையும்; நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்

கள் வண்ணாரப்பேட்டையில் தண்டையார்ப்பேட்டையில் வீதி யோரங்களிலோ - குடிசைகளிலோ - கு டி யே ற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை - என்ற ஒரு சொல் லைச் சங்கத் தலைவர் நாச்சிமுத்து கூறினார். அந்தக் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஏற்படவேண்டிய ஒற்றுமை கைத்தறிக் கொள்கை விஷயத்திலும் மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும்.

விசைத்தறியின் போட்டியால் கைத்தறிக்கு ஏற்படும் கஷ்டத்தை நஷ்டத்தை நாங்கள் மட்டுமல்ல - மத்திய அரசும் தாங்க முன்வர வேண்டும்.

## விவாதத்திற்கு அப்பாற்பட்டது தத்துவம்

தத்துவம் எப்போதும் விவாதத்திற்கு அப்பாற்பட்டது. கூட்டுறவு இயக்கம் தேவை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். நடைமுறையில் எல்லா மக்களுக்கும் பயன் தருவதாக கூட்டுறவு இயக்கம் அமைந்தால் எல்லோரும் வரவேற்பார்கள். நடைமுறை இன்றைய தினம் மக்களால் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கூட்டு-உறவு என்ற இரண்டு சொல் சேர்ந்து கூட்டுறவு என்று பெயர் பெற்றுள்ளது. கூட்டு மட்டும் என்றால் லாபத்துக்குத்தான். உறவு என்று இருப்பதால், அது லாபம் அற்று இருக்கிற உறவாகத்தான் இருக்கவேண்டும்.

கூட்டுறவு இயக்கம் சரியாக நடக்க வில்லை என்ற எண்ணம் மக்களிடத்தில் இருக்கிறது. அது இல்லை என்று மட்டும் சொல்ல முடியாது. அந்தக் குறையை நீக்க முயற்சித்தால் ஒவ்வொரு குடும்பமும் பங்கு பெற முன் வருவார்கள்.

ஆஸ்பத்திரி, கல்லூரி போன்ற பல நல்ல காரியங் களுக்கு இந்த இயக்கம் உதவியிருப்பது பாராட்டத் தக்க தாகும்.

நான் சிறியவனுக இருந்த பொழுது எங்கள் ஊரில் இருந்த மத்திய பாங்கு இன்னும் ஒரு மாதத்திற்குத்தான் நடக்கும் என்று பேசிக் கொள்வார்கள். இப்படிப் பல முறை பேசிக் கொண்ட பொழுது வேதாசலம் அவர்கள்தான் ஏற்று நடத்த முன் வந்தார். அவர் சுலபத்தில் எதிலும் ஈடு பட மாட்டார். ஈடுபட்டு விட்டால் தொடர்ந்து பணியாற்றி வெற்றி தேடித்தருவார். அதைப்போல இந்தப் பண்டக சாலைக் கும் அவர் முதன் முதலில் பணியாற்றி இருக்கிருர். நடை முறையைப் பொறுத்துத் தான் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அமையும்-கூட்டுறவு இயக்கம் வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். நடை முறையில் உள்ள சிக்கலை நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

ஒருவரே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தலைவராக இருக்கக் கூடாது என்று முன்பு பேசப்பட்டு பின்னர் அப்போதைய அரசியல் சூழ் நிலையில் அது கைவிடப் பட்டது. எதற்கும் முதல் அணி—இரண்டாவது அணி—மூன்ருவது அணி என்று படை வரிசை இருக்க வேண்டும் அப்படித் தொடர்ந்து அணி கிடைத்தால்தான் ஒரு இயக்கம் நீடித்து நடக்க முடியும்.

வீட்டிலே இருக்கிற 95 வயதான பெரியவர் மகனி டம் சாவியைக் கொடுக்க விருப்பம் தான். என்ருலும் எப்படி நடப்பாரோ என்று பயமாக ! இருக்கிறது என்று சொல்வது போல இங்கே தலைவராக இருப்பவர்கள் எனக்கு போக விருப்பம்தான் ஆனல் பின்னல் வருபவர்கள் எப்படி நடத்து வார்களோ என்று பயமாக இருக்கிறது என்று சொல்லக் கூடாது. ஒருவர் இருக்கும்போது அதற்குப் பிறகு வரவேண் டியவர்கள் அவர்கள் காலத்திலேயே அதற்குரிய பயிற்சியைப்

பெற்றுக் கொள்ளவேண்டும். யாரும் வரலாம் என்று அளவுக்குப் பயிற்சி பெற்று விடவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்திற்கு ஒருவரே தலைவராக இருக்க வேண்டும்—டைரக்டராக இருக்கவேண்டும் என்பதை மாற்றி அவர்கள் தங்கள் அனுபவத்தை மற்றவர்களுக்குத் தர வேண்டும்.

## கடிகாரம் போன்றது கூட்டுறவு இயக்கம்

ஒரு பல் தேய்ந்து போனாலும் சக்கரத்தின் ஓட்டவ குறைந்துவிடும். ஒழுங்காக ஓடிக்கொண்டு இருக்கிற கடிகாரம்போன்றது கூட்டுறவு இயக்கம். ஒரு ஆணி கழன்று விட்டாலும் மொத்தத்தில் பாழ்பட்டுப் போய் விடும். அதனால் கூட்டுறவு இயக்கத்துக்குத் தொடர்புள்ள மத்திய பாங்கு—ரிசர்வ்பாங்கு இவைகளுக்குள்ள கூட்டுறவு எப்போதும் சரியாக இருக்கவேண்டும்.

ஜப்பான் நாட்டில் உணவு உற்பத்தியில் முழு அளவு கூட்டுறவு முறை பயன் படுத்தப் படுகிறது. ஒரு விவசாயிக்கு நிலம் வாங்கவேண்டும் என்றாலும் -- நிலத்தில் விளைகிற தானியத்தை விற்பதாக இருந்தாலும் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தையே நாடுகிறார்கள். அதனால் தான் அந்த நாட்டில் உள்ளவர்கள் இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களாக இருந்தாலும் வளமாக வாழ்கிறார்கள். நான் ஜப்பான் நாட்டுக்குப் போயிருந்த போது அங்குள்ள ஒரு கிராமத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்தேன். 5 ஏக்கர் நிலம் உள்ள ஒரு விவசாயி வீட்டில் மூன்று மோட்டார்கள் வைத்திருந்தார்கள். அவர்கள் நிலத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

பொழுது விடிந்ததும் ஜன்னலைத் திறந்து பார்த்தால் அவர்கள் கண்ணில் படுவது காய்கறித் தோட்டம். பல

துலக்குவதற்குள் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடலாம்.

சிறிய டிராக்டர் வைத்து இருக்கிறார்கள். என்ன விலை என்று கேட்டவுடன் ஒரு புத்தகத்தை திறந்து காட்டி ஒரு பகுதி முன் பணம் கொடுத்து விட்டு மீதியை மாதா மாதம் செலுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் ஈடு பட்டு இருப்பதால் இவ்வளவு அவர்களுக்கு கிடைக்கிறது. நாம் எல்லாத் துறைக்கும் கூட்டுறவு முறையை பயன்படுத்தலாம். பின்னல் போன்று நமக்கு எல்லா இடத்திலும் அமைப்புகள் இருக்கிறது. ஆனால் அதிலே சிக்கல் இருக்கிறது. அறிவாற்றல் உள்ளவர்கள் தங்கள் அனுபவத்தை கூட்டுறவு இயக்கத்துக்கு தந்துதவ முன் வரவேண்டும்.

## பஸ் தொழில் நாட்டுடைமை

ஆட்சிப் பொறுப்பில் அமருவதற்கு முன்பே பஸ் தொழிலை நாட்டுடமையாக்குவோம் என்பதை மக்கள் முன் எடுத்துரைத்து வந்திருக்கிறோம்-ஆட்சிக்கு வந்த பின்னர் சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. யாரிடத்திலும் கசப்புணர்ச்சி கொண்டதால் அரசு இதைச் செய்யவில்லை.

எந்த ஒரு அரசும் தன் வருவாயைப் பெருக்கிட இத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது இயற்கை. மக்களின் தேவைகள் வளர்ந்து வருகின்றன. அந்தத் தேவைகளின் வளர்ச்சிக்கேற்ப வரிகளைக் கூட்டிச் செல்லக் கூடாது. அரசு புதிய வருவாய்களைத் தேடவேண்டும். அத்தகைய ஒரு முயற்சியே இது.

ஆரணிக்குப் புதிய பஸ் விடுகிறோம். இதில் ஏற்கனவே பஸ் விட்டுக்கொண்டிருந்த ராஜகோபால் நாயுடு மிகுந்த

பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்துள்ளார். அரசின் புதிய முயற்சிகள் யாரையும், எந்தத் தொழிலில்உள்ளவர்களை யும் நிலை குலையச் செய்வதற்காக அல்ல. அடிப்படைத் தொழில்கள் நாட்டுடைமையாக இருக்கவேண்டுமென்ற பொதுக் கருத்துக் கொப்பவே இவை செய்யப்படுகின்றன.எந்தத் தொழிலையும் நிலைகுலையச் செய்யும்எண்ணம் ஒருதுளியுமில்லை

எங்களைப் பொறுத்த மட்டில் பஸ் தொழிலில் உள்ள பலர் எங்களுக்கு நெருங்கிய நண்பர்கள்- அவர்களது குறை யை நாங்கள் அறிவோம். இந்த அரசு அவர்களுக்கு அவ சியமானதைச் செய்யும். அவர்களையும் உள்ளடக்கியதே அரசு.

அவர்கள் வேறு துறைகளுக்குச் செல்லும்போது அரசின் முழு ஆதரவும் அவர்களுக்குக் கிடைக்கும். தேவைப்படுகிற சலுகைகள் அளிப்போம்.

சில வட்டாரங்களில் கூறப்படுவதுபோல பகை உணர்ச்சி யால் பஸ்களைப் பறித்து கொள்கிறோம் என்பது அர்த்தமற்றது. இத் தொழிலில் நெடுங்காலமாக ஈடுபட்டுள்ள டி வி எஸ், மகாலிங்கம் போன்றோருக்கு பஸ் தொழில் அவர்கள் நடத்தும் தொழில்களின் வரிசையில் கடைசி இடத்தில் உள்ளதேயாகும்.

அரசு ஏற்றிருக்கும் இத்தொழில் சிறக்க நடந்து, வருவாய் தந்து, நாட்டுக்குப் பயனளிக்க வேண்டும். அரசு இதை எப்படிச் செம்மையாக நடத்தலாம் என்பதற்கு தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் தக்க ஆலோசனைகளைக் கூறி உதவ முடியும்.

தனியார் துறையிலுள்ள தொழிலை சர்க்கார் ஏற்று நடத்தத் துவங்கியதும் அதன் லாபம் குறைந்து விடுகின்ற தென்று ஆண்டு தோறும் கணக்குக் குழுக்கள் சுட்டிக் காட்டுகின்றன. கூறப்படுகிற குறைகளுக்குக் காரணம் இல்லாமலில்லை.

## இங்கிலாந்து நாட்டில்...

அரசின் இந்தத் துறை மேலும் விரிவடையும் போது தனிப்பட்ட பஸ் முதலாளிகளாக இருந்து திறம்படத் தொழில் நடத்தியுவர்களையும் சேர்த்து ஆலோசனைக் குழுக்கள் அமைக் கப்பட்டது. இங்கிலாந்தில் தேசியமயக் கொள்கை அமுலான போது அத்தொழில்கள் சிறப்பாக நடக்க தேசிய முதலாளிகள் குழு அமைக்கப்பட்டது போல இங்கும் அவர்களது. திறனைப் பயன் படுத்த அத்தகைய குழுக்களை அமைக்க வேண்டும். இக்கருத்தை முன்பொருமுறை கோவையில் பேசும்போது நான் குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட நேரத்தில் கைகொடுக்க அவர்கள் முன்வருவார்கள் என்று நம்பலாம்.

இல்லாவிட்டால் தாங்கள் தேடிய பணத்தில் கல்லூரி என்றும் விடுதிகள் என்றும் அறச்சாலைகள் என்றும் நிறுவி யிருக்க மாட்டார்கள். அத்தகைய ஒத்துழைப்பின் உச்சக்கட்ட மாகவே இப்பணிக்கு அவர்கள் அளிக்கிற உதவியுமாகும்

## ஜாதகம் சரியில்லையோ

நல்ல பெண் என்று எல்லோராலும் பாராட்டப்படும் பெண்ணுக்கு, நல்ல கணவன் கிடைக்காவிட்டால் அவளுக்கு ஜாதகம் சரியில்லை என்று கூறுவார்கள்.

அதுபோல் சேலத்து இரும்புக்கும் ஜாதகம் சரியில்லை போலிருக்கிறது ; எனவே தான் வெளிநாட்டு நிபுணர்களா லும், உள்நாட்டு வல்லுனர்களாலும் பாராட்டப் பெற்ற பிற கும் சேலத்தில் இரும்பு ஆலை அமைக்கப் படாமல் இருக் கிறது.

சேலத்தில் இரும்பாலை அமைக்க கடந்த 15 ஆண்டு களாகவே முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்து இருக்கிறது,

இந்த ஆலைக்காகவும், தூத்துக்குடி துறைமுகத்துக்காகவும் தி. மு. கழகம் "எழுச்சி நாள்" கொண்டாடியது.

சேலத்து இரும்பு என்ற புத்தகத்தில் உள்ள தகவலைப் படிப்பவர்கள் "சேலம் இரும்பாலைக்காக நாம் இதுவரை பொறுத்துக் கொண்டிருந்ததே தவறு" என்று உணர்வார்கள். நான் "சேலம் இரும்பாலை வேண்டும்" என்று கேட்பதை சிலர் தவருக எண்ணுகிருர்கள். "டெல்லியுடன் மோத வேண்டும் என்ற நோக்கத்துடன் அண்ணுதுரை இதைக் கேட்கிருர்" என்று கருதுகிருர்கள்.

இது மிகத் தவருன கருத்தாகும். இந்தப் புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் சேலம் இரும்பாலைக்கு நாம் இப்போது எடுக்கும் முயற்சியே போதாது என்று துடித்து எழுவார்கள்.

தமிழக அரசு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் எப்படியும் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும், சேலம் இரும்பாலைத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தைப்பொறுத்தவரை அந்தத் திட்டம் நிறைவேறுமா என்று இருந்த அச்சம் இப்பொழுது அடங்கி விட்டது, டெல்லி சர்க்காரும் தொடர்ந்து உதவி செய்ய சம்மதித்ததன் காரணமாக அங்கே தொடர்ந்து செம்மையாக வேலை நடந்து வருகிறது. எனவே தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவேறும். அது வெற்றி பெற்றே தீரும் என்பதில் சந்தேகமில்லை.

வெளி நாட்டினர் என்னைச் சந்திக்கும்போது சேலம் இரும்பாலையைப்பற்றி ஆச்சரியத்துடன் கேட்கிருர்கள். "இவ்வளவு சிறந்த திட்டத்தை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை" என்று கேட்கிருர்கள்.

அவர்களிடம் இந்த ஆலையை நடத்தும் அதிகாரம் டெல்லியில் தான் இருக்கிறது என்று சொல்ல எனக்கே

கூச்சமாக இருக்கிறது. எனவே அவர்களிடம் “ இன்னும் சில காலத்தில் நாங்கள் அதை நடத்துவோம் ” என்று பதில் கூறி வருகிறேன்.

சேலம் இரும்பாலையை டெல்லி தொடங்க முடியாது என்று அறிவித்து விட்டால் தமிழக அரசே இங்குள்ள தொழில திபர்கள் போன்றோர் உதவியுடன் ஒரு தொழிலமைப்பைத் தொடங்கி அதன் மூலம் அந்த ஆலையை நடத்தலாம் என்று திட்டமிட்டிருக்கிறது. இதையே நான் சமீபத்தில் கூட டெல்லிக்கு எடுத்துக் கூறினேன்.

ஜப்பான் நிபுணர்களும் ஒரு தடவைக்கு நான்கு தடவை யாக “ சேலம் இரும்பாலையை உருவாக்கித் தருகிறோம் ” என்று கூறி இருக்கிறார்கள்.

## மத்திய அரசின் முட்டுக் கட்டை

ஆனால் இந்த முயற்சிக்குக் குறுக்கே நின்று முட்டுக்கட் டை போடுவது டெல்லி தான். அவர்கள் சேலம் இரும்பாலை யை அமைக்க மாட்டோம் என்று திட்டவட்டமாக கூறவும் மறுக்கிறார்கள்.

டெல்லியில் இருந்து இதுகுறித்து அடிக்கடி செய்திகள் வருகின்றன. சேலம் இரும்பாலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரும் என்கிறார் ஒரு அமைச்சர். ஆனால் இன் னொரு அமைச்சரோ நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உண்டா என்றே முடிவு செய்யவில்லை என்கிறார்.

இன்னொருவர் “ நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்புக்கு எவ்வளவு தேவை இருக்கிறது என்று பார்த்து விட்டு சேலம் இரும்பாலையைப் பற்றி யோசிப்போம் !”

இப்படி டெல்லியில் உள்ளவர்களிடையே சேலம் இரும் பாலை குறித்து தடுமாற்றங்கள் இருக்கின்றன. இந்தத் தடுமாற் றம் அவர்கள் அறிந்தே ஏற்பட்டிருந்தால் அதுகண்டிக்

கத்தக்கது. அறியாமல் ஏற்பட்டு இருந்தால் பரிதாபத்திற்குரியது.

எப்படி இருந்தாலும் இந்தத் தடுமாற்றம் ஏற்பட்டது வருந்தத்தக்கது. சேலம் இரும்பாலை ஜப்பான் உதவியுடன் அமைப்பது இயலாத காரியமல்ல.

## விவசாயத் துறைக்கு ஓர் நிறுவனம்

கிர்லோஸ்கர் நீண்ட பல ஆண்டுகளாக மிகுந்த சகிப்புத் தன்மையோடு அயரா உழைப்புடனும் இந்த நாட்டின் விவசாயத்தை ஒரு முற்போக்கான தொழிலாக ஆக்கிட பாடுபட்டிருக்கிருர்கள்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அயல்நாடுகளில் தயாரான என்ஜின்களையே நம்மவர்கள் விரும்புகிருர்கள் என்று சொன்னுர். இதற்குக் காரணம் பழக்கமோ அல்லது மக்களிடையே வளர்ந்து விட்ட மனப் போக்கோ அல்ல; அந்த அன்னிய இயந்திரங்கள் நன்ருகவே பணியாற்றும் என்று அவற்றினிடத்தில் ஏற்பட்டு விட்ட நம்பிக்கையேயாகும். உள்நாட்டுப் பொருள்கள் நூற்றுக்கு நூறு தரமானவை —நன்ருக வேலை செய்யும் என்று மக்கள் அவற்றை நம்பும்படிச் செய்வதொன்றே சிறந்த வழி.

உள்நாட்டில் நம்மவர் பெற்றுள்ள தொழில் நுணுக்க-நிர்வாக-விஞ்ஞான அறிவும் திறனும் நம்மவர் எந்த நாட்டாருடனும் போட்டியிடக் கூடிய அளவுக்கு உயர்ந்துள்ளன. இங்கு உற்பத்தியான இந்த என்ஜின்களில் 99 சதவீதம் இந்தியப் பொருள்களே என்பதையும் அதில் 70 சதவீதம் தென்னகத்தில் சிறு தொழில் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டவை என்பதையும் அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன், இம்மாதிரி உள்நாட்டுப் பொருள்களுக்கு மதிப்பளித்து அவற்றைப் பயன் படுத்திஞல் நாட்டில் சிறு

தொழில்கள் பெருகி நாட்டின் உருவையே மேம்பாடுறச் செய்திடலாம்,

தமிழ் நாட்டின் இன்றைய விவசாயி புதிய முறைகளைக் கையாண்டு விவசாயத்தில் வளம் காணத் துடிக்கிறன் எந்த முறையானாலும் முதலில் மற்றவர் செய்து பார்க்கட்டும்- அப்புறம் நாம் செய்யலாம் என்ற அளவில்தான் அவனது பழமைப் போக்கு உள்ளது.

ஜீவ நதிகள் இல்லாத தமிழ் நாட்டில் நாம் பயிர் பாசனத்துக்கு நிலத்தின் அடியில் உள்ள நீரையே பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் —நிலத்தினடி நீரைப் பொறுத்தமட்டில் நாம் மிக நல்ல நிலையில் வளமுடன் இருக்கிறோம். இந்த வளத்தைப் பயன் படுத்த இத்தகு இறவைப் பொறிகள்-வலுவுள்ள-உறுதியும் பாதுகாப்புமுள்ள-விலை மலிவாகவுள்ளவை நிறையத்தேவை.

## இயந்திர உற்பத்தியாளருக்கு இனிய வேண்டு கோள்

நாட்டுப் புறங்களில் நிலவும் வறுமையை உணர்ந்தவனென்கிற முறையில் இறவைப் பொறிகளை உற்பத்தி செய்வோருக்கு நான் முக்கிய வேண்டுகோள் விடுக்கிறேன் —உங்கள் தயாரிப்புகளின் விலைகளைக் குறைத்திடுங்கள். சில ஆண்டுகளேனும் லாபத்தின் ஒரு பகுதியை இழந்தாயினும் விலை குறைக்க உற்பத்தியாளர்கள் தயங்கக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தி செய்துவிட்டு விலையைக் கூட்டி விட்டால் அவை வெறும் காட்சிப் பொருள்களாகவே இருக்கும். அப்படியில்லாமல் இத்தகைய தொழில் உற்பத்திப் பொருள்கள் பட்டிகள்தோறும் பரவி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் ஆற்றும் உணவு உற்பத்திப் பணியில் பலனளிக்கவேண்டும்.

இவ்வாருன நிலைமை உருவாகிடவும், தமிழ் நாட்டில் தொழில் முன்னேற்றம் தங்கு தடையின்றி ஏற்படவும் —உற்பத்தி அதிகரித்திடவும் தொழில் துறையில் குறைந்தது பத்தாண்டு காலத்துக்கேனும் சச்சரவுகள் இல்லாது தொழில் அமைதி நிலவவேண்டும். தொழில் சச்சரவுகள் கதவடைப்பு என்ற பெயராலோ வேறு எந்த ரூபத்திலோ ஏற்பட்டாலும் அது தொழிலுக்குக் குந்தகத்தையே ஏற்படுத்தும் என்பதால் தொழில் சச்சரவுகளை பத்தாண்டுகளுக்காயினும் ஒதுக்கிவைக்கவேண்டும்.

## தொழில் வளத்தை எடுத்துக் காட்டும் எண்ணெய் நிறுவனம்

நமது நாட்டின் தொழில் வளத்தையும், போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் வகையில் இண்டியன் ஆயில் கார்ப்பரேசன் என்னும் நிலையம் அமைந்திருக்கிறது.

போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியில் விமானப் போக்கு வரத்து முக்கியம் இடம் பெறுகின்றது. அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இந்த நிலையம் இருக்கின்றது—சுத்தமான எண்ணெய், விமானத்தில் நிரப்பப்படுகிறது — வண்டிக்குப் போடுகின்ற எண்ணெயின் சுத்தம் கெட்டால் வண்டி தட்டுப்பட்டுப் போயிடும்-அந்தத் தகவலை வந்து சொல்ல ஆள் இருப்பார்—

விமானத்துக்குப் போடும் எண்ணெய் சுத்தம் கெட்டால் வந்து சொல்ல ஆள் கிடைப்பதரிது. விமானத்துக்குப் போடப்படும் எண்ணெயின் சுத்தமும், அளவும், தரமும் பாதுகாக்கப்படவேண்டும். இது நீண்ட நெடுங்காலமாக வளர்ந்துவரும் மனிதாபிமானத்தினடிப்படையிலும், விஞ்ஞானத்தின் அடிப்படையிலும் அவசியமானதாகிறது.

விஞ்ஞானம் மனித வாழ்க்கையில் நாள்தோறும் புதிய கட்டத்தை அடைந்து வருகின்றது.

இத்தகைய அமைப்புகளில் பணியாற்றுகின்றவர்கள் பிற நாட்டார் கண்டு பாராட்டும் வகையில் தங்கள் தொழில் நுட்பத்திறமையை அளித்து வருகிறார்கள்.

போக்கு வரத்துத் துறை நாட்டின் வளர்ச்சிக்கு அடையாளமாகும்--மின்சாரம் எண்ணெய் இரண்டு துறைகளிலும் நல்ல வேகத்தைப் பெற்றிருக்கிறோம்-நாட்டைத் தொழில் வளமுடையதாக்க -நாம் தேர்ந்தெடுத்துள்ள வழியும், நடைபோடும் வேகமும் நல்ல திருப்தி அளிக்கத்தவையாக இருக்கின்றன.

நாட்டுச் சுதந்திரம் உறுதிப் பட இப்படிப்பட்ட அடிப்படைத் தொழில்கள் அரசுக்குரிய பொதுத் துறையில் இருக்க வேண்டும்.

## சென்னை கண்ட சிறப்பு

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் தொழில்களை நிறுவி நடத்தும் பெருமக்கள் பலர் ஆயிரக் கணக்கில் வந்து குழுமியுள்ள வர்த்தகப் பொருட்காட்சி போல் இதற்குமுன் சென்னையில் நாம் கண்டதில்லை. இனி ஒருநாள் பார்ப்போமா என்பதும் சந்தேகமே.

அண்மையில் சென்னை மாநகரில் அடுத்தடுத்து சிறப்புக்குரிய மாநாடுகள் நடந்துள்ளன. உலகத் தமிழ் மாநாடு நடந்தது; அதை அடுத்து தேசிய ஒலிம்பிக் நிகழ்ச்சிகள் நடந்தன. அதைத் தொடர்ந்து மகத்தான பொருட்காட்சி ஏற்பாடாகியுள்ளது.

இதன் பொலிவை முழுமை யுடையதாக ஆக்கிட தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மனிதகுலமே

இன்னும் முழு நிறைவை நாடித்தானே பாடுபட்டு வருகின்றது. உலக முழுவதையும் எடுத்துக் கொண்டாலும் இன்னும் நிறைவை எட்டாமல்தான் உள்ளது.

இப்பொருட் காட்சியின் அமைப்பாளர்கள் எத்தனை வசதிக் குறைவுக்கிடையே இம்மாபெரும் முயற்சியில் செயலாற்ற வேண்டியிருந்த தெஃபதை நான் நேரில் அறிவேன்.

## உலக வர்த்தகப் பொருட்காட்சி, உயர்சாதனைகளின் தொகுப்பு !

இப்பொருட் காட்சி நம் சாதனைகளின் ஒரு தொகுப்பென்றே சொல்லலாம். நம் ஆவலின் அளவு சாதனைகளின் அளவை மீறியதாகும்.

நாம் காணுகிற இந்த வளமையும் செழிப்பும் கோடிக் கணக்கான நம் மக்களுக்கானதாக இருக்கவேண்டும், அல்லாமல் இச்செல்வச் செழிப்பெல்லாம் ஒரு சிலரின் சுயநல மேம்பாட்டுக்குத் தானென்றால் ஒரு பயனுமேற்படாது. இந்த வளமை மக்கள் வாழ்வை, உரிமை வாழ்வாக — புதுமை வாழ்வாக - முழுமை வாழ்வாக – ஆக்கிட வேண்டும்.

செயலாற்றல் மிக்கவர்கள் நம் தொழிலதிபர்கள், இவர்களைச் செங்கற்கள் என்றால் இவர்களைக் கொண்டு கட்டிடம் உருவாக்கப் பயன்படுகிற சிமிண்டாக உலக நாட்டார் விளங்கிட வேண்டும். சிமிண்ட் என்றுதான் சொன்னேன், உதவி, கடன் என்றெல்லாம் அதை நான் அழைக்கவில்லை.

உலகில் எல்லோரும் வளமைபெற உதவிட வேண்டியது மேம்பாடு அடைந்த நாடுகளின் கடமையாகும். நாடுகள் பல வளர்ச்சி அடையாத ஒரு நிலையில் பொருள்களை ஏராளமாக மேம்பாடு அடைந்த நாடுகள் உற்பத்தி செய்து குவிக்குமானால் அவற்றை வாங்குபவர் யார் ?

இந்தியா போன்ற நாடுகள் வளம்பெற கைகொடுத்துதவ வேண்டும். வெண்டல் வில்கி என்ற அமெரிக்கப் பெருமகன் ஒருலகம் என்று சிந்தித்துக் கருத்தை எடுத்துரைக்கிருர். இதை மனதில் கொள்ளவேண்டும், உலகில் உள்ள இயற்கைவள மனைத்தும் மனித இன முழுமைக்கும் பயனளிக்கும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

செல்வமோ செழிப்போ அவை மக்களால் உணரப்பட வேண்டும், உழைக்கும் தொழிலாளிக்கு உரிய பங்கினை அளித்திடவேண்டும். இவை மறுக்கப்படுகிற எந்த ஒரு அமைப்பையும் முறையையும் உலகம் வரவேற்காது என்ப தோடு சகித்துக் கொள்ளவும் மாட்டாது. அத்தோடு அம் மாதிரி ஒரு முறையை இன்று நம்மால் தாங்கிடவும் முடியாது. அத்தகைய முறை நிலவுமானுல் தொழில் உலகம் துருப்பிடித்து கேட்பாரற்று ஒதுக்கப்படும் உழைக்கும் தொழிலாளருக்கு உரியதை வழங்கிடுங்கள். அவ்வாறு செய்வதன் வாயிலாக எம்போன்ற எளியோருக்கு ஏற்படுகிற சங்கடத்திலிருந்து எங்களுக்கு விடுதலை கொடுங்கள்.

## கட்டைவண்டி நிலையிலிருந்து ஜீப் நிலைக்கு முன்னேற வேண்டும்.

இந்நாட்டைத் தொழில் வளமுடையதாக ஆக்கும் முயற் சியில் தவறுகளைச் செய்திருக்கிருேம். அவற்றைத் திருத்திக் கொண்டு செயல்படுவோம், கட்டை வண்டி நிலையிலிருந்து ஜீப் நிலைக்கு நாம் முன்னேற வேண்டும் என்று ஒருமுறை நேரு சொன்னுர். மக்கள் அந்த நிலையை அடைந்தார்களோ இல்லையோ அதிகாரிகள் ஜீப்புகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

வேளாண்மைத் துறையை வலிவடையச் செய்வதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும், தளராது உழைத்து அதை வலிவுடையதாக ஆக்கிவிட்டோமானுல் நம் தொழில்களுக்குத் தேவையான மூலதனத்துக்கு எவரிடமும் உதவி நாடி நிற்கத்

தேவையில்லை. வேளாண்மை மக்களே உதவிட முன்வருவார்கள். தொழில் முயற்சிகளில் பங்குதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவிப்பார்கள். இதற்குத் துணை செய்யும் வகையில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு வேளாண்மை மக்கள் மீது வரி எதுவும் விதிக்காது விடவேண்டும். ஏனெனில் கிராமப் புறங்களில் விவசாயிகளின் கைகளில் காசு புழங்கத் துவங்கியுள்ளது. பணத்தின் ஓசை கேட்கத் துவங்கியுள்ளது.

இப்பொருட் காட்சியைத் தொடர்ந்து உலக வேளாண்மை பொருட் காட்சியை நடத்திட வேண்டும். தொழிலும், வேளாண்மையும் கைகோர்த்து முன்னேறச் செய்வோம். அதற்கு உலக வேளாண்மைப் பொருட் காட்சியை நடத்துவது உதவும். ஏனைய நாட்டவரெல்லாம் கையாண்ட முறைகளென்ன? எப்படி முன்னேறி வேளாண்மைத் துறையில் வெற்றிகளை ஈட்டினார்கள் என்பதை யெல்லாம் நம்மவர்கள் உணர்ந்திடச் செய்வோம்.

இதேபோல நீண்ட கடற்கரையைக் கொண்டது இந்நாடு. டில்லியில் இருப்பவர்கள் கடலைக் காண ஆயிரம் மைல் பயணம் சென்றால்தான் முடியும். இங்கே அப்படியல்ல. எப்பக்கம் சென்றாலும் கடல் அலை உங்கள் கால்களைக் கழுவும். இத்தகைய கடல் வளமுண்டு. எனவே மீன்பிடித் தொழிலும் ழ பிவிருத்தியடையச் செய்யவேண்டும், அப்படிச் செய்தால் உலகில் பல நாடுகளுக்கு மீன் பதப்படுத்தி அனுப்பும் வாய்ப்பு நமக்கு உண்டு.

இங்கே முன்னாள் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் இருக்கிறார். சேலம் இரும்பைப்பற்றி அவரும் சொல்லுவார், ஆனால் வருத்தத்தோடு சொல்லுவார். நாங்கள் இந்த சேலம் இரும்பைக் குறித்து ஆராய்ந்து அனுப்பினோம். சேலத்துக்கு ஒரு உருக்காலையை அவர்கள் ஏன் வழங்க மறுக்கிறார்கள் என்பதுபற்றி கருத்தைக் கூறும்படி நான் கேட்கமாட்டேன் ஏனெனில் அது அரசியல், அவருக்கானதல்ல, தொழில் உற்

பத்தியில் ஈடுபாடுடைய நீங்கள் சேலம் இரும்பைப் பற்றிய எங்களது அறிக்கையை ஆராய்ந்து நல்லது கெட்டதை அதன் தொழில்-விஞ்ஞான பலாபலன்களைத் தயங்காது விருப்பு வெறுப்புக் கிடமளிக்காது சொல்லுங்கள். இதுவே என் வேண்டுகோள்.

## இந்தியப் பொருளாதாரம் விவசாயத்தின் அடிப்படை

இந்தியப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகவே கொண்டுதான் கட்டப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட நம்முடைய நாட்டு அமைச்சர்கள் ஆஸ்திரேலியாவி லிருந்து கோதுமை வருகிறதா என்று கடலை நோக்கிப் பார்த் துக் கொண்டிருக்கும் நிலமை இருக்கிறது.

உணவுக்காக வெளிநாட்டுக்கு 2 ஆயிரம் கோடி ரூபா யைக் கொட்டிக் கொடுத்திருக்கிறோம். அன்னிய நாட்டுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தவர்கள் ஒரு ஆயிரம் கோடி ரூபாயாவது நம்முடைய நாட்டு விவசாயிக்கு கொடுத்திருந்தால் இப்படி உலகமெல்லாம் பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது!

இந்த உணவுக்காக அன்னிய நாடுகளிடம் கையேந் தும் நிலையைவிட அவமானம் வேறு உண்டா? என்று பண்டித நேருவைக் கேட்டபோது அவரே "ஆமாம் அவ மானம்தான்" என்றார். விவசாயநாடு இந்தியா! அப்படிப் பட்ட நாட்டினர் உலகத்திடம் உணவு கேட்பதைவிடக் கேவலம் வேறில்லை!

இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம்; அதிலே நியாயமிருக்கிறது! கப்பல்கள் வேண்டு மென்று கேட்கலாம் அந்த துறையிலே இன்னும் நாம் தேச்ர்சி பெறவில்லை என்பதால்! ஆனல் சோறு போடு என்ரு அன்னியரிடம் கேட்பது?

## அவல நிலை நீடிக்கக் கூடாது !

தஞ்சையில் மூன்றுமைல் தூரத்துக்கொரு சத்திரம் இருக்கிறது. காணுமிடமெல்லாம் கோவில்கள் இருக்கின்றன —காதில் விழுவதெல்லாம் மந்திர ஒலியாக விழுகிறது. தெருவுக்கு தெரு -திருவிழாக்கோலமிருக்கும் இப்படிப்பட்ட வளம் நிறைந்த நாட்டில் சோறு இல்லை.

அமெரிக்காவிலேயிருந்து ஒரு நிபுணர் தஞ்சைக்கு வருகிறார் என்றால் அவர் அங்கே என்ன சொல்லிவிட்டு வருவார்; "ஐயோ பாவம் தஞ்சையிலே இருக்கிறவர்களுக்கு உணவுக் கஷ்டம்; அதைத் தீர்த்துக் கொள்ள வழி தெரியவில்லையாம் என்றுதான் சொல்லிவிட்டு வருவார், இப்படிப்பட்ட அவல நிலை இன்னும் நான்கு அல்லது ஐந்தாண்டுகளில் அடியோடு நின்றுவிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

விவசாயிக்களுக்குத் திருப்தி ஏற்பட்டாலொழிய—அவர்கள் வாழ்வில் நிம்மதி யேற்பட்டாலொழிய அவர்களின் உழைப்பு வயிற்றுப் பாட்டுக்கு வழி செய்தாலொழிய முன்னேற்றம் அடைந்ததாகக் கூறி விட முடியாது !

மனித சக்திக்குத்தான் முதலிடம் தர வேண்டும். மனித சக்தியை வீணாக்கப்படாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உழைப்பாளர்கள் நொந்த நிலையேற்படாமல் பார்த்துக் கொள்வதோடு அவர்களுக்கு நிலச் சொந்தக்காரர்கள் —முதலாளிகள் ஊதியத்தைத் தாராளமாகக் கொடுக்க முன் வரவேண்டும்.

## சமூக விரோதச் செயல்

சமுதாய ஒழுக்கம் காப்பாற்றப்படவேண்டும். பதுக்கல் என்பது தவறான காரியம். அதை சர்க்காரின் நடவடிக்கை

யினால் மட்டுமே தீர்த்து விட முடியுமென்று கருதக் கூடாது" பதுக்கல் சமூக விரோதச் செயல் என்ற எண்ணம் ஒவ்வொரு வருச்கும் எழவேண்டும்.

இங்கிலாந்து நாட்டில் இரண்டாவது உலகப் போரின் போது சட்டைக்குத் துணி தரப்பட்டதில் சட்டைக்குப் போக மிச்சத்துணி இருக்குமானால் அதை மற்றவர்களுக்குக் கொடுத்துதவினார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக இங்கே நடக்கிறது.

லண்டனில், சண்டை நடக்கும்போது நகரத்துக்காரர்களுக்கு முட்டையே தருவதில்லை. கிராமத்திற்கு மட்டும் தான் தந்து வந்தார்கள். நகரத்திலுள்ளவர்களால் சத்தான வேறு பொருள்களையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் கிராமத்திலுள்ளவர்கள் குறைந்த விலையில் நிறைய பலன், தருவதற்கு ஏற்ற முறையில் முட்டை தரப்படவேண்டும். எனவே நகரத்திற்கு முட்டை இல்லை என்று தெரிவித்தார்கள்

இன்னபொருளுக்கு தட்டுப்பாடு இருக்கிறது என்றால் வசதியுள்ளவர்கள் தங்களிடமிருப்பதை மற்றவர்களுக்குத் தர முன் வர வேண்டும். ஆனால் அதற்குமாறாக இப்போது அவர்களிடம்தான் அவை அதிக அளவில் இருக்கிறது.

"உனக்கும் வேண்டுமா? ஆளை அனுப்பு" என்று சொல்லத்தக்க விதத்திலே நிலைமை இருக்கிறது. இதற்கும் தனித் திறமை வேண்டும். இந்தத் திறமையை விடப் பொது மக்கள் நன்மை பெற வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்.

எந்தப் பொருளுக்கு பற்றாக் குறை ஏற்பட்டு பங்கீடு முறை இருக்கிறதோ அந்தப் பொருள்களால் கள்ள வாணிகமும் பதுக்கலும் ஏற்படுகிறது—இதைத் தடுக்க வேண்டும்.

## உழைப்புக்கு மதிப்புத் தரவேண்டும்

தஞ்சைத் தரணியில் பெரிய கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குப் பணம் உதவியிருக்கிறவர்கள் உயரமான வீட்டிலா குடி இருக்கிறவர்கள் ?

கோயிலுக்கு மதில் சுவர் கட்டப்பட்டிருக்கிறது; அதற்கு உதவியிருப்பவர்களின் வீடுகளில் சுற்றுச் சுவரா இருக்கிறது ?

தேவன் தேவியாருக்கு நகைகளைப் பூட்டி வைக்க உதவுகிறவர்களின் வீட்டில் அதைவிட நகைகளா இருக்கின்றன ? இல்லை தான்; ஆனாலும் பொதுக் காரியங்களுக்கென்று தர்ம சிந்தனையோடு தரப்படுகிறது. இங்கே, கொடுத்தால் அது நமக்குத் திரும்பி வரும். இம்மையில் செய்தது மறுமைக்குப் பயன்படும் என்பார்கள்.

உதாரணமாக உழைப்பாளி நிலத்திலே உழுது கொண்டிருக்கும்போது நிலத்துக்குச் சொந்தக்காரர் வந்தால் "அங்கே வேல முள் இருக்கிறது வராதீர்கள் !" என்று முன்பெல்லாம் எச்சரிக்கை செய்வார்கள்.

இப்போது சொல்லுவானா ? மாட்டான். முள் குத்தட்டுமே — எரியட்டுமே என்று நினைத்துச் சும்மா இருப்பான். பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்போது இல்லை; இந்த நிலை இனி இருக்காது. அதனால் தான் விவசாயிகளைத் திருப்தியோடு வைத்துக்கொள்ள வேண்டும்; உரம் போட்டால் விளையாத நிலம் கூட அவன் உடலிலிருந்து விழும் வியர்வையால் விளையும் !

உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால் தான் உற்பத்தி பெருகும். வீட்டுத் தோட்டத்தில் மாட்டுக் கொட்டகை போடு என்று தொழிலாளிக்குச் சொன்னால் அவன் முணுமுணுத்துக் கொண்டே போவான்; ஆனால் மகளுக்குக்

கல்யாணம் மணப்பந்தல் போடவேண்டும் என்ருல் அவனே முன் வந்து போடுவான்.

'விவசாயக் கூலி பசியோடு போராடுகிருன்' என்று நில உடமையாளர்கள் எழுதி வைத்துப் படித்துப் படித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆத்திரத்திற்குச் சாத்திரமில்லே: பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்று பெரியோர்கள் சொல்வார்கள். ஆகவே உழவர்களைப் பசியின்றிச் செய்து விட்டுப் பாருங்கள், உற்பத்தி பெருகும்.

## டில்லியிடம் போராடுவேன்

உரத்தின் அளவு அதிகமாக - பெருமளவு தரப்பட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேம். உழவர்களுக்காக மத்திய அரசாங்கத்திடம் நான் போராடுவேன்.

அவர்களும் அரசு நானும் அரசைச் சார்ந்தவன் என்ற அரச பரம்பரை எண்ணத்தில் இதைச் சொல்லவில்லே. உரத்தின் விலேயைக் குறைப்பதால் மிகுந்த நன்மை ஏற்படுமென்று தெரிவித் திருக்கிறேன்.

'பாதைகள் இல்லாமல் திண்டாடுகிறேம்' என்ருர்கள் நிலம் பயிராஞலும் பாதை நன்ருக இருந்தால்தான் உற்பத்தியானதை வேறிடங்களுக்குக் கொண்டு செல்லமுடியும். சில நில உடமையாளர்கள் பாதைக்கு விடப்பட்ட;நிலத்தையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்கிருர்கள் - அதிகாரிகளும் இதை விட்டுவிடுவதற்குக் காரணம்; பாதையிலே நெல் போட்டால் விளேயாது நிலத்தோடு சேர்ந்து விவசாயமாஞலும் லாபம் கிடைக்குமென்று விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன்.

பாதைகளே அமைக்க, அதிகாரிகள் தனிக் கவனம் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர்கள் பயிர்களை அழிக்கும் சிறவை யெனும் பறவை யைப்பற்றிக் கூறினார்கள். காட்டிலாகா அதிகாரிகளோடு கலந்து பேசி அப்பறவைகளை அழிக்கலாமா வேண்டாமா என்பதுபற்றிக் கேட்டறிய விரும்புகிறேன்-

அது ஒரு அபூர்வமான பறவை அழிக்கக் கூடாது என்பார்களேயானால் இருக்கின்ற உயிர்களிலேயே மனிதர்கள்தான் அபூர்வப் பிறவிகள் அவர்கள் வாழ வேண்டும்; சிறவை இல்லாவிட்டால் பரவாயில்லை என்றுதான் கூறுவேன். வேறு நல்ல காரணமிருந்தால் அதைப்பற்றி நான் ஆலோசிப்பேன்

பூச்சித் தடுப்பு முறைபற்றி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது தனித்தனியாக முயன்று பண்ணைகளில் பூச்சி மருந்து தெளித்துக் கொண்டிருப்பதை விட நிலப்பரப்பு முழுவதிலும் பூச்சித் தடுப்பு மருந்து தெளிக்க சர்க்கார் தொடங்க வேண்டும் என்று கூறப்படுகிற யோசனை மிகவும் பிடித்திருக்கிறது.

இதற்காக சில எலிகாப்டர்களோ-விமானங்களோ வாங்க வேண்டி யிருக்கலாம்.

அமெரிக்காவில் பூச்சித்தடுப்பு மருந்தை தனியொரு நிறுவனத்தினரே தெளிக்கின்றனர் என்று நான் அறிந்தேன்.

சாகுபடி குறைவு ஏற்பட்டிருப்பதை நீக்க அடிப்படையாக இத்திட்டம் இருந்தே தீரவேண்டும் இதை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் மென்பது எனது விருப்பம்!

பூச்சிகளாலும் — இயற்கையாலும் ஏற்படுகின்ற கோளாறுகளால் அழிவேற்படுவதைத் தடுப்பது விவசாயத்திற்குத் தேவையானது என்பதால் தமிழக சர்க்கார் இம்முயற்சியில் ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிடம் நிரம்பப் பணமிருந்து விவசாயக் கருவிகள், டிராக்டர்கள் வாங்கிக்கொள்ள முடியாமல் சட்டம் குறுக்கிடுகிறது என்று சொன்னார்கள். அப்படி அதற்கெல்லாம் சட்டம் குறுக்கிடுமானால் அதற்கு சட்ட அந்தஸ்தே இருக்

காது! பணத்தைச் செலவு செய்வதை முடக்கும் முறையில் சட்டம் இருக்காது.

டிராக்டர்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடலாமா? என்று என்மனம் துடித்தது. என்றாலும் சட்டத்தைக் கவனிக்க வேண்டியவனாக இருக்கிறேன். 67 மார்ச் 6-ஆம் தேதிக்குப் பிறகு சட்ட திட்டங்களுக்கு மேலும் அடக்கமானவனாக இருக்கிறேன்,

இவையெல்லாம் நமக்கு நடத்த முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பம்பிங்ஸ்கீம் சரிவர நடைபெறவில்லை என்கிறார்கள் இதற்கான முழு விவரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதுகிறேன்.

காவேரி நம் நாட்டில் பாய்கிறது-ஆனால் உற்பத்தியாவது இங்கில்லை.

துள்ளி ஓடும் அழகு நம்மிடம்தான். ஆனால் பொங்கிப் புறப்பட்டு வருவது நம்மிடமிருந்தல்ல. மைசூர் மாநிலம் நாம் தண்ணீர் எடுத்து வருவதற்கு மறுக்கும் என்று நான் கருதவில்லை.

தமிழகம் - இப்போது கேரளம் கருநாடகம் - ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களும் ஒன்றுபட்டு இயற்கை வளங்களைப் பங்கிட்டுக் கொள்ளுவதை ஏற்றுக் கொண்டிருக்கின்றன, ஒப்பந்தங்களில் தகராறுகள் இருக்காதென்றும் நம்புகிறேன்.

கேரளம்—தமிழ்நாட்டுக்கு மிடையே, ஆனை மலையாறு நம் பகுதியில் பாய்ந்து வருகிறது. ஆனால் கேரளத்தில்தான் தேக்கம் இருக்கிறது. ஆனை மலை நீரை எங்களுக்கு விட்டுவிடுங்கள் என்று நம்முடைய இஞ்சினீயர்கள் கேட்கிறார்கள். உடனே கேரளத்து சீப் இஞ்சினீயர் எங்களுக்கு வேண்டும் என்கிறார்.

நம்முடைய மாநிலத்து சீப் இஞ்சினீயரின் கீழிருந்து பணியாற்றியவர் தான் அவர்.

ஆனால் மாநிலங்களின் முதலமைச்சர் நமக்கு நன்மை செய்வதில் நல்ல கருத்தோடு இருக்கிறார்கள்.

கேரளத்து முதலமைச்சரைச் சந்தித்தபோது நான் அவரிடம் "அரிசி கேட்கிறீர்கள் தருகிறோம்; ஆனால் கடலில்போய் வீணாகும் கேரளத்துத் தண்ணீரை எங்களுக்குத் தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

கேரளா அமைச்சர் தருகிறேன் என்று கூறியதாகப் பத்திரிகைச் செய்தியொன்றைப் பார்த்தேன்.

அந்தச் செய்தி, செய்தியாளரின் ஆர்வத்தால் வெளியிட்டதாக இல்லாமல் உண்மையானதாக—ஆதார பூர்வமாக அமையுமானால் — தண்ணீரைப் பெற்றுக் கொண்டு அரிசியை தருவதற்கான பிரச்சினையில் நான் அக்கரை காட்டுவேன்.

தமிழகத்தில் கேரளத்து மக்கள் லட்சத்துக்குமேல் இருக்கிறார்கள். ஆனால் கேரளத்தில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் தான் இருக்கின்றனர். கேரள மக்களுக்கு நாங்கள் இப்போதும் சோறுபோட்டுக்கொண்டிருக்கிறோம் என்று நான் நம்பூதிரிபாட்டிடம் சொன்னேன்.

## அரிசிக்கு தண்ணீர் பண்டமாற்று.

நான் கேரளத்துக்கு அரிசி உதவத் தயக்கம் காட்டமாட்டேன். அதேபோல் தமிழகத்துக்குத் தண்ணீர் தர கேரளம் தயக்கம் காட்டக்கூடாது.

கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் உடனடியாக முடிந்தால் காவேரித் திட்டமே தேவையில்லை. ஆனால் அது உடனடியாக முடிவதாகத் தெரியவில்லை. இதிலே சில சிக்கல்கள்

இருப்பதால் தான் வீராணம் ஏரியிலிருந்தே தண்ணீர் கொண்டு வர இருக்கிறோம்.

தஞ்சை மாவட்டமும் சிதம்பரமும் வீராணத்திலிருந்து நீர் எடுப்பதன் மூலம் பாதிக்கப்படும் என்றார்கள். சிதம்பரம் பகுதியிலேயுள்ள பெரிய மிராசுதார்கள் எல்லாம் சென்னையில் என்னுடன் கலந்து பேசினர் —என்ஜினியர்களுடனும் பேசியதற்குப் பிறகு அவர்கள் திருப்தியோடு தான் சென்றிருக்கிறார்கள்.

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம் என்றால் வீராணத்துக்கு என்று தண்ணீர் கிடையாது. வீராணம் ஒரு பாத்திரம போன்றதே தவிர அதிலே ஊற்றல்ல! அதிலே தண்ணீர் விட்டுத் தேவைப்படும்போது எடுத்துக் கொள்கிறோம். சென்னைக்குக் குழாய்கள் மூலம் எடுத்து சென்னை மக்களுக்குப் பயன் தரச் செய்ய விரும்புகிறோம்.

சென்னை மக்களுக்கு என்றால் அவர்கள் வேறு என்று எண்ணம் எழக்கூடாது. சொல்லப்போனால் சென்னையில் இப்போது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் தங்குகிறார்கள். அண்ணன் இங்கே இருந்தால் தம்பி அங்கே இருக்கிறான். சென்னையின் மூன்றில் இரண்டு பங்கு தஞ்சாவூர்க்காரர்கள் தான் இருக்கிறார்கள்.

நான் காவேரித் தண்ணீரை இப்போது தான் குடித்தேன். இங்கு வரும்போது மட்டும் குடிக்கிறேன். ஆனால் மன்னை நாராயணசாமி அவர்கள் குடிக்கும் தண்ணீரில் முக்கால் பகுதி சென்னைத் தண்ணீராகத்தானே இருக்கிறது.

விவசாயத்துக்குத் துளியும் பாதகமில்லாமல்; தஞ்சை, சிதம்பரத்திற்குப் பாதகம் ஏற்படாமல் வீராணம் ஏரித் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## யாரையும் கெடுக்க மாட்டேன்

ஒருவரைக் கெடுத்து இன்னொருவரை வாழ வைக்க நானென்ன அவ்வளவு பைத்தியக்காரனா ? யாரையும் கெடுக்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கில்லை. ஒருவரின் தேவைக்குப் போக மீதமுள்ளதை மற்றவர்களுக்குத் தந்துதவும் திட்டம் தான் இது !

கருத்தரங்கிலே எடுத்துரைக்கப்படுகிற கருத்துக்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

விவசாயச் செலவு இப்போதிருப்பதைவிடக் குறைய வேண்டும். தேவையான உரமோ, பணமோ தேவையான நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். இவை இயற்கையாகஎந்த விவசாயியிடத்திலும் எழக்கூடிய கருத்துக்களே.

இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு தக்க பரிகாரம் காணப்படுமென்று உறுதி கூறுகிறேன். இதை எக்காலத்தில் –எந்த அளவில் வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமையை எனக்கு வழங்குங்கள். விவசாயிகள் விசாரப் படாதிருக்கும்படியாக அவர்கள்உற்சாகத்துடன் இருக்கும்படிச் செய்வதற்கு நானும் என்னைச் சார்ந்த நண்பர்களும் தயாராக இருக்கிறோம்.

நெல்லின் விலையை உயர்த்தி உதவவேண்டுமென்று கூறப்பட்டது. உதவி என்பது பல உருவிலும் கிடைத்திடலாம். நெல் விலையை உயர்த்துவதொன்றே உதவியாகிவிடாது—விவசாயிகள் விவசாயத்துக்காக வாங்கி உபயோகிக்கும் பண்டங்களின் விலை குறையச் செய்வதால் அந்த உதவியை அளித்திட முடியும். அதை எப்படிச் செய்வதென்பது குறித்து அரசு யோசித்து வருகிறது. அதை நடைமுறையில் கொண்டுவர அனைவரது ஒத்துழைப்பும் தேவை.

# ஆந்திராவும் நாமும்

நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சிலர் கோரினர்.

மத்திய உணவமைச்சர் சகசீவன்ராமே சொல்லிவிட்டாரே இனி ஏன் கேட்கிறீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். அவர் அப்படிச் சொல்லியிருந்தாலும் வேறு சில மாநிலங்கள் நெல்லுக்கான விலையை உயர்த்தி உள்ளன.

ஆந்திரா அப்படி உயர்த்தியுள்ளது. தான் கொள்முதல் செய்யும் அரிசியை கேரளத்துக்கும், மேற்கு வங்காளத்துக்கும் மகாராஷ்டிரத்துக்கும் லாபத்துக்கு ஆந்திரம் விற்கிறது. நாம் அப்படி வெளியில் விற்பதில்லை. நம்முடைய மக்களில் நலிந்த பகுதியினரது தேவைகருதி, அவர்களுக்கு விநியோகிக்கவே நாம் கொள்முதல் செய்கிறோம்.

அதிலும் நாம் எந்த அளவு கொள்முதல் செய்கிறோம். நூற்றுக்கு இருபது பங்கு நெல்லை மட்டுமே அரசு கொள்முதல் செய்கிறது. மீதமுள்ள எண்பது சத விகிதம் உற்பத்தியாளர்களிடமும் அவர்களிடமிருந்து வாங்கிடும் வணிகர்களிடமும் விடப்படுகின்றது. அவை இன்ன விலைக்குத்தான் விற்க வேண்டுமென்று கட்டாயமில்லை.

ரூபாய்க்குப் படி அரிசி என்று திட்டம் போட்டு அதன்படி போடுவதில் இப்போது நெல்லுக்குக் கொடுக்கும் விலையினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி செலவாகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் குறுவை நெல் நடுத்தர நெல்லென்று நிர்ணயிக்கப்படாமல் சட்டத்தில் இந்த நெல்லை முதல் தர நெல் என்று தொல்லி எழுதி வைத்திருக்கிறார்கள். இதனால் அதிக விலை கொடுக்க நேரிடுகிறது. இப்படி அதிக விலை கொடுப்பதால்

நட்டம் ரூ. 17 கோடிவரை வளருமோ என்ற ஒரு அச்சமும் உள்ளது.

## குறைவாக அளந்தால் தலைதப்பாது!

நெல் விலையை அதிகரித்தால் இவர்களால் படி அரிசித் திட்டத்தை தொடர முடியாது—இவ்வளவு நாள் போட்டோம் —இதற்குமேல் முடியவில்லை என்று நாங்கள் (தி. மு. க.) ஆட்சியை விட்டுப் போய்விடுவோம்—அரசியல் லாபம் பெற லாம் என்று நினைப்பவர்கள் இருக்கக் கூடும். அந்த லாபம் நிரந்தரமானதல்ல—சாதாரணமானதல்ல.

படி அரிசி என்பது எங்களோடு போய்விடாது. யார் இனி ஆட்சிக்கு வந்தாலும் அந்தஅளவு போடாவிட்டால் அவர்கள் தலைதப்பாது.நெல்லின் விலை அதிகரித்தால் படி அரிசி திட்டத்துக்கு ஆகின்ற செலவு மேலும் அதிகரிக்கும். இப்போது அரசாங்கம் 8 கோடி அளவுக்கு கிராக்கிப்படி உயர்வு அளித்தது. இப்படி அதிகரித்துக்கொண்டே போவ தால் நாட்டில் பணவீக்கம் தான் அதிகரிக்கும். அப்படி மக்கள் கைக்கு வரும் பணமும் தங்காது.

ஆகையினால் விலைவாசிகள் இறக்கப்படுவதொன்றே உண்மையான வாழ்க்கைத்தர உயர்வுக்கு வழிகோலும் என் பதை உணர்ந்து அரசு எடுக்கும் நற்காரியங்களுக்கு ஒத் துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## தடுத்து நிறுத்தப்படவேண்டும்

விலைவாசிகள் குறையாதவரை வேறு எந்தச் சீர்திருத்தம் செய்தாலும் அது நிலைக்காது. இதை எல்லாம் கருதியே கொள் முதல் நெல்லுக்குப் போன வருடம் கொடுத்ததைக் காட்டிலும் அதிகமாக இந்த ஆண்டு கொடுக்க வேண்டாம் என்ற தீர்மா

னத்துக்கு வந்தோம். பரந்த பொருள் மிகுந்த இந்த நோக்கத்தை அருள் கூர்ந்து உணரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயச் செலவுகளைப் பற்றி இங்கு கூறப்பட்டது. இந்த ஆண்டு செலவு சென்ற ஆண்டு ஆன செலவைவிட எந்த அளவுக்கு எதனுல் அதிகரித்துள்ளது என்று பார்க்கவேண்டும்.

உரவிலை உயர்ந்ததால் செலவு கூடியுள்ளதென்பது உண்மையே. இதர எல்லா அம்சங்களிலும் சென்ற ஆண்டு இருந்ததுபோலவே இவ்வாண்டும் உள்ளது. உரவிலை உயர்வு — அதற்கு நான் மட்டுமே காரணமல்ல — நண்பர் விநாயகமும் ஓரளவு பொறுப்பாளி. விவசாயச் செலவையும் புதிய ரக நெல் விளைச்சலால் ஏற்பட்டுள்ள நல்ல பலனையும் ஒப்பு நோக்கிச் சொல்லுங்கள் — 10 மூட்டை விளைந்த நிலத்தில் இப்போது 30 மூட்டை விளைகிறதல்லவா ? எனவே வரவேண்டிய ஆதாயம் வருகிறதா இல்லையா ? சொல்லுங்கள் — ஆதாயத்தில் வேண்டுமானுல் துண்டு விழலாம் — ஆதாயமே இல்லையென்று உங்களில் யாரும் சொல்லமாட்டீர்கள்.

இந்த ஒரு வாரத்தில் மத்திய அரசு 90 கோடி ரூபாய்க்கு நோட்டுகள் அச்சிட்டுள்ளது. நான் நீண்ட காலமாகவே சொல்லி வருகிறேன் — நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது — என்று சொல்லி வந்திருக்கிறேன். பணம் வட்ட வடிவமானது — உருண்டோடி கீழே விழுகிறவரை ஓடிக்கொண்டே இருக்கும் - காகிதத் தாலான நோட்டும் தங்காது - பறந்துகொண்டே யிருக்கும். எங்கேனும் ஒரு இடத்தில் இதைத் தடுத்து நிறுத்திட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களும் — நிலச் சொந்தக்காரர்களும் தனிக் கவனம் செலுத்தி உணவு உற்பத்திப் பிரச்சனையில் முதலிடம் தந்து உணவு நெருக்கடியைத் தீர்க்க உதவிடவேண்டும். பசிப்பிணி என்ற சொல்லையே தமிழர்கள்தான் கண்டுபிடித்தனர் — பயன் படுத்தினர். எத்தனையோ பிணிகள் இருப்பினும் — தமிழிலக்கியத்

தில் பசியைத்தான் பிணிகளில் கொடியது என்ருர்கள், அது மட்டுமல்ல; பசிப்பிணி மருத்துவர்கள் என்று மன்னர்களை அவர்கள் அழைத்திருக்கிருர்கள். பசியைத்தீர்க்கின்ற காரணத் தால் மன்னர்களை பசிப்பிணி தீர்க்கும் மருத்துவர்கள் என்ற னர். ஆகவே அப்படிப்பட்ட பசிப்பிணியைத் தீர்க்கின்ற மருத்துவர்களாக உங்களை நீங்கள் கருதிக்கொள்ள வேண்டும். ஆகவே எல்லாவற்றையும் விட சிறந்த தொண்டு பசிப்பிணி யைத் தீர்த்து வைப்பது.

பசிப் பிணியைத் தீர்க்கும் பிரச்சினைக்கு வேறெந்தப் பிரச்சினையும் ஈடாக முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் பண உதவி செய்திட வேண்டும் என்று கேட்கலாம். சர்க்கார் பணத்தை உண்டுபண்ணும் இயந்திர மல்ல. பணத்தை உண்டு பண்ணுவதுகூட வடநாட்டிலே உள்ள அரசினர்தானே தவிர தமிழகம் இல்லை.

சலுகைகளைத் தரவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட சலுகைகளை எந்தெந்த வகையில் பெறலாம் என் பதைச் சிந்திக்க வேண்டும்.

கருத்தரங்கிலே கருத்துக்களை எடுத்துச் சொன்ஞர்கள். அதில் எவற்றையுமே நான் மறுத்துச் சொல்லவில்லை. சொல் லப்பட்டக் கருத்துக்களெல்லாம் நியாயமானவை. எல்லாம் உண்மை நிரம்பியனவாகவே இருக்கின்றன. இதனை நான் மறுக்கவோ – மறைக்கவோ போவதில்லை.

நியாயத்தை நிறைவேற்றித் தர இயலும். அப்படி நிறை வேற்றுவதற்குக் கொஞ்சம் காலம் தேவை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து பேசி இவற்றைத் தீர்ப்பதில் நான் பெரு மளவுக்கு அக்கறை காட்டுவேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங் களைப்பற்றிக் குறிப்பிடும்போது தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துச் சொன்ஞர்கள். நான் அவற்றை மெத்தக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். உள்ளபடியே அவைகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப் படவேண்டியது தான்.

## காமராசர் கூறிய உறுதிமொழி !

முன்னாள் முதலமைச்சர் காமராசர் பாகல்மேட்டிலே மாநாடு கூட்டி, பாகல்மேடு சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைத் தந்தேன் - தந்து விட்டேன் என்று உறுதி கூறினார். ஆனால் சட்ட மன்றத்திலே நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது அத்திட்டம் குறிப்பிடப் படவில்லை. "என்ன, திட்டத்தை தந்து விட்டதாகச் சொன்னீர்களே நிதி நிலை அறிக்கையில் அதற்கான குறிப்பையே காணோமே" என்று கேட்டபோது "அது நிறுத்தி வைக்கப்பட்ட்து" என்றார்.

இப்படிப்பட்ட கசப்பான அனுபவத்தைத் தெரிந்துவைத்திருக்கிற காரணத்தால் கூறுகிறேன். தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளைச் சந்தித்துவேளாண்மைத்துறை அமைச்சரையும் - பொதுப்பணி அமைச்சரையும் - உணவு அமைச்சரையும் கலந்து பேசி எவ்வளவுவிரைவாகத் தீர்த்து வைக்க முடியுமோ அவ்வளவு விரைவத்கத் தீர்க்கிறேன் என்று நிதியமைச்சர் என்ற முறையிலும் முதலமைச்சர் என்ற முறையிலும் இதற்கான வழிவகைகளை ஒரு துளியும் தயக்கம் காட்டாது கண்டுபிடிக்கிறேன்.

உடனடியாகச் செய்யக்கூடிய ஒன்று உர விநியோகத்திலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பது. உர விற்பனை தனியார்களாலும் கூட்டுறவாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நான் கவனம் செலுத்திக் கூட்டுறவாளர்களைக் கலந்து பேசினேன். ஆதாயக் குறைவு வந்தாலும் குறைந்த விலைக்கு உரத்தைத் தரவேண்டும் என நான் கேட்டுக் கொண்டதை அவர்கள் ஏற்றுக்கொண்டு குறைந்த விலையில் கூட்டுறவு மூலம் உரம் தருவதற்கு ஒத்துக் கொண்டுள்ளார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலச் சொந்தக்காரர்களும், பெருங்குடி மக்களும், தொழிற் சங்கச் செயலாளர்களும் இணைந்து செயலாற்றி உற்பத்தியைப் பெருக்கித்தர ஏற்பாடு செய்து இந்தியாவுக்கே வழிகாட்டியாக விளங்கவேண்டும்.

## நஞ்சைத் தஞ்சை நல்வழி காட்டும்

சிற்பத்துறையிலும்-சங்கீதத் துறையிலும் முன்னோடியாக விளங்குவது போல - விவசாயத் துறையிலும் முன்னோடியாக விளங்கி இந்தியாவுக்கு வழிகாட்ட வேண்டும்.

## தரிசு நிமுலம் விளை நிலமாகலாம்

அரசே தரிசு நிலங்களைத் தன் செலவில் பண்படுத்திய பிறகு அந்நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு 10, 15 ஆண்டுக் குத்தகையில் விடும். அந்நிலத்தைப் பண்படுத்திட ஆன செலவை ஒவ்வோர் அறுவடையின் போதும் சிறிது சிறிதாக அரசுக்கு அந்த விவசாயி செலுத்தி வர வேண்டும். முழுத் தொகையும் செலுத்தியான பிறகு அந்நிலத்தை விவசாயிக்கே சொந்தமாக்கிவிடும். இவ்வாறு ஒரு திட்டமிட்டுச் செயலாற்ற இருக்கிறது தமிழக அரசு!

புதுக்கோட்டை அருகே குடுமியாமலைப்.பகுதியில் சீரணியினரால் பயிரிடத்தக்க நிலமாக மீட்கப்பட்டு வரும் நிலத்தில் முதல் ஆயிரம் ஏக்கரில் குத்தகைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளைக் குடியேற்றலாமா என்றும் யோசித்து வருகிறேன்.

மத்திய உணவமைச்சர் சகசீவன்ராமிடம் இது பற்றி பேசினேன். எதெற்கெடுத்தாலும் டில்லியிலா கேட்பது என்கிற காங்கிரசுக்காரர்கள் இருக்கிறார்கள், முடிந்தால் சொல்லட்டும் - டில்லியிடம் கொடுக்க வேண்டாமென்று அவர்கள்

சொல்லியும் - அதையும் மீறி கிடைக்க வேண்டியது எனக்குக் கிடைத்துக் கொண்டுதானிருக்கிறது,

பாடுபடுகிற உழவனுக்கு நிலம் சொந்தமானால் அவன் நிமிர்ந்து நடப்பான். அவன் நெஞ்சத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எனவே பண்படுத்திய பின் ஒப்படைக்கும் இத்திட்டத்தை வகுத்துச் செயலாற்ற விருக்கிறோம். இன்னும் 10, 15 ஆண்டுகளில் பி. ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும் எம். ஏ பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம்.

"நான் உழைக்கிறேன் அதிலிருந்து பலன் பெறுகிறேன்." என்று சொல்லத்தக்க விதத்தில் படித்த பட்டதாரிகளும் உழைப்பார்கள்.

## படித்தவர்களும் விவசாயத்தில் ஈடு படவேண்டும் !

நூற்றுக்கு நூறு பேர் படிக்க வேண்டும்-படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால் கிடைக்கின்றபலன் மிக அதிகமாக இருக்கும். படிப்பறியாத விவசாயி உரம் கேட்டால் அதிகாரி களிடமிருந்து வருகின்ற பதில் வேறாக இருக்கும். போய் முத்துசாமியை அழைத்துவா என்பார்கள். அதையே ஒரு பி. ஏ. பட்டதாரி! கேட்டால்-கேட்கும் குரல் மட்டுமல்ல; கிடைக்கும் பலனும் வேறாக இருக்கும்.

படித்தவன் உழவேண்டும்-உழுபவன் படிக்கவேண்டும் - படிப்பான் அறிவுப்பசியைத் தீர்க்க-உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

நமக்கு நல்ல ஆறுகள் இல்லை என்றார்கள். உண்மை தான். பாலைவனமாக உள்ள இஸ்ரேல் நாட்டில் தண்ணீரை யும் உரத்தையும் பயிர் செய்வோரையும் தாங்கிக் கொள் கிற அளவுக்கு நிலம் இருந்தால் போதுமென்று பயிர் செய் கிறார்கள்.

தஞ்சையிலே வயலா-குளமா என்று எண்ணும்படியாக நீர் பாய்ச்சப் படுகின்றது. கோவையிலே தண்ணீரைத் தெளித்தது போல தெளித்தே விவசாயம் செய்கிருர்கள். தஞ்சையைக் காட்டிலும் கோவையிலே கண்டு முதல் அதிக மாகிறது. இவைகளெல்லாம் கருத்தரங்கில் ஆராயப்பட வேண்டும்.

கருத்தரங்குகளில் பெரும் பேராசிரியர்களையும் ஆராய்ச்சி யாளர்களையும் அழைத்து உரையாற்றச் செய்தால் நல்ல பலன் ஏற்படும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டு மென்ருல் தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும். பாசன வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். இனி நாம் புதிதாக அணை கட்டுவதற்கும் இடமில்லை.

பூமிக்கடியில் இருக்கும் நீரை வெளிக்கொண்டு வந்து பயன் படுத்த வேண்டும். சர்க்கார் வருமானத்தில் எவ்வளவு செலவு செய்ய முடியுமோ அவ்வளவு செலவையும் செய் வோம். ஆனல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கும் பணத்தைக் கொண்டு மட்டும் இது போன்ற சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறை வேற்றிவிட முடியாது.

தமிழ் நாட்டில் 13 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. சோழர் காலத்திலும்-பல்லவர் காலத்திலும் - வெள்ளைக்காரர் கள் காலத்திலும் வெட்டப்பட்ட ஏரிகள் 13 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன.

வட ஆற்காடு—செங்கற்பட்டு மாவட்டங்கள் ஏரிப் பாசனத்தையே பெரிதும் நம்பி இருக்கின்றன.

இந்த ஏரிகளை யெல்லாம் ஆழப்படுத்தினல்—அகலப் படுத்தினல் தான் ஏழைகளின் வீட்டில் பால் பொங்கும்.

## ஏழை முகத்துப் புன்னகை ...

வெளியுலக விளம்பரத்தை விட ஏழை முகத்தில் புன் னகை வெளிப்படுவதைத் தான் இந்த சர்க்கார் பெரிதும் விரும்புகிறது !

மக்கள் இது கேட்டால் ஆச்சரியப் படுவார்கள்—பக்த வத்சலம் அறிந்தால் வருத்தப் படுவார். இந்த ஏரிகளில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பழுது பார்க்கப் பட்ட ஏரிகளின் எண்ணிக்கை 1500 தான் ! மிச்சம் 12 ஆயிரத்து 500 ஏரிகள் பழுதுபார்க்கப் படாமலிருக்கின்றன. இவற்றை யெல்லாம் பழுது பார்ப்பதற்குள்-பழுது பார்க்கப்பட்டவை சீர் குலைந்து விடும்.

நாங்கள் பதவிக்கு வந்த பிறகு இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் பெரும்பாலான ஏரிகளையும் புயலால் உடை பட்டுள்ள மதகுகளையும் பழுது பார்க்க இருக்கிறோம்.

ஆகவே இதற்கெல்லாம் சேர்த்து 10 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் நிதிதர வேண்டும் என்று முதலமைச்சர் கள் மாநாட்டிலேயே நான் கேட்டுக் கொண்டேன்.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்துக்கு 10 கோடி ரூபாப் ஐந் தாண்டுத் திட்டத்திற்குத் தரப்படும் தொகை நீங்கலாகத் தரப்படுமானல்—சில ஆண்டுகளுக்கு உர விலையை ஏற்ரு மலிருப்பார்களானல் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதால் ஏற்படும் நஷ்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியும்.

அரிசி விலை குறைக்கப்பட்டால்-மற்ற மற்றப் பொருள் களின் விலைவாசி குறைந்தால் பஞ்சப்படி குறையுமே என்று சொல்லுகிருர்கள் அப்படிப்பட்டவர்களைக் கேட்கிறேன்.

"எங்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வேண்டாம்—பழைய விலைக்கே வாங்கிக் கொள்கிருேம்" என்று எழுதிக் கொடுக்கட்டுமே-தாராளமாக ஏற்றுக் கொள்கிறேன்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதற்கு சர்க்கார் பல் வேறு சங்கடங்களைத் தாங்கிக் கொள்வதற்குக் காரணம்—அரிசி விலை குறையுமானால் மற்ற பொருள்களின் விலை வாசியும் குறையும் என்று நம்புகிறேன்.

மற்ற பண்டங்களின் விலைகளும் ஏழை மக்களின் வாழ்க்கைக் கேற்ற வண்ணம் கட்டுக்குள் அடங்கும். இது சமூகம் முழுவதற்கும் பலனளிக்கும் !

அப்படி ரூபாய்க்குப் படி அரிசி என்று போடுவதால் சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டம் 8, 9 கோடியிலிருந்து 10 கோடிவரை ஆகலாம் என்று அதிகாரிகள் புள்ளி விவரம் தருகிறார்கள்.

## விவரம் தெரியாதவர்களல்ல நாங்கள்

சங்கடங்களை யெல்லாம் தாங்கிக் கொண்டாகிலும் மக்களுக்குள்ள கஷ்டங்களைப் போக்கவேண்டும்—அவர்களுக்கு உணவளிக்கவேண்டு மென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்

நீந்தக் கற்றுக் கொள்வதென்றால் தண்ணீரில் தான் முடியும் ! நீந்தக் கற்றுக்கொள்கிறேன் என்று வெற்றுத் தரையில் விழுந்து முயற்சி செய்தால் எப்படி முடியும் ?

நீந்தக்கற்றுக் கொள்ள தண்ணீரில் இறங்கித்தான் ஆக வேண்டும் ! இதனால் சிரமங்கள் ஏற்படத்தான் செய்யும் மூச்சுத் திணறும்—மூக்கிலும் வாயிலும் தண்ணீர் புகுந்து விடும் ! சுழலில் சிக்கிக்கொள்ளாமலும் இருக்கவேண்டும் என்ற பாதுகாப்போடும்தான் இடுப்பிலே கயிற்றைக் கட்டிக் கொண்டு கரையிலே ஒரு ஆளையும் நிறுத்திவைத்து விட்டுத் தான் தண்ணீரிலே இறங்கியிருக்கிறோம்—இத்தனை சங்கடங்களையும் ஏற்றுக் கொண்டால்தான் நீந்தக் கற்றுக்கொள்ள முடியும் !

மூழ்கிப் போகும் அளவுக்கு விவரம் தெரியாதவர்கள் இன்றையதினம் ஆட்சிக்கு வந்து விடவில்லை !

## விவசாயிகள் முற்போக்கானவர்

தமிழகத்தில் விவசாயிகள் முற்போக்கானவர்கள். நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள் கணக்கைப் போட்டு நமக்கு சொல்லுகிறார்கள். எத்தகைய நவீனவிவசாய முறையானாலும் அவற்றை ஏற்று செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. 'மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள நாம் தடைகள் எல்லாவற்றையும் மீறி முன்னேறிவிட்டோம் என்றும் தமிழ் நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலமென்றும் ஓர் நினைப்பு பரவியுள்ளது. இத்தகைய நினைப்பு ஏற்பட ஒருவகையில் நாமும் காரணம். எனினும் இது சரியல்ல. இது நீக்கப்படவேண்டும்.

நாம் முன்னேற்றப் பாதையில் செல்கிறோம். ஆனால் முன்னேறிவிடவில்லை, கடந்த ஆண்டு நாம் பெற்ற நல்ல விளைச்சல் தொடர்ந்து இருக்குமா என்பதை நாம் பொறுத்துப் பார்க்க வெண்டும். ஆக நமக்கு அவகாசம் அளித்து மத்திய அரசும் மற்றவர்களும் நம்மோடு துணைநிற்பார்களானால் விவசாயத்துறையில் சிறப்பான வெற்றிகளை நாம் தேடிட முடியும்.

தஞ்சை, திருச்சி, வடஆற்காடு, செங்கல்பட்டு, நெல்லையில் கணிசமான பகுதி ஆகியவற்றில் நெல்விளைச்சல் முழு அளவுக்கு நடைபெறுமானால் தமிழகத்தின் இதர மாவட்டங்களை பருத்தி, கரும்பு, நவதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிக்கென ஒதுக்கிடலாம். ஆனால் துரதிருஷ்டவசமாக நிலைமை அவ்வாறில்லை. ஒரு சில இடங்களில் ஒரு ஏக்கருக்

குப் பாசனத்தை ஏற்படுத்த ரூ 8 ஆயிரம் வரை செலவழிக்க வேண்டியிருந்ததாக அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள். இவ்வளவு நிறைய செலவழித்து அதற்கேற்ப வரியைப் போட்டால் அதை நம் விவசாயிகள் தாங்குவார்களா ? எனவே அரசு தன்னாலானதைச் செய்கிற அதேநேரத்தில் பூமிக்கடியில் கிடைக்கும் நீரை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தும் படி ஊக்கு விக்கவேண்டும்.

பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீர் தாதுச்சத்துக்கள் குறைந்தது என்று விவசாயிகளிடத்தில் நிலவுகின்ற அவ நம்பிக்கையைப் போக்க வேண்டும்.

ஒருகாலத்தில் இரசாயன உரத்தைப் பற்றிக்கூட இப்படித்தான் கருதப்பட்டது. இன்று அந்த நிலைமையில்லை. கலப்பு உரமா அதை நாங்களே தயாரித்துக் கொள்கிறோம், தேவையானதைமட்டும் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள் என்ற அளவுக்கு விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது.

தீவிர சாகுபடித் திட்டமென்பது தஞ்சைமாவட்டத்துக்கு மட்டும் உரியதாக இருந்தால் போதாது. மாநில முழுவதும் தஞ்சையை எதிர்பார்ப்பதென்பதும் இயலாது. எனவே படிப்படியாகத் தீவிர சாகுபடித் திட்டம் மற்ற மாவட்டங்களுக்குப் பரவ வேண்டும். இம்மாநிலம் உபரிமா நிலமாக வேண்டுமென்றால் அது ஒன்றே வழி !

தமிழ்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க சிறிய நீர்ப்பாசனத்திற்கு ரூ, 20 கோடி செலவிட வேண்டுமென்று கூறி அதற்கான திட்டம் முழுவதையும் அழகுபட அச்சேற்றி புத்தகவடிவில் கொண்டு போய் நான் டெல்லியில் கொடுத்து வந்தேன். ஆனால் இன்று வரை அதற்கான பதிலே வரவில்லை. எந்தத் திட்டமானாலும் அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். தேவையானதைக் கொடுத்தால் உற்பத்திசெய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அரசு தான் நடத்திப்பார்க்க விரும்பும் எத்தகைய மேம்பாடானதிட்டமாயினும் தமிழகத்தில் வந்து நடத்தட்டும், வெளிமாநிலங்களில் ஒரு காரியத்தைச் செய்ய 100 ரூபாய் செலவாகுமானுல் இங்கே அதே காரியத்தைச் செய்ய 80 ரூபாய் தான் செலவாகும்.

## முன்னுள் முதல்வரின் முறையீடு

முன்னுள் தமிழக முதலமைச்சர் குமாரசாமிராஜா இதை அப்போதே வலியுறுத்தினுர். வடக்கே கொட்டும் பணத்தில் ஒரு பகுதியைத் தமிழகத்திற்குக் கொடுங்கள், உணவு உற்பத்தியைக் குவித்துக் காட்டுகிறேம் என்று கூறியிருக்கிருர்.

தமிழகத்தில் ஏற்பட்ட புதிய ஆட்சி அதன் முதல் ஆண்டிலேயே இரண்டு புதிய வரிகளின் மூலம் இந்த பத்து மாதங்களில் ரூ. 6 கோடி அளவுக்கு அதிக வருவாயைத் தேடியுள்ளது. இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளன, இன்னும் இரண்டு கோடி ரூபாய் சேரும்.

இந்த அளவுக்கு ஈடாக வேனும் மத்திய அரசு மானியம் கொடுத்து உதவக் கூடாதா ? இந்த நாட்டிற்கு ஒருங்கிணைந்த தேசிய தண்ணீர்த் திட்டம் தேவை என்று இங்கு பேசப்பட்டது. இதேகருத்தை நீண்ட நெடுநாட்களுக்கு முன்பாகவே டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் தெரிவித்தார். நாள்தவறினுலும் ஒருமைப்பாட்டைப் பற்றிய பேச்சு தவறுவதில்லை, ஆனுல் நதிகளின் நீரை இணைப்பது பற்றி இதுவரை யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

கிருஷ்ணு கோதாவரியைப் பெண்ணுற்றுடன் இணைத்தால் வரண்டு கிடக்கும் தமிழ் நாட்டுப் பகுதிகள் பலமடையும். மேற்கே ஓடி கடலில் விழுந்து வீணுவதாகச் சொல்லப்படும் ஆறுகளின் நீரும் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடப்பட்

டால் நல்ல பலனையளிக்கும். ஒருமைப்பாடு பற்றி பேசும் மத்திய அரசு இதை கவனத்தில் வைக்க வேண்டும்.

விவசாயிகள் அதைச் செய்ய வேண்டும் இதைச் செய்ய வேண்டும் என்று கூறி விட்டு அவர்களுக்குத் தேவையான தைத் தராவிட்டால் அது பசியைக் கிளறிவிட்டு விட்டு சோறு போடாமல் பட்டினி போடுவதற்கு ஒப்பாகும்.

வர்த்தக பாங்குகள் விவசாயக் காரியங்களுக்காக கடன் வசதியளிக்க முன்வர வேண்டும். விவசாயக் காரியங்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று வர்த்தக பாங்கி ஒன்றின் நிர் வாகத்தினர் தெரிவித்தனர். முதலில் செங்கற்பட்டு மாவட் டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனாக எட்டரை சத விகித வட்டியின் பேரில் நிதியுதவி செய்யலாம் என்று அவர் கள் சொன்னார்கள். இதை நமது விவசாயிகள் ஏற்றுக்கொள் வார்களா ?

குறைந்த வட்டிக்கு 15. அல்லது20 ஆண்டுகள் தவணை கொடுத்தும் கடன் வசூலாவதில்லையே, வர்த்தக பாங்கியின ருடைய நிபந்தனைக்கா உட்படப் போகிறார்கள்? என்றாலும் இவையெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம்.

எப்படியேனும் விவசாயிகளுக்குத் தேவையான கடன் சிக்கலில்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காகச் சில திட்டங் களைத் தயாரித்து வருகிறோம். சர்க்கார் மட்டுமே அல்லாமல் வேறு நிதி உதவி நிறுவனங்களும் விவசாயக் காரியங்களுக்காக கடன் வழங்க வகை செய்து சில விதிகளைச் செய்ய இருக்கி றோம்.

## உதவிகிடைத்தால் அயல் நாட்டுக்கும் அரிசி அனுப்பலாம்

தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால் இன்னும் இரண்டு ஆண்டு

களில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு நேர்த்தியான சிலரக அரிசி வகைகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய் வோம்.

விவசாயத்துறையில் நாம் பெற்றுள்ள வெற்றி எதிர்காலத் தைப்பற்றி நம்பிக்கை யூட்டுவதாக இருக்கிறது. அதிக விளைச்சல் தரும் ரக நெல், நெல் விளைச்சல் பெரிதும் உர விநி யோகத்தைப் பொறுத்தது, நமக்கு உரப் பற்றாக்குறையாக இருக்கிறது. இங்கு அதிக அளவில் உரத் தொழிற்சாலைகள் துவக்கப்படுமானால்—தேவைக் கேற்றபடி உரம் வழங்கப்பட் டால்—இந்த முன்னேற்றம் நீடிக்குமாறு செய்யமுடியும். இந்த முன்னேற்றத்தை குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்தால்—இரண்டு மூன்று ஆண்டுகளி தமிழ் நாட்டைப் பொறுத்த வரை தமிழ்நாடு உபரி மாநிலமாக விளங்கும். நமது நாடு முழுவதுமே உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக ஆகும் நிலைவருமென்றே நான் எதிர்பார்க்கிறேன்.

இயற்கை மாறுபாடுகள் இருக்கவே இருக்கின்றன. இதனை இரைப்பு இயந்திரங்கள் மூலமாக பாசன வசதிகளைச் செய்வ தன் மூலம் சமாளித்திடாமல் பூமிக்கடியில் நமது நாட்டில் பெருத்த நீரோட்டம் இருக்கிறது. இந்த நீரோட்டத்தை யந்திர இரவை மூலம் குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக் கொணர்ந் தால்—இயற்கையின் பாதக விளைவுகளைக் கூட சமாளிக்கலாம். உண்மையில் விவசாய விளை பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவே நமது நாடு ஆக முடியும். ஏனெனில் நமது நாடு விவசாய நாடு. நாம் இதனையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.

மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL